www.tamilarangam.net

இந்த வெளியீடு நீதியான சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான நடுவத்தின்(CJPD) கூட்டுறவுடன் தயாரிக்கப்பட்டது

சுதாகரன் நடராஜா
லக்சி விமலராஜா

# மாற்றுநிலைப்படுத்தலின் அரசியல்

## தமிழீழ விடுதலைப் புலிகள் / 2002–2006ல் சிறீலங்காவில் இடம்பெற்ற அமைதி முயற்சிகள்

**பேர்கோவ் வரிசை**

எதிர்ப்பியக்கம் / விடுதலை இயக்கங்கள் மற்றும் மாற்றுநிலைபடுத்தும் அரசியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதாகரன் நடராஜா
லக்சி விமலராஜா

# மாற்றுநிலைப்படுத்தலின் அரசியல்

## தமிழீழ விடுதலை புலிகள் / 2002–2006ல் சிறீலங்காவில் இடம்பெற்ற அமைதி முயற்சிகள்

ஆசிரியர்கள்:
வெர்னிக் டீடுட் மற்றும் டேவிற் புளூம்பீல்ட்

திட்டத்திற்கான நிதியை தாராளமாக வழங்கிய சர்வதேச அபிவிருத்திக்கான ஆய்வுமையம் (ஒட்டோவா, கனடா) மற்றும் போர்ட் பவுண்டேசன் (நியூயோர்க், அமெரிக்கா) என்பனவற்றிற்கும், ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிய அமைதிக்கு ஆதரவுதரும் பேர்கோவ் பவுடேசன் (BFPS) மற்றும் எங்களுடைய நிறுவன பங்குதாரர்களான தென்னாபிரிக்க கேப்டவுண் நீதிக்கும், மீளிணக்கத்திற்குமான நிறுவனம் என்பனவற்றிற்கு பேர்கோவ் ஆய்வுமையம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

www.tamilarangam.net

**சுதாகரன் நடராஜா, லக்சி விமலராஜா**
மாற்றுநிலைப்படுத்தலின் அரசியல்: தமிழீழ விடுதலைப் புலிகள் / 2002-2006ல் சிறீலங்காவில் இடம்பெற்ற அமைதி முயற்சிகள்

மூலம்:
ஆங்கிலம்
ISBN 978-3-927783-90-4

மொழிமாற்றம் (தமிழ்):
இளங்கோ

தமிழ்ப்பிரதி விநியோகம்:
நீதியான சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான நடுவம் (Centre for Just Peace and Democracy)

பேர்கோவ் மாற்றுகை நிரை இல.4
© Berghof Research Center for Constructive Conflict Management 2008

பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு:
Berghof Research Center for Constructive Conflict Management
Altensteinstraße 48a
D–14195 Berlin, Germany
Te. +49/(0)30 - 8441540

இணையத்தளம் ஊடாக:
http://www.berghof-center.org/

Centre for Just Peace and Democracy
info@cjpdonline.org
www.cjpdonline.org

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்

அறிமுகம் பக்கம் 04

1. மாற்றுநிலைப்படுத்தும் அரசியல் பக்கம் 09

2. சனநாயகம் பற்றியதொரு கேள்வி பக்கம் 13
   2.1 சிறீலங்காவில் சனநாயக பொறிமுறையின் தோல்வி பக்கம் 13
   2.2 சட்டபூர்வத்தன்மையைக் கவனத்தில் எடுத்தல் பக்கம் 16

3. சிறீலங்கா மோதுகை பக்கம் 18
   3.1 முன்னைய நிகழ்வுகள் பக்கம் 19
   3.2 தமிழீழ விடுதலைப் புலிகள் (புலிகள்) பக்கம் 21

4. தேர்தல் களம் பக்கம் 23
   4.1 பெரும்பான்மையின் கொடுங்கோன்மை பக்கம் 23
   4.2 கோட்பாட்டு இடையூறு பக்கம் 24
   4.3 அரசியல் மற்றும் அரசமைப்பு இடையூறுகள் பக்கம் 26

5. அரசுக்குள் - அரசு பற்றிய மேலோட்டம் பக்கம் 29

6. புலிகளும் 2002 அமைதி வழிமுறைகள் பக்கம் 33
   6.1 சட்டபூர்வத்தன்மை பற்றிய கேள்வி பக்கம் 34
   6.2 இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை (ISGA) பக்கம் 36

7. சர்வதேச பாத்திரம் பக்கம் 40

முடிவுரை பக்கம் 46

உசாத்துணை நூற்பட்டியல் பக்கம் 48

இணைப்பு(1) : வரலாற்று அட்டவணை பக்கம் 52

எழுதியவர்கள் பற்றிய குறிப்பு பக்கம் 55



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அறிமுகம்

சிறீலங்காவில் இடம்பெறும் மோதுகையானது உலகில் மிகவும் முடிவற்றதும் பன்முகம் கொண்டதுமான மோதுகையாகும். " சிறுபான்மையினரின் பொருளாதார, அரசியல், பண்பாட்டு நிராகரிப்பும், மனக் குறைபாடுகளும் ஒரு வன்முறை தழுவிய கலகமாக - பெரும்பான்மை இனக் குழுவினரை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக பார்க்கப்படும் அரசுக்கு எதிராக வெடிக்கின்றது"(ஓர்யூயலா 2003:198) என்பதை ஏற்றமுறையில் விபரிப்பதற்கான மோதுகை இதுவாகும். நீண்டகாலமாக கொந்தளிப்பில் இருந்துவந்த தமிழ் சமூகத்திற்கும் சிங்கள மேலாதிக்கவாத அரசுக்கும் இடையேயான பதற்றம் பல்வேறு போராளிக்குழுக்களுக்கும் சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையேயான வெளிப்படையான மோதலாக 1980களில் வெடித்தது. இந்தக் காலப்பகுதியிலிருந்து மோதுகை தீவிரமடைந்ததுடன் சிக்கல்வாய்ந்ததாக வளர்ச்சி கண்டது. பல்வேறான தமிழ் எதிர்ப்பியக்கங்களுக்கு அகத்தே ஆரம்ப காலத்தில் இடம்பெற்ற மோதல்களின் பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகள் (புலிகள்) முதன்மை தமிழ்த்தரப்பாக தோற்றம்பெற்று மரபுரீதியான இராணுவ வலுவினையும், உள்ளடக்கம் மிக்க சிவில் நிர்வாக கட்டமைப்புக்களையும் இலங்கைத் தீவில் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியில் நிறுவினார்கள். மோதுகை ஆரம்பமானதன் பிற்பாடு பேச்சுக்கள் மூலம் இதனைத் தீர்ப்பதற்கு ஐந்து தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2002 முதல் ஆரம்பமான நோர்வே அனுசரணையுடன் கூடிய சமாதான நடவடிக்கைகள் உட்பட அனைத்தும் கைவிடப்பட்டதாகவும், ஒவ்வொரு தடவையும் மோதல்கள் தீவிரமான மூர்க்கத்துடன் மீள ஆரம்பமாவதாகவும் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த கற்கையானது, 2002ல் சர்வதேச ஆதரவுபெற்று நோர்வே அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியதன் பின்னர் புலிகளின் குறிப்பிடத்தக்களவு இராணுவம் சாராத நடவடிக்கைகளை - போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்தல் என்கின்ற விரிவான கோணத்தில் - பரிசோதிக்கின்றது. சிறீலங்கா போன்ற முடிவற்ற மோதுகைகளை மாற்றுநிலைபடுத்துவது அல்லது தீர்ப்பது ஒரு ஆயுதம் தரித்த அரசியல் இயக்கம் உருவாகும் - வளரும் மற்றும் செயற்படும் சமூக, அரசியல் சூழலினை அறிந்து கொள்ளாமல் விளங்கிக் கொள்ள முடியாது. உதாரணமாக 'அரசு அல்லாத தரப்பு' எனும் முகப்பு புலிகளுக்கு பிரயோ-கிக்கப்படும் போது அது மோதுகையினதும், அந்த நிறுவனத்தினதும் முக்கியமான பக்கத்தினை மறைக்கப் பார்க்கின்றது. புலிகள் தெளிவானதும், வரைவு செய்யப்பட்டதுமான பிரதேசத்தினையும் - குறிப்பிடத்தக்களவு அரச கட்டுமானங்களையும் இந்த பிரதேசங்களில் கொண்டதுமான நிறுவனமாகும். ஒரு 'அரசுக்குள் அரசு' (கிங்ஸ்டன் 2004) இந்த உள்ளடக்கத்தின் மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க சொல்லாடலாகும். மேலும் நாங்கள் இதனை உள்ளே மேலும் நெருக்கமாகப் பார்க்கும் போது இது புரியும். பொதுவாக புலிகளை 'ஆயுதக் குழு' அல்லது 'அரசு அல்லாத தரப்பு' என்கின்ற விபரிப்புக்களற்ற முகப்புகளுக்கு அப்பால் சென்று இந்த மோதுகையின் விசாலமான பரிமாணத்தில் வேறுபடுத்தி புரிந்து கொள்வது சமாதானத்தினை முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமானதாகும். இதுவே இந்த கற்கையின் பிரதான உட்கிடக்கையாகும். இந்த புரிதலுக்கு ஒரு வகுக்கப்பெற்ற ஆய்வு அணுகுமுறை தேவை என நாங்கள் வாதிடுகின்றோம். துண்டுபட்ட அணுகுமுறைகள் (உதாரணமாக, சிறீலங்காவின் தேர்தல்முறை திறனை மட்டும் கவனம் செலுத்துவது - வரலாற்றுப் போக்கினை அல்லது எல்லைமீறி சென்றுவிட்ட சிறீலங்கா அரசியலை அல்லது நிலவும் சூழலை கவனத்தில் எடுக்காது) வெறுமையானதாக இருக்கும். தீர்க்கமுடியாத மோதுகைகள் முற்றுமுழுதாக கற்கப்படல் வேண்டும்.

மேலும், இராணுவ இயக்கத்தின் அரசியல் மாற்றுநிலைப்படுத்தலை ஆய்வு செய்கையில் நாங்கள் வெறும் சொற்களை பிரயோகிக்கும் அணுகுமுறையினை கையாளமுடியாது. நாங்கள் முக்கியமான நெறிமுறைகளையும், பரிமாணங்களையும் அரசியல் வன்முறையை பாவிப்பது தொடர்பாக (அல்லது குறிப்பிட்ட வடிவம் அல்லது வன்முறை செயல்கள்) எதுவித தார்மீக நிலையும் எடுக்காமல் ஆய்வுசெய்ய வேண்டும். நாங்கள் புலிகள் அமைப்பினுள் முடிவுகளை எடுக்கும் நெறிமுறைகள் பற்றியும், குறித்த வியூகத்தினை ஏன் பின்தொடர்கின்றனர் என்பதற்கான தர்க்கத்தினையும் - உள்நோக்கினையும் வழங்க முயல்கின்றோம். மேலும், எவ்வாறு புலிகளின் நடவடிக்கைகளும், கொள்கைகளும் மோதுகை பொறி முறையினுள் செயற்படும் பிறதரப்புக்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் எவ்வாறு ஒன்று மற்றொன்றை மீள்நிரப்புகின்றது என்பதையும் பார்க்கின்றது. இந்த மீள்நிரப்பலானது பகைமையான அழிவு தரும் வட்டத்தினை உருவாக்குகின்றது. அது மீளவும் தொடங்கிய வன்முறை பள்ளத்தினுள் வீழ்வதற்கு உதவு கின்றது. இது நோர்வே அனுசரணை உருவாக்கிய ஆரம்பக்கட்ட நம்பிக்கைகளின் தொடர்ச்சியாக வருகின்றது.

www.tamilarangam.net

இந்த கற்கை ஒருபகுதியாகவுள்ள ‘எதிர்ப்பு - விடுதலை இயக்கங்கள் மற்றும் அரசியல் மாற்றுநிலைப் படுத்தல்’ என்னும் திட்டம் எந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் கற்கப்படுகின்றதோ அதன் பார்வையில் மாற்றுநிலைப்படுத்தல் உட்பட்ட அரசியல் நெறிமுறைகள் பற்றி பரிசோதிக்க முயல்கின்றது. இந்த ஆய் வறிக்கை வரலாற்றை விபரிப்பது என்பதற்கு அப்பால் சென்று விசாரணையின் தத்துவவியல் மூலங்களையும், வடிவங்களையும் விமர்சனரீதியாக பரிசோதிக்கின்றது. இரண்டு முக்கிய ஊகங்கள் அனேகமான மாற்று நிலைப்படுத்தல் எனும் கருத்துருவம் தொடர்பான வரைவிலக்கணங்களின் அடிநாதமாக திகழ்கின்றது என்பதிலிருந்து இதனை ஆரம்பிக்க வேண்டும். முதலாவது, எதிர்ப்பு / விடுதலை இயக்கங்கள் அரசியல் - இராணுவ இயக்கங்களாக போராட்டங்களை ஆரம்பித்து, பலதரப்பட்ட அளவில் வன்முறைகளை பிர யோகித்து, ஈற்றில் முற்றிலும் அரசியல் போராட்டங்களுக்குள் மாற்றுநிலைப்படும். இரண்டாவது, பிரதான அரசியல் நீரோட்டத்துடனும், தேர்தல் நெறிமுறைகளுக்குள்ளுடனுமான ஈடுபடலே இத்தகைய மாற்றுநிலைப் படுத்தலினைக் கட்டமைக்க உதவிடும். மோதல் மாற்றுநிலைப்படுத்தல் எனும் விசாலமானதட்டில் ஆயுதம் தரித்த அரசு அல்லாத தரப்பினை மாற்றுநிலைப்படுத்தல் எனும் கருத்துருவம் பதியம் வைக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமான சமாதான உருவாக்க முயற்சிகள் மூன்றுவகை மாற்றீடுகளை ஈடுபடுத்துகின்றது. போரிலிருந்து சமாதானத்திற்கான பாதுகாப்பு மாற்றீடு, சர்வாதிகாரத்திலிருந்து சனநாயகவழிப்பட்ட அர-சுக்கான அரசியல் மாற்றீடு, சமூக - பொருளாதார மாற்றீடுகள் (டி சீவு 2001.16). இவை அனைத்தும் சுயமான நீடித்து நிற்கும் சமாதானத்தின் அத்தியாவசிய உள்ளீடுகளாயினும் இந்த கற்கையானது இரண்டாவது பிரேரிப்பான சர்வாதிகாரத்திலிருந்து சனநாயகத்திற்கு மாற்றீடு செய்வது என்பதை விமர்சனபூர்வமான ஆய்வுக்குட்படுத்துகின்றது. சிறீலங்காவின் இனத்துவ அரசியல்[1] அரசியல் மோதுகைகள் அரசின் தோல்வி கண்ட சனநாயக கொள்கைகளிலிருந்து தோற்றம் கண்டது என்று நாங்கள் வாதிடுகின்றோம். குறிப்பாக சுனில் பஸ்டியன் குறிப்பிட்டது போன்று இருதலைக்கொள்ளி போன்ற சனநாயகம் (பஸ்டியன் மற்றும் லக்காம் 2003:1) என்பதை குறிப்பிடுகின்றோம். ‘இது குடிமக்கள் அன்னியப்படுவதனைக் கடந்துவர உதவும். மேலும், இது நல்ல அரசாங்கநெறிமுறைக்கு உதவும். ஆனால், இது சமூக சமத்துவமின்மையை மீளவலுப்படுத்துவதுடன் தேசிய சிறுபான்மையினரை ஒறுப்புக்குட்படுத்தவும் உதவும். இது அரசாங்க விடயங்களில் பொதுமக்கள் பங்கு பற்றலை தடுப்பதற்கும், அழுத்தத்திற்குட்படுத்தவும் உதவிடும்.’ (ஐபிற்)

இதுதவிர, அண்மைக்காலங்களில் ஆயுதம்தரித்த - அரசு அல்லாத தரப்பினர்களின் மோதுகை மாற்றுநிலைப்படுத்தல் மற்றும் அரசியல் மாற்றுநிலைப்படுத்தல்கள் சனநாயகம், வன்முறையல்லாத செல்நெறி, அரசியல் பன்மைத்தன்மை போன்ற பெறுமதியானவற்றை சுற்றியதான அர்த்தத்தை (எப்போதும் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும்) குறிப்பிட்டு எடுக்க வேண்டியதாகவுள்ளது. இந்த தாராளவாத எண்ணங்கள் அதன் அர்த்தத்திலும், நடைமுறையிலும் தவிர்க்கமுடியாதவிதத்தில் விவாதிக்கப்படும் விடயமாகும். பேர்கோவ் ஆய்வு சுருக்கமானது மாற்றுநிலைப்படுத்தல் என்பதன் வகுக்கபட்ட நோக்கமானது ‘வன்முறையற்ற, சமனான சமூகங்களை கட்டியெழுப்பல்’ என்கின்றது. எவ்வாறாயினும் இந்த உரத்தநோக் குள்ள இலக்குக்கள் வெவ்வேறு இடங்களில் தனித்துவமானவிதத்திலேயே நடைமுறைபடுத்தப்படுகின்றது. மாற்றுநிலைப்படுத்தல் பற்றிய பொதுவான அறிவிற்குட்பட்ட எண்ணவடிவமானது வெளிப்படையானதும் - உட்படுத்துவதுமான முரண்நிலைகளான வன்முறை - அமைதி, சர்வாதிகாரம் - சனநாயகம், பன்மைத்தன்மை - தேசியவாதம் என்பது போன்றனவற்றினைக் குறிப்பதாகும். இது இன்றுள்ள உலக ஒழுங்கில் வெளிப்படும் தாராளவாத கரிசனைகளிலிருந்து ஊற்றெடுப்பது மட்டுமல்ல அவை ‘நல்லவை எதிர் கூடாதவை‘ எனும் பரஸ்பரம் குறிப்பான (நாங்கள் இதனை மிகவும் ‘இலகுவானதாக்கப்பட்டது’ என்று விவாதிக்கின்றோம்) முரண்நிலையாகும். குறிப்பாக ‘அரசியல்’ மற்றும் ’வன்முறை’ எனும் சொற்கள், ஆயுதம் தரித்த அரசுசார்பற்ற தரப்பினர்களின் மூலோபாய நோக்குடன் தொடர்புபட்டு, பரஸ்பரம் குறிப்பானதும் - முரண்பாடானதுமாகும். பேர்கோவின் சுருக்கம் அவதானித்தது போல், ‘அரசு அல்லாத ஆயுதக்குழுக்கள்’ எப்போதும் ‘ஆரம்பத்தில் வன்முறை அமைப்புக்கள், அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தினை வளர்த்தெடுத்து தம்மை வன்முறை அற்ற, அரசியல் தரப்பாக வளர்த்தெடுக்கின்றனது’ என விபரிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், விடுதலை - எதிர்ப்பு இயக்கங்கள் வரைவிலக்கணப்படி இயல்பில் அரசியல் தரப்பினர் வரித்துக்கொண்ட அரசியல் இலக்குகளை வன்முறைவழியில் முன்னெடுக்கின்றனர். ஆயினும் இந்த முக்கிய பக்கமானது இன்று அதிகரித்துவரும் பயங்கரவாதம் தொடர்பான கருத்தாடல்களால் இடம்பெயரவைக்கப்பட்டுவிட்டது.

---

[1] சிறீலங்கா உள்ளடக்கத்தில், இனத்துவ மோதுகை என வகைப்படுத்துவதே பெரும்பாலான கற்கையாளர்களால் விரும்பப்படும் சொல்லாடலாகும். எனினும், இனத்துவ மோதுகை எனும் சொல்லாடலானது போதாததும் - தவறாக வழிசொல்வதுமாகும். எனெனில், இது தொடக்கநிலை நோக்குகளை அர்த்தப்படுவதுடன் மோதுகையின் அடிக்கோடான அரசியல்த்தன்மையை வெளிக்காட்டுவதில்லை. இனத்துவமோதுகை உருவாகுவதன் காரணம் அங்கு பலஇனக்குழுக்கள் உள்ளமையே என்று முடிவுசெய்வது அர்த்தமற்று திரும்பத்திரும்பச் சொல்லப்படும் கருத்துருவமாகும். இனத்துவ மோதுகைகளானது மனிதஉரிமைகள், நீதி, அரசியல் பங்குபற்றல், பொருளாதார விநியோகம் என்பனவற்றினை மையத்தே கொண்டதொரு வடிவத்தினைக் கொண்டதல்ல. மாறாக, குர் அல் சரியாக சுட்-டிக்காட்டியது போல் ’இந்த விடயங்களின் வெளிப்படுகையானது இனத்துவம் கொண்டது. ஏனெனில், அதுவே அன்னியப்படுத்தலுக்கும், ஒடுக்குமுறைக்குமான அடிப்படையாகும்.

மேலும், ஆயுத மோதுகையை மாற்றுநிலைப்படுத்தல் என்பதற்கான இந்த அர்த்தப்படுத்தல்களில், அரசியல் பற்றிய புரிதலானது மட்டுப்படுத்தப்பட்டதாகவும், பிரத்தியேகமானதாகவும் உள்ளது: தேர்தல் அரசியல். இது ஆயுதம் தரித்த இயக்கங்களிடம் நேரிடையான எதிர்பார்ப்பைக் கொண்ட குறிப்பான நடவடிக்கைகளையும், நிறுவனமாறுதல்களையும் 'விரும்பத்தகுந்த' மாற்றுநிலைப்படுத்தல் இடம்பெறுவதற்கு முன்னரே எதிர்பார்க்கின்றது. இவை வன்முறையைக் கைவிடல், தேர்தல் அரசியலில் நேரிடையாக ஈடுபடல் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றது. எனினும், தாங்கள் ஒடுக்குமுறையாளர்கள் எனக்கருதும் அரசுகளிடமிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடும் ஆயுத இயக்கங்களைப் பொறுத்தவரை, அந்த எதிர்பார்ப்புக்கள் சிக்கலானவை. குறிப்பாக, மோதுகையின் கட்டமைப்பு காரணங்களை தீர்ப்பதற்கான நிரந்தர தீர்வு எட்டப்படாததற்கு முன்னர் இதனை வலியுறுத்துவது பிரச்சனையானது. இந்தக்கடின நிலையானது குறித்த எதிர்ப்பியக்கம் தனது சிவில் நிர்வாகத்தினை அரசிடமிருந்து 'விடுதலை' செய்யப்பட்ட பகுதிகளில் அமுல்படுத்தினால் மேலும் இறுக்கமானதாகிவிடும். சிறீலங்கா தொடர்பான விடயத்தில் மற்றுமொரு முக்கிய ஊகிப்பு ஆயுதம் தரித்த அரசு அல்லாத தரப்பினரின் அரசியல் மாற்றுநிலைப்படுத்தல் பற்றிய புரிதல்களில் தங்கியுள்ளது: அது என்னவெனில் சனநாயக அரசியலும் - தேர்தல் முறைகளும் கௌரவமானமுறையில் ஏற்கனவே இயங்குகின்றது. அல்லது ஆயுத இயக்கங்கள் மாற்றுநிலைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவில் இந்த சனநாயக அரசியல் தமிழர்களின் குறைகளை பல தசாப்தங்களாக தீர்ப்பதில் தோல்விகண்டமையாலும், அத்துடன் இணைந்த அரசமைப்பில் சீர்திருத்தத்தினை செய்வதற்கான தகுந்த பொறிமுறையில்லாமையாலும், அரசின் வன்முறை தீவிரமடைந்ததாலுமே ஆயுத எதிர்ப்பியக்கத்திற்கு முதலில் அழைத்துச் சென்றது என்று விவாதிக்கலாம்.

இந்தக் கற்கையானது அரசியல் மாற்றுநிலைப்படுத்தலின் விரக்திநிலையிலிருந்து புலிகளின் நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும், 2002ற்குப் பிற்பட்ட காலகட்டத்தினை பிரதானப்படுத்தி பரிசோதிக்கின்றது. அப்போது தொடக்கம் தீவிரமாக சர்வதேசமயப்பட்ட, நோர்வே தலைமையிலான இணக்க முயற்சிகள் அர்த்தமுள்ளதாக ஆரம்பமானது[2]. புலிகளின் பிரகடனப்படுத்தப்பட்ட இலட்சியமானது தீவில் தமிழர்களின் வரலாற்றுபூர்வமான தாயகமான வடக்குக்கிழக்கில்[3] தனித்துவ ஆட்சியாக இருந்தது. மேலும் புலிகள் மேலே விபரித்த இரு விடயங்களையும் எதிர்கொண்டனர். சுதந்திரத்திற்காகப் போராடும் விடுதலை இயக்கமாக புலிகள் சிங்கள பெரும்பான்மை அரசின் சட்டபூர்வத்தன்மைக்கு எதிரான தமிழர்களின் சவாலை பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். மேலும், அரசுவிடமிருந்து பெரும்பகுதி நிலப்பரப்பை கைப்பற்றி புலிகள் சமாந்தரமான சிவில் நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்கியுள்ளனர். இந்த இரு கோணங்களும், முன்னர் அவதானித்தது போன்று, மேலே கூறிய ஒரு சீரான மாற்றுநிலைப்படுத்தல் தொடர்பாக புலிகளை கையாள்வதில் குறிப்பான சவால்களை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், போரட்டகாலம் முழுவதும், குறிப்பாக 2002ற்குப் பிற்பாடு புலிகள் பலபரிமாணம் கொண்ட வன்முறை சாராத அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர் என இந்த ஆவணம் விவாதிக்கின்றது. புலிகளின் மாற்றுநிலைப்படுத்துவதற்கான ஆற்றல் போதியளவு பரிசோதிக்கப்படாமையானது தேர்தல் அரசியல் எனும் குறுக்கலான பார்வையூடு அணுகப்பட்டதன் விளைவு என இது விவாதிக்கின்றது (இணையான ஆயுதக் களைவு மற்றும் படைகளை கலைத்தல் விடயங்கள் உட்பட).

2002ற்குப் பிற்பட்ட புலிகளின் இராணுவம் அல்லாத நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்காக இந்த ஆவணம் இரு பிரதான வாதங்களை முன்வைக்கின்றது. முதலாவதாக, அரசியல் மாற்றுநிலைப்படுத்தல் தொடர்பான பிரபலமான கருத்துருவமானது மட்டுப்படுத்தப்பட்டது - அத்துடன் பரிந்துரைப்பது. போதியளவு இராணுவ இயங்கலுக்கு அப்பாற்பட்டதும் மேற்பட்டதுமான நடவடிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. இந்த நடவடிக்கைகளே அரசியல் மாற்றுநிலைப்படுத்தலின் இயல்பான நிபந்தனைகளை தாங்கிநிற்கும் வெகுமானங்களை தழுவிநிற்பதும் - செயற்படுத்துவதுமாகும். இரண்டாவதாக, மாற்றுநிலைப்படுத்தலுக்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்திற்குள் கூட தனித்து ஆயுதக் குழுவின் நடவடிக்கைகளை மட்டும் பிரதானப்படுத்துகின்றதன்மை - எந்த உள்நாட்டு, சர்வதேச சூழலில் (அரசியல் மற்றும் சமூக பொருளாதாரம்) அது இயங்குகின்றது என்பதிலிருந்து விடுபட்டு - மாற்றுநிலைப்படுத்தலுக்கான பிரதான (கட்டமைப்பு மற்றும் பிற) தடுக்கும் காரணிகளை அங்கீகரிப்பதில் தோல்வி காண்கின்றது. இதனால், இதனை நோக்கிய இயக்கத்தின் பிரதான முன்னெடுப்புக்களும் அங்கீகரிக்கப்படாது போகின்றது. வெளித்தரப்பினர் ஆயுத

[2] 1999 முதல் கீழ்அளவிலான நோர்வே அனுசரணை முயற்சிகள் ஆரம்பமாகின. நோர்வே முயற்சிகள் 2000 ஆரம்பத்தில் முறைப்படி தொடக்கப்பட்டது. ஆனால், 2001 டிசம்பரில் கொழும்பில் அரசு மாறும்வரை தொடர் பகைநடவடிக்கைகள் மத்தியில் அது முக்கியத்துவம் பெறவில்லை.

[3] இந்தோ-லங்கா உடன்பாடு(யூலை 1997). இந்தியாவும், சிறீலங்காவும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையானது 'வடக்கு கிழக்கு பிராந்தியங்கள் சிறீலங்கா தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம்'(பிரிவு1.4) என்பதை அங்கீகரித்தது. மேலும், இந்த உடன்பாட்டு அங்கீகாரத்தின் அடிப்படையில் வடக்குக்கிழக்கு இணைக்கப்பட்டு ஒற்றையான நிர்வாக தரப்பாக்கப்பட்டது (பிரிவு2.1). இந்த உடன்பாடு 2006ல் இணைப்பினை ரத்துச்செய்ததன் மூலம் சிறீலங்காவினால் ஒருதலைப்பட்சமாக முறிக்கப்பட்டது. எனினும், தமிழர் போராட்டத்தின் அரசியல் சொல்லாடல் பண்புகருதி வடக்குகிழக்கு என்பதை தீவில் தமிழர்களின் பிரதேசங்களைக் குறிக்கப் பயன்படுத்துகின்றோம்.

இயக்கத்தின் குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக மிகக் குறுகலான (போதாமையுள்ள) கவனத்தினைச் செலுத்துவதன் பின்விளைவுகளால் சர்வதேச பெறுமானங்களை தழுவிக்கொள்வதற்கான இயக்கத்தின் முயற்சிகள் அங்கீகாரம் பெறத்தவறுகின்றதுடன் - அவற்றினை தொடர்வதற்குத் தேவையான சர்வதேச ஆதரவை பெற தவறுகின்றன என இந்த ஆவணமானது விவாதிக்கின்றது. அத்துடன், உண்மையில், தனது நிர்வாக கட்டமைப்பில் சர்வதேச பெறுமானங்களை வலுப்படுத்துவதற்கான புலிகளின் முயற்சிகளிற்கு சர்வ-தேசம் ஆதரவு வழங்காதமை சிறீலங்காவில் மோதல்களை மாற்றுநிலைப்படுத்தல்களுக்கான ஆற்றல் கவனிக்காமல் விடப்பட்டமைக்கு உதவியது. இதுவே நோர்வே தலைமையிலான இணக்க முயற்சிகள் உடைவுகாண்பதலிலும் பங்களித்தது என்று விவாதிக்கலாம். சுருக்கமாக, அரசு சார்ந்து நிற்றல் எனும் கோட்பாடு மற்றும் புலிகளின் மாற்றுநிலைப்படுத்தலுக்கான விருப்புத் தொடர்பான சர்வதேச சந்தேகமும் இணைந்த சர்வதேச கொள்கைகள்[4], இயக்கத்தின் முக்கியமான முன்னகர்வுகளுக்கு ஆதரவு கொடுத்து - அங்கீகரிப்பதில் தோல்வியிற்கு இட்டுச்சென்றது. இதன் விளைவாக, சுயதிருப்தி தரும் எதிர்வுகூறல்கள் சர்வ-தேச சமூகத்தினதும், புலிகளினதும் அணுகுமுறைகளை கடுமைப்படுத்தியது. நாங்கள் இந்த முக்கிய விடயத்தினை விரிவாக பின்னர் ஆராயவுள்ளோம். இது சர்வதேச சமூகம் புலிகளை மாற்றுநிலைப்படுத்துவதில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றது என்பதை இங்கு குறிப்பிடுகின்றது. இந்த கற்கையானது சிறீலங்காவின் ஆயுத மோதுகையானது எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மை இனக்குழுக்கள் மீதான பெரும்பான்மை ஒடுக்குமுறையின் நேரிடையான விளைவுமட்டுமல்ல அது இனப்பதற்றம் உருவாகிய போது அதனை தீர்ப் பதற்கான உள்ளக பொறிமுறையின் தோல்வியும் கூட என்பதை பிற்பகுதியில் விபரிக்கின்றது. சிறீலங்கா போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலை அடைவது தொடர்பில் சர்வதேச சமூகம் பாதுகாப்பு, குறிப்பாக தனிமனித பாதுகாப்பினை[5], உறுதிசெய்வதில் முக்கிய பங்குவகிக்கின்றது. மேலும் ஸ்திரத்தன்மை மற்றும் பேச்சுக்கள் மூலம் எட்டப்படும் எந்த உடன்படிக்கை நீடித்துநிற்பதையும் உறுதிசெய்ய வேண்டும். எந்தப் பிறதரப்புக்கள் போலவும் புலிகளும் தமக்கான செயற்பாடுகளைக் கொண்டுள்ளனர். எனினும், அதனது மாற்றுநிலைப்படுத்தல் பெரியளவில் அதனது சர்வதேச சமூகத்துடனான பிணைச்சல்களில் தங்கியுள்ளது எனவும் குறைந்தளவில் சிறீலங்காவுடனான உறவில் தங்கியுள்ளது என்றும் நாங்கள் வாதிடுகின்றோம். இதனால் முன்னையதே இங்கு பிரதானமானது.

நாங்கள் அரசியல் மாற்றுநிலைப்படுத்தல் தொடர்பான கருத்துருவில் உள்ள சில முக்கிய அடிப் படைகளை பரிசீலிப்பதில் ஆரம்பிக்கின்றோம். இப்படி செய்வதன் மூலம் தேர்தல்களை நடத்துவதும், பங்குபற்றுவதும் எனும் இலகுவான தாங்குநிலைக்கு அப்பால் சென்று விரிவான அர்த்தங்களை முன்னிலைப்படுத்த விளைகின்றோம். குறிப்பாக, தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் கணிசமான அளவிலான சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கி, நிலைப்படுத்துவதற்கான புலிகளின் நடவடிக்கைகளானது, இயக்க அளவிலும் (கெரில்லா இயக்கம் அரசாங்கமாகுதல்[6]), எதிர்ப்பிலிருந்து சுயஆட்சியமைப்பதால் தமிழர் போராட்டளவிலும், அரசியல் மாற்றுநிலைப்படுத்தல் நடவடிக்கையேயாகும். நாங்கள் இந்த நெறிமுறையை அரசு கட்டமைத்தல் என்று குறிப்பிடுவது பற்றிய முக்கிய முன்னெச்சரிக்கையை வெளியிடுகின்றோம்: இங்கு அரசு கட்டமைப்பது என்பதை வெஸ்பேலியன் இறைமையுள்ள அரசு என்கின்ற அர்த்தத்தில் நாங்கள் குறித்துக் கூறவில்லை - ஆனால், அரசுபரிபாலனத்திற்கும், சிவில் நிர்வாகத்திற்குமான கட்டமைப்புக்களை உருவாக்-குவதன் மூலம் போர்வலயங்களில் வாழுகின்ற மக்களின் அன்றாடதேவைகளை பூர்த்திசெய்வதுடன் தமிழர் அபிலாசைகளுக்கான சுயாட்சிக்கான அடித்தளத்தினை வழங்குவதாகவும் அமைகின்றது. இங்கு முக்கியத்துவமானது என்னவெனில், புலிகளினால் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் உருவாக்கப்படும் சுய அர-சுக்கான கட்டமைப்பானது தனிநாடு ஒன்றிற்கான அத்திவாரமாக இருக்கக்கூடியது போன்று ஒரு ஐக்கிய நாட்டிற்குள்ளான கட்டமைப்புடன் இணையக் கூடியதாகவுமுள்ளது. முதலில், தீவின் தமிழர் பகுதிகளில் நீண்டகாலமாக தாக்கமுள்ள அரசுபரிபாலனம் பொதுவாக வகைப்படுத்தப்பட்டது போல் இடம்பெறவில்லை: பெரும்பான்மை அரசுவினால் தமிழர்கள் திட்டமிடப்பட்ட பொருளாதார மற்றும் சமூக தனிப்படுத்தல்களின்

---

[4] சர்வதேச தரப்புக்கள் என்பதை நாங்கள் 2002ற்குப் பிற்பட்ட அமைதி முன்னெடுப்புக்களை ஒன்றுபட்டு முன்னெடுத்த இருதரப்பு, பலதரப்பு கொடையாளிகள், நோர்வே, சமாதான அனுசரணையாளர்கள் மற்றும் இணைத்தலைமை (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா) என்பனவற்றை கருதுகின்றோம்.

[5] மனித பாதுகாப்பு எனும் கருத்துருவமானது ஐநா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 1994 அறிக்கையிலிருந்து தோற்றம் கொண்டது. இதன் அத்தியவசிய குணாம்சம் என்னவெனில், தனிமனிதர்களை பாதுகாப்பு என்பதன் முழுமையான அர்த்தத்தில் அடையாளம் காண்கின்றது. இது மரபுவழிப்பட்ட புரிதலான தேசிய பாதுகாப்பு என்பது அரசுசார்ந்ததாகப் பார்ப்பதிற்கு முரணானது. இதன் பிரதான நோக்கம் 'சுதந்திரம் தேவைப்படுபவர்களுக்கும், அச்சத்திலிருந்து சுதந்திரம் கோருபவர்களுக்குமிடையேயான இடைவெளியினை நிரப்புவது'. அச்சத்திலிருந்து விடுதலை என்பது வன்முறைகளிலிருந்து விடுதலை என்று கருதப்படுகையில் தேவைகளிலிருந்து விடுதலை என்பது வறுமையிலிருந்து விடுதலை என்று குறிப்பிடப்படுகின்றது. ஐநாஅபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட மனிதஅபிவிருத்தி அறிக்கையானது உலகளாவிய பாதுகாப்பினை விரிவாக்குவதற்காகப் பின்வரும் 7 விடயங்களை அச்சுறுத்தலாக உள்ளடக்கக் கோரியது: பொருளாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, சுற்றுச்புறச்சூழல் பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் அரசியல் பாதுகாப்பு. இந்த கருத்துருவங்கம் உலகளாவிய பாதுகாப்பின் பன்முகம் தொடர்பான புனிதமான புரிதலாக இருந்தாலும் இது இதன் தெளிவின்மைக்காக விமர்சிக்கப்படுகின்றது.

[6] 2001ல் டேவிற் பூல் மேற்கொண்ட எரித்திரிய விடுதலை இராணுவம் பற்றிய கற்கையிலிருந்து பெற்றுக்கொண்ட தலைப்பு.

தொடர்ச்சியாக, தசாப்தங்களாக இடம்பெற்ற மோதுகைகளும் - தமிழர் கலகத்தினை வன்முறையுடன் ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளும் ஆளுமை விடயங்களிலும் முக்கியமானதாகவிருந்தது. இரண்டாவதாக, சிறீலங்கா அரசினை மீள்கட்டமைப்பு செய்தலும் - மாற்றுநிலைப்படுத்தலும், அத்தியாவசியமான முறையில் மோதுகையை தீர்ப்பதற்கான நிபந்தனைகளாக இருக்கின்றது. இது 1987 இந்திய - சிறீலங்கா உடன்படிக்கை போட்ட அடிப்படைகளை போன்று, தமிழர்களின் சுய ஆட்சிக்கான சுயாதீன பிராந்தியக்கட்டமைப்புக்களை உருவாக்குவதை தேவையானதாகக் கொண்டது. புலிகளின் அரசுபரிபாலனத்திற்கான கட்டமைப்புக்களானது தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் நாளாந்த நிர்வாக தேவைகளுக்கான வழிகோலாக அமைந்தது. அத்துடன் விரிவான தமிழர் அபிலாசைகளுக்கான சுய ஆட்சிக்கான வலுவான கட்டமைப்பாகவும் அமைகின்றது. சுருக்கமாக, புலிகளின் அரசு கட்டமைப்புக்களானது சிறீலங்காவில் மோதுகை மாற்றுநிலைப்படுத்தலுக்கான ஆற்றல்களைக் கொண்டது.

மோதுகை மாற்றுநிலைப்படுத்தலின் வடிவம் தொடர்புபட்ட கருத்துருவங்களை பரிசோதித்த பிற்பாடு நாங்கள் சுருக்கமாக சிறீலங்காவின் ஆயுதப் போராட்டத்தினை விபரிப்போம். பின்னர் புலிகளின் ஆயுதப் போரின் முற்சுருக்கத்தினை சற்று ஆழமாகப் பார்ப்போம். தமிழர் போராட்டம் அமைதிவழி கலகத்திலிருந்து ஆயுதப் போராட்டத்திற்கு மாற்றம் கண்டதன் உள்ளடக்கத்தினைப் பார்ப்பது மற்றைய அத்தியாயமாகும். இது இரு மடிப்புக்களைக் கொண்டது. அவை, மாற்றுநிலைப்படுத்துவதற்கு தடையாகவுள்ள வரலாற்றுபூர்வமான தடைகளை பிரதானப்படுத்திப் பார்ப்பதுவும் - இன்றைய சிறீலங்கா அரசையும், அரசியலையும் மாற்றீடு செய்வதற்கு (தமிழர் அரசியல் இலக்குக்களை தேர்தல் நெறிமுறைகள் மூலம் கூட சாத்தியமாக்குவது) தடையாகவுள்ள கட்டமைப்பு சார்ந்தவற்றை விபரிப்பது. பின்னர் நாங்கள் 2001 நோர்வே சமாதான நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பட்ட காலத்து புலிகளின் இராணுவமற்ற நடவடிக்கைகளை இரு வழிகளில் பரிசீலிக்கின்றோம். முதலாவதாக மாற்றுநிலைப்படுத்தல் என்பதை ஆயுதப் போராட்டத்திலிருந்து தேர்தல் அரசியலிற்கு மாற்றீடு செய்தல் எனும் குறுகலான புரிதலைப் பயன்படுத்துவது. இரண்டாவதாக ஆயுதப் போரிலிருந்து அரசாங்கநிலைக்கு இடம்பெயரல். நாங்கள் 1990கள் தொடக்கம் இடம்பெறும் புலிகளின் நிறுவனங்களைக் கட்டும் நடவடிக்கைகளை பார்க்கின்றோம். அதன்பிற்பாடு அதனை அரசியல் மாற்று நிலைப்படுத்தலுக்கான, அதாவது "கெரில்லாக்கள் அரசு அமைத்தல்", என்பதை நெறிமுறையாக பின்பற்றிப் பார்த்தல். குறிப்பாக நாங்கள் 2002 முதல் புலிகளினால் தாக்கம் செலுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் மூலோபாய மாற்றங்களை பார்க்கின்றோம். இவை மோதுகை மாற்றுநிலைப்படுத்தலுக்கான மாதிரியான வெகுமானங்களை நிலைப்படுத்தலுக்கான முக்கிய காலடியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்று விவாதிக்கின்றோம். பின்னர் நாங்கள் இந்த தாக்கத்துடன் சர்வதேச தொடர்பாடலை விமர்சனரீதியான மீளாய்வுக்குட்படுத்துகின்றோம். பின்னர் முக்கிய அவதானிப்புக்களின் சுருக்கத்துடன் முடிக்கின்றோம்.

முறையியல் பற்றிய சுருக்கமான குறிப்பு: உத்தியோகபூர்வ ஆவணங்கள், மோதல் மற்றும் சமாதானம் தொடர்பான அச்சிடப்பட்டதும், வாய்மூலமானதுமான விபரிப்புகள் உட்பட விசாலமான ஆதாரங்களை இந்த தேர்ந்தெடுத்த கற்கையானது எடுத்துக்கொண்டது. குறிப்பாக, புலிகளின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தலைமை மற்றும் மூத்த அதிகாரிகள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச இராசதந்திரிகள் மற்றும் சில சிறீலங்கா அதிகாரிகளுடனான உரையாடல்கள், மற்றும் செவ்விகாணல் என்பனவற்றை நாங்கள் நினைவில் கொள்கின்றோம். சில ஆவணங்கள் இந்தக் கற்கைக்காக மார்ச் 2007 முதல் சிறப்பாக தொகுக்கப்பட்டது. சில எழுதுபவரின் கலாநிதி ஆய்வுத்திட்டத்திற்காக தொகுக்கப்பட்டவை.

www.tamilarangam.net

# 1.மாற்றுநிலைப்படுத்தும் அரசியல்

முறைமைப்பட்ட மோதுகை மாற்றுநிலைப்படுத்துதல் (வில்ஸ் அன் அல்.2006) எனும் கருத்துநிலையில் கட்டப்பட்ட இந்த ஆய்வானது சமூக மற்றும் அரசியல் மாற்றுகைப்படுத்தல் எப்போதும் வீச்சுக் கொண்டது - நீட்டுவாக்கற்றது என்பதுடன் சமகாலத்திலே பலவித முன்னேறுகைகளை கொண்டதாக உருவகிக்கப்படுவது என்று விவாதிக்கின்றது (மாக்ஸ் வெப்பர்). இத்தகைய மோதுகை மற்றும் சமூக மாற்றீட்டிற்கான முறைமைப்பட்ட அணுகுமுறையானது செயற்படுவகை மாதிரிக்கு முரணானது. இந்த செயற்படுவகை மாதிரியானது சமூக மாற்றங்களில் நீட்டுவாக்கான முன்னேற்ற மாதிரியினைக் கொண்டது. முறைமைப்பட்ட அணுகுமுறையில் முறையானது (மாற்றமில்லாது) பேணப்படும். அத்துடன் முன்னைய வடிவிலான சமச்சீர்நிலைமையான (ஸ்திரத்தன்மையே முக்கிய தீர்மானிக்கும் பண்பு என்பது) மீள நிறுவப்படும். ஆழமாக வேர்பதித்து (பேர்டன்1990) மற்றும் நீடிக்கப்படும் (அசார்1990) ஒரே நாட்டிற்குள் இடம் பெறும் மோதுகைகள் கட்டமைப்பு விடயங்களிலிருந்தும் பிற உட்கிடக்கையான காரணங்களிலிருந்தும் ஊற்றுக் கொள்வதால், “அரசியல் மாற்றுநிலைப்படுத்தாலானது” சிக்கலான மற்றும் கூர்ப்படைந்த கடந்த காலங்களின் ஊடாக கவனிக்கப்படல் வேண்டும்.

இந்த பொறிமுறைவகைப்பட்ட சிந்தனைகளில் வெளித்தெரியும் முக்கிய விவகாரங்களாக இந்த விவாதம் பின்வருவனவற்றை கருதுகின்றது:

1. சமூகப் பொறிமுறையின் காரணங்களும், தாக்கங்களும் இலகுவான தர்க்கத்தினைப் பின்தொடர்வதில்லை - அவை மிகவும் சிக்கலான முறையில் தொடர்புகளைக் கொண்டவை. ஆயினும் காலத்தினாலும், தூரத்தினாலும் குறிப்பிடத்தக்களவு இதனை வேறுபடுத்தலாம் (றுப்பர்ஸ் 2008:3) என்பதைப் புரிந்து கொள்ளல்.

2. தரப்புக்கள் தங்களிடையே கொண்டுள்ள சார்ந்திருக்கும் தன்மை மற்றும் மீள்வழங்கல் வளையம் என்பனவற்றுடன் தொடர்புபட்ட வலையமைவான கட்டமைப்பு அடிப்படையில் சிந்தித்தல். “பாதுகாப்பு ஊசலாட்டம்” ஒரு உதாரணமாக இருக்கலாம். ஒருதரப்பு பாதுகாப்பின்மை எனும் தோற்றப்பாட்டுடன் ஆயுதங்களை தூக்குகையில் மறுதரப்பு இதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. இது நிலைமை மோசமாக்கி பாதுகாப்பின்மையை பற்றிய தோற்றத்தினை அதிகரிக்கின்றது. (றுப்பர்ஸ்2008:3)

3. தரப்புகளுக்கிடையேயான வலு உறவுநிலையானது எப்போதுமே மாறிக்கொண்டிருக்கும் முறைமைகள் நிலைகொண்டுள்ள சமச்சீரற்ற மோதுகை நிலைகொள்ளலிலேயே தங்கியுள்ளது. மோதுகையின் தரப்பினர்கள் அனேகமாக வளங்கள், வலுமையங்களுடனான தொடர்புகள் மற்றும் சர்வதேச சமூகத்துடனான தொடர்புகளில் ஒழுங்கற்றதன்மை கொண்டிருக்கின்றனர். இது மோதுகையை மீளவலுப்படுத்துகின்றது.

4. மாற்றத்தினை ஏற்படுத்தும் வழிமுறைகளுக்கான காவியும், அடித்தளமும் குறித்த பொறிமுறையினுள்ளேயே கண்டுபிடிக்கப்படல் வேண்டும். மோதுகையின் தரப்பினர் தாமாக பிரசவிக்கும் தீர்வுகளே நீடித்து நிற்கக்கூடியவை. மேலும் தரப்புக்கள் ஒற்றையானதும், ஒரேவகைப்பட்டதுமான வடிவமல்ல. மாறாக, அவை மாற்றத்திற்குட்படக்கூடியவை. ஏனெனில் உள்வீச்சினாலும் (பொறிமுறைவகைப்பட்ட), வெளி விடயங்களாலும் (வில்ஸ் அன் அல் 2006 ஐஏ) அவ்வாறானதாக அவையுள்ளது.

இந்த பொறிமுறைவகைப்பட்ட அணுகுமுறையினைப் பிரயோகித்து சிறீலங்கா மோதுகையில் அரசியல் மாற்றுநிலைப்படுத்தலை பரிசோதிப்போமானால் புலிகளுக்கு அப்பாலான விடயங்கள் கவனத்தினைக் கோருகின்றன. சிறீலங்காவின் இயல்பும் - நடைமுறைகளும், சர்வதேச சமூகம் மற்றும் இந்த மூன்று தரப்புக்களுக்குமிடையேயான வீச்சுக்கள் என்பனவே அவை. சர்வதேச பரிமாணத்தினை பின்னர் பார்ப்போம். ஆனால் “உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான போர்” மற்றும் “அரசு தோல்வியுறுவதை தடுப்பது” போன்ற தர்க்கங்களை கொண்ட வெளியக விடயங்கள் சிக்கலான உள்ளக மோதுகைகளில் வலுவான தாக்கத்தினைச் செலுத்துகின்றது. மேலும், நாங்கள் தரப்பினரை மாற்றங்காணமுடியாத ஒற்றையானதொன்றாக கருதவில்லை. மாறாக, மிகவும் சிக்கலான முறையில் உள்தொடர்பாடல்களால் பின்னப்பட்டதொன்றாக - தங்களது நலன்களை முன்னெடுத்தவாறு பிற தரப்புக்களுடனான உள்ளக தொடர்பாடல்களிற்கு பதிலளிக்கக் கூடிய - மாறும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றக் கூடியதொன்றாகவே கருதுகின்றோம். உதாரணத்திற்குப் புலிகளை

[7] பியர் புர்டியுவின் கோட்பாடுகளிலிந்து ஜோன் குல்டங் 3 வேறுவகைப்பட்ட, பொதுவான இனத்துவ அரசியல் மோதுகைகளில் பிரயோகிக்கப்படும் வன்முறைகளை அடையாளம் கண்டார்: பண்பாடு, பௌதீக மற்றும் கட்டமைப்பு வன்முறைகள்(1990:291)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இயல்பிலேயே விட்டுக்கொடுப்பற்றவர்கள் என்று வகைப்படுத்த முடியாது. மாறாக, அதனது நிலையும், நடவடிக்கையும் இடம்பெறும் காலத்தின் வீச்சு மற்றும் பொறிமுறையில் உள்ள பிறதரப்பினருடனான தொடர்பாடல்கள் மற்றும் உறவுகளின் பின்னணியில் அவதானிக்கப்படல் வேண்டும். அதனால் புலிகளும், தமிழர் போராட்டமும் எவ்வாறு வடிவம் பெறும் என்பதில் எந்தவித தவிர்க்க முடியாத தன்மையும் கிடையாது. மேலும் மண்ணில் உள்ள நிலைமையே எந்த தரப்பட்ட காலத்திலும் முன்னுள்ள மாற்றுவழிகளை தீர்மானிக்கின்றது. மேலும் எந்த இறுதியான மாற்றுநிலைப்படுத்தல்களும் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் உள ஈடுபாட்டிலிருந்து வரவேண்டும். அது வெளியிலிருந்து திணிக்கமுடியாதது. முக்கியமாக வலிந்து திணிக்க முடியாது.

நாங்கள் புலிகள் ஒற்றையான தன்மைகொண்டதொரு அமைப்பாக கருதமுடியாது என விவாதிக்கின்றோம். இதனால் அவ்வமைப்புக்குள் மிகத்தீவிரமான முரண்பாடுகள் நிலவுகின்றது என்று சொல்லவில்லை. மாறாக, உள்ளே இடம்பெறும் கருத்துப்பகிர்வு, கலந்துரையாடல்கள் மற்றும் முன்னுள்ள மாற்றுவழிகள் தொடர்பான இலாப-நட்ட கணிப்புக்களினை கவனமாகவும் தர்க்கபூர்வமாகவும் பரிசீலித்த பின்னரே முடிவுகள் எடுக்கப்படுகின்றது என்று சொல்லலாம். புலிகளை சிறுமைப்படுத்துபவர்களின் ஊகங்களுக்கு முரணாக, மூலோபாயங்கள் மீளாய்வுக்குட்படுகின்றபோது குறித்த விடயங்கள் மீள விவாதிக்கப்படுவதற்கான வெளி வாய்க்கப் பெறுகின்றது. புலிகளின் ஒழுக்கம் இரும்புப்பிடிகொண்டது என்கின்ற தோற்றம் காணப்படுகின்றது என்பதும், எடுத்த கொள்கை முடிவுகள் தீவிரமாக அமுல்படுத்தப்படும் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். உதாரணமாக 2003ல் நோர்வே அனுசரணையுடன் சிறீலங்கா அரசுடனான பேச்சுக்களில் பங்குகொள்வதை தற்காலிகமாக ஒத்திவைத்த புலிகளின் முடிவானது ஒரு எழுந்தமானமான முடிவல்ல. மாறாக, குறித்த சில வெளியக நடவடிக்கைகளிற்கு பதிலளிக்கும் விதத்தில் எடுக்கப்பட்ட மிக அவதானமான முடிவாகும். இவற்றுள் இயக்கம் மீளவலியுறுத்திய மனிதாபிமான விடயங்கள் தொடர்பான முக்கிய உடன்பாடுகளில் காணப்பட்ட வெளிப்படையான முன்னகர்வற்ற தன்மையும் உள்ளடங்கும். இதையொத்த மூலோபாய கரிசனையே இடைக்கால நிர்வாகம் பற்றிய மற்றுமொரு வழிப்பட்ட பேச்சுவார்த்தைக்கான முடிவாகும். குறிப்பாக மனிதாபிமான விடயங்களுடன் தொடர்புபட்ட திட்டவட்டமான யோசனைகளை பேச்சுக்களுக்காக முன்வைத்தமையாகும்.

சிறீலங்காவில் மோதுகை மாற்றீடு தொடர்பான ஆய்வுகளுக்கு இடையூறாகக் காணப்படும் முக்கிய தடையானது அந்தநாடும், அதன் அரசியல்வடிவமும் சனநாயகவழிப்பட்டது என்கின்ற புலப்படாத கருத்துருவம் ஆகும். சனநாயகமானது வெறுமனே தேர்தல்களை நடத்துவதற்கும் அப்பாற்பட்டது என்பது பரவலாக அங்கீகரிக்கப்படுகின்றது. நெறிமுறைகளில் கவனம் செலுத்தும் சனநாயக உரித்துரிமைக்கான சமகால கோட்பாடுகள் தொடர்பான விமர்சனரீதியான கோணத்தில், சனநாயகத்தினை கட்டமைக்கும் உள்ளடக்கமுள்ள காரணிகளில் கவனம் செலுத்தும் விரிவான வரைவிலக்கணத்தினை நாங்கள் வேண்டுகின்றோம். சிறீலங்காவின் இனத்துவ - அரசியல் மோதுகையானது திட்டமிடப்பட்ட முறையில் தமிழ் அடையாளம், அரசியல் அதிகாரம், சமூக - பண்பாட்டு வெகுமானங்கள், அபிலாசைகள் என்பன சிங்கள பெரும்பான்மைவாத அரசினால் நிராகரிக்கப்பட்டமையால் கிளர்ச்சி கொண்டது. இந்த ஓரங்கட்டலுக்கு எதிரான தமிழர் எதிர்ப்பு பல தசாப்தங்களாக சனநாயகவழி அணிதிரட்டல், அமைதிவழி கிளர்ச்சி (பார்க்க வில்சன்1988, போஸ்1994, டிவோற்றா 2004, பாலசிங்கம் 2004) வழிகளில் இடம்பெற்றன. சனநாயகவழி நெறிமுறைகள் தமிழர் முறைப்பாடுகளுக்கு பதிலளிக்க மறுத்தமையும், இணையாக அரசு ஒடுக்குமுறை அதிகரித்தமையும் வன்முறை எதிர்ப்பு வடிவுக்கு மாற்றுநிலையடைய ஊக்கப்படுத்தியது. சிறீலங்காவின் சாத்தியமான மாற்றுநிலைக்கான ஒளிப்பாதையை ஆராய்ந்தால் மோதுகையின் வேர்களானது, காலனித்துவத்திற்குப் பிற்பட்ட அரசினை இணையாக உருவாக்கும் தேசியம் என்ற தகைமை தமிழர்களுக்கு நிராகரிக்கப்பட்டமை உணரப்படுவது மிகவும் முக்கியமானது. இதற்குத் தீர்வு காண்பதற்கானத மிழர்களின் தேடல், ஆயுதப் போர்வடிவில் - மையவிடயங்களான நீதி, சமத்துவம், சனநாயகம், மனிதஉரிமைகள் மற்றும் கௌரவம் என்பனவாக நிலைபெற்று - சுதந்திர நாட்டுக்கான போராட்டமாக வடிவமுற்றது. அதனால், தீர்வையும், நீதியையும் நோக்கிய தமிழர் விடுதலைப் போராட்டம் விவாதத்திற்கு அப்பாற்பட்ட வகையில் அரசியல் தன்மை கொண்டதாகும். போராட்டத்தின் இயல்பும் (பாராளுமன்றவகையிலிருந்து ஆயுதம்தரித்த எதிர்ப்பாக) அதன் வழிமுறையும் (அகிம்சை வழியிலிருந்து ஆயுதகிளர்ச்சியாக) காலங்கள் ஊடாக மாற்றமடைந்த போதும், சமநீதியான அதிகாரம் மற்றும் வளங்களின் விநியோகங்கள் என்பன எதுவித மாற்றங்களுமின்றி மையவிடயங்களாகவே தொடர்ந்தன. இது கூட்டாட்சி பின்னர் இணையாட்சி பின்னர் உத்தரவாத இணையாட்சி ஈற்றில் முற்றிலுமான சுதந்திரம் என்பன போன்ற அரசியல் வேண்டுதல்களில் தொடர்ந்தன.

வன்முறை - அரசியல் எனும் இணைத்தன்மையை நிராகரித்து, புலிகளால் தலைமைதாங்கப்படும் தமிழர் போராட்டம் அமைதிவழியிலும், இராணுவ வழிகளிலும் முன்னெடுக்கப்படும் (பல்வேறு அளவிலான அழுத்தங்களையும், தீவிரத்தன்மைகளையும் எந்த வேளைகளிலும் எதிர்கொள்ளுமொரு) அரசியல் திட்டமேயென நாங்கள் வாதிடுகின்றோம். உண்மையில் இருவழிகளும் ஒரேநேரத்தில் ஏதாவதொன்று முன்தெரியும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. மோதுகை மாற்றுநிலைப்படுத்தல் அடிப்படையில் கவனம்

www.tamilarangam.net

செலுத்தும் போது, ஒன்று அல்லது மற்றைய வடிவத்திலான போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பது மூலோபாய கவனிப்பு மற்றும் உள்ளடக்க அடிப்படையிலேயே ஆகும். மாறாக, புலிகளின் சில அத்தியாவசிய குணாம்சத்தின் தவிர்க்க முடியாததன்மையால் அல்ல. மேலும், இந்த முடிவு எடுக்கும் முறைமையானது பயன்-*பாட்டினை உச்சப்படுத்தல்* எனும் கோட்பாட்டுக்கமைவான பகுத்தறியும்-தேர்வு என்று சிறப்பாக விபரிக்கலாம். இது தங்கள் இலக்குக்களை முன்னெடுக்கும் தரப்புக்கள், தரப்பட்டவற்றில் உச்சளவினைப் பெற்று - குறைந்தளவு இழப்புக்களையே சந்திப்பதற்கான சிறந்த வாய்ப்பினை தேர்ந்தெடுத்தல் என்பதைக் கூறுகின்றது (டாஸி2001). மோதுகையின் ஒருதரப்பு இந்தப் பேச்சுவார்த்தைகள், பேச்சுவார்த்தை வழித்தீர்வுக்கு மாற்றான வழிகளிலும் பார்க்க, சிறந்த விளைவைத் தரும் என்று நம்பினால் நல்லெண்ணத்துடன் பேச்சுக்களில் ஈடுபடும். இல்லாதுவிட்டால், அந்தத்தரப்பு இந்தப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்தரப்பின் பேச்சுவார்த்தை வழித்தீர்வுக்கு மாற்றான வழிகளை குறைப்பதற்கு அல்லது தனது பேச்சுவார்த்தை வழித்தீர்வுக்கு மாற்றான வழிகளை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தும். அதேபோன்று அதிகளவு இராணுவவழி ஆதிக்கநிலையிலிருந்து பிரதானமாக அரசியல் மூலோபாயத்திற்கு மாற்றுநிலைப்படுத்துவதும், இந்த மாறுகையானது தனது இலக்கு களை அடைவதற்கான (மூலோபாய அல்லது தந்திரோபாய) சாத்தியங்களை வலுப்படுத்தினாலேயே இடம்பெறும். தகுந்த மூலோபாயத்தினை தேர்வுசெய்யும் போது, விடுதலை இயக்கங்கள் தனது எதிர்அரசு உடனான உறவு வரலாற்றினை (அதாவது நம்பிக்கை தொடர்பான கேள்வி), சாத்தியமான இழப்புக்களும் - இலாபங்களும் மற்றும் தங்கள் நீண்டகால இலக்கினை அடைவதற்கான தேர்வின் தாக்கத்தினையும் கவனத்தில் கொள்ளும்.

இந்தவகைக் கவனிப்பின் முக்கிய கூறு சரீரரீதியான பாதுகாப்பு (மனித பாதுகாப்பு என்ற உள்ளடக் கத்தில்) விடயமாகும். தமிழர் போராட்டம் அமைதிவழி கிளர்ச்சியிலிருந்து ஆயுதப் போராக ஆரம்பத்தில் மாற்றமடைந்தமையானது, சுதந்திரத்தின் பின்னான அரசின் வன்முறைவழி ஒடுக்குமுறை என்கின்ற உள்ளடக்கத்தில் கவனிக்கப்படல் வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். சிறீலங்காவின் காலனித்துவத்திற்குப் பிற்பட்ட வரலாறானது, 'இனச்சுத்திகரிப்பு என வழமையாக அழைக்கப்படும் தமிழ் மக்களிற்கு எதிரான 1956,1958,1977,1981 மற்றும் 1983ல் காலகட்டங்களில் அழிவுதரும் வன்முறைகளினால் இடைவெளியிடப்பட்டதாகவிருந்தது'(கிருஸ்ணன் 1999:67). அதன் போது பல்லாயிரக்கணக்கானவர்கள் படுகொலைசெய்யப்பட்டனர், சொத்துக்கள் அழிக்கப்பட்டன, பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப் பட்டனர்(பாலசிங்கம் 2004:9). இந்த அரசின் தமிழர்களுக்கு எதிரான 'பௌதீகப் பாகுபாடு', அரசு (இராணுவ) வன்முறையினால் ஊற்றெடுத்தது மட்டுமல்ல. எப்போது தமிழர் எதிர்ப்பு கலவரம் இடம் பெறுகின்றதோ 'ஆட்சியில் உள்ள அரசுகள் எப்போதும் அதனைப் பொருட்படுத்துவதில்லை' என நித்தியானந் தன் இதனை விபரிக்கின்றார் (2000:300-1). இந்த கலவர வன்முறையும், தமிழர்களின் 1956 மற்றும் 1961 சத்தியா-க்கிரகம் (அமைதிவழி ஒத்துழைப்பின்மை) மீதான ஒடுக்குமுறையும் சிங்கள பெரும்பான்மைவாத அரசு வன் முறையை முற்றிலும் ஆதிக்கம் செலுத்தும் சூழலில் தமிழர்களை வலுவற்றவர்களாகவும், பாதிக்கப்படக் கூடியவர்களாகவுமாக்கியது. பிரைன் புளட்கெட் சிறீலங்கா இராணுவம் பற்றிய தனது விரிவான கற்கையில் '1962ல் சிங்கள பௌத்த சமூகத்திடமிருந்தே ஆட்களை படைக்குச் சேர்ப்பது என்ற கொள்கை நிறுவனமயப் படுத்தப்பட்டது. இது இனச்சுத்தமான இராணுவத்தின் ஆரம்பமாகும்' என்று குறிப்பிட்டார். இன்று சிங்கள ஆயுதப்படைகள் மிகஅதிகமான சிங்களவர்களைக் கொண்டது. பாதுகாப்பு மற்றும் அடையாளம் தொடர்பான பேச்சுக்களுக்கு அப்பாலான விடயங்கள் எனும் ஜோன் பேர்டனின் மனிதத் தேவைகள் கோட்பாடு விபரிப் பானது தமிழர் போராட்டத்தின் பலபக்கங்களை புரிந்து கொள்ள முக்கியமானதாகும். அவர் 'அனைத்துலகக் கரிசனை பெற்ற - பாதுகாப்பு மற்றும் பிற வெகுமானங்களுடன் இணையாக - இனத்துவ மற்றும் பண்பாட்டு அடையாளம், அங்கீகாரம், சிறுபான்மையினருக்கு வழமையாக மறுக்கப்படும் பங்குபற்றல், என்பன போன்ற ஆழமான விடயங்கள் பேச முடியாதவை' என்று முடிவுரைக்கின்றார்.

சிறீலங்கா அரசியல் முறைமைகளினுள் தமிழர்கள் தீர்வினையும், நீதியினையும் பெறமுடியாது என்பதற்கு அப்பால், தமிழர் போராளித்துவம் அரச வன்முறையினையும் இனக்கலங்கரங்களையும் (அரசு ஆதரவுபெற்ற) எதிர்க்க வேண்டிய அவசியத்தில் வேரூன்றியது (போஸ்1994). புலிகள் அது உருவாகிய 1976லிருந்து மாற்று நிலைக்குட்படவில்லை என்று சொல்லவில்லை. மறைமுக போராளிக்குழுவாக தோற்றம் பெற்று, இன்று வெளித்தெரியும் வகையில் "அரசுக்குள் அரசாக" சொந்தமான நிரந்தர இராணுவம் - விரிவான சிவில் நிர்வாக கட்டமைப்புக்கள் எனப் புலிகள் மாற்றம் கண்டுள்ளனர். மேலும், "கெரில்லாக்களிலிருந்து அரசாங்கமாக" புலிகள் மாற்றுநிலைப்பட்டமையானது கட்டமைப்பு மாற்றங்களுக்கும் அப்பாற்பட்டது: இயக்கத்தின் அடிப் படைப்பண்பு ஆயுத எதிர்ப்பியக்கம் என்பதிலிருந்து அரசுகட்டல் என்பதாக மாற்றுநிலைப்பட்டுள்ளது. நிர்வாக முறையை உருவாக்கியது, சட்ட ஒழுங்கு (காவல், நீதித்துறை) - பொருளாதார முகாமைத்துவம் (மத்தியவங்கி போன்றன) - நலவாழ்வு போன்றன உள்ளடங்கும். எனினும், கிறிஸ்ரியன் ஸ்ரோக் (2006) புலிகளின் நிறுவனம் கட்டும் முயற்சிகள் தொடர்பான விரிவான கற்கையில், சிறீலங்கா அரச கட்டமைப்பானது புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் முழுமையாக மாற்றீடு செய்யப்படவில்லை - உதாரணமாக, அங்கு இரு "சமாந்தரமான" சுகாதார மற்றும் கல்வி முறைகள் உள்ளன என்று குறிப்பிட்டார். அம்டாய் எட்சியோனியின் செயற்படும் சமூகம்

எனும் கருத்துருவை தழுவிப் பார்க்கையில் புலிகள் 'தீவிரமானதும் - இடையறாத சுய மாற்றுநிலைப் படுதலுடன்' (1968:18) தொடர்புபட்டு வந்தமையை அவதானிக்கலாம். இந்த நெறிமுறைகள் நோர்வே அமைதி முயற்சிகளின் ஆரம்பத்துடன் இது தீவிரம் பெற்றது. எனினும், மாற்றுநிலைப்படல் எனும் கருத்துருவின் "இராணுவத்திலிருந்து அரசியல்" போராட்டம் எனும் சமூக மாற்றத்திற்கான நீட்டுவாக்கு வடிவ மாதிரியானது -(அ) மோதுகை மற்றும் தீர்வு முறைமையின் வீச்சு இயல்பு (ஆ) தொடர்புபட்ட சமூக, அரசியல் யதார்த் தங்களின் சமஇயங்குகை மற்றும் தரப்புக்களின் பகுத்தறிவுடன் கூடிய தேர்வு, யதார்த்த அரசியல் கரிசனை களுடன் கூடிய முடிவெடுக்கும் தர்க்கம் (இ)அழிவுதரும் சுழற்சியுடன் ஒன்றையொன்று மீள்வலுப்படுத்தும் வீச்சு - என்பனவற்றை புரிய உதவவில்லை. எர்னஸ்டோ சிராக்சடிடா சுட்டிக்காட்டுவது போல், சமூக அரசியல் இயக்கங்களானது 'பலவித குணஇயல்புகளும், நிரையான அபிவிருத்திகளுடன் பல்கட்டங்களானது. அவை தொடர்ச்சியாக கூர்ப்படைவதுடன் மாற்றுநிலைப்படுவதும் என்பதால் எதிர்காலத் தலைமுறைக்கெனப் பன்மையான சொத்துக்களை தாங்கிநிற்கின்றது' (2006:244)

www.tamilarangam.net

# 2.சனநாயகம் பற்றிய கேள்வி

சனநாயகமானது பொதுவாக மோதுகைகளை கையாள்வதற்கும், நீதியானதும் - சமனானதுமான பிரதிநிதித்துவத்தை வழிவகுப்பதற்கும் தாக்கமுள்ள கருவியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மேலும், சோவியத்யூனியன் தோல்வியடைந்ததன் பின்னர் சனநாயகம் 'நியாயபூர்வத்தன்மையின் மைல்கல்' (போட்நிஸ்கி 1999) என்பதாகிவிட்டது. சனநாயகப் பண்புகள் பன்மைத்தன்மையுள்ள பண்பாட்டு பழக்கவழக்கங்களில் வேரூன்றியுள்ளதுடன் வன்முறை கையாளப்படுவதை விலத்தி வைக்கின்றது. இந்த சனநாயக அமைதி கோட்பாட்டின் இயல்பான தர்க்கம் என்னவெனில் சனநாயகநாடுகள் தமக்கிடையே போரில் ஈடுபடுவதில்லை என்பதுடன் தமக்கிடையேயான முரண்பாடுகளைக் களைவதற்கு வன்முறை பயன்படுத்தப் படுவதை விலத்திவைத்துள்ளன. ஏனெனில் தார்மீகரீதியாக இவ்வாறு செயற்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. இந்தக் கோட்பாடு தவிர்க்கமுடியாதவிதத்தில் கடும் விமர்சனங்களுக்குட்பட்டது. இது அரசியல் நவ-யதார்த்தவாத (பார்க்க வால்ட்ஸ்2000) சிந்தனைக்கூடங்களிலிருந்து கொஞ்சமும் வெளிப்படவில்லை. எவ்வாறாயினும். "வரலாற்றின் முடிவிலிருந்து" (புக்குயமா 1992) சனநாயகம் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான அருமருந்தாகிவிட்டது.

சனநாயக உரித்துருமை சிந்தனைக்கூடத்தினை பிரேரிப்பவர்கள் சனநாயகத்தினை காலத்திற்குக்காலம் இடம்பெறும் தேர்தல்களால் வரைவிலக்கணப்படுத்தப்படும் குறுகலான, நெறிமுறையில் தங்கியுள்ள கருத்துருவமாகவும் அர்த்தப்படுத்துகின்றனர் (ஸ்கும்டர் 1947 மில் 1967,பென்தம் 1960). ஆனால் 'ஆசியாவின் முன்னணி துடிப்புள்ள சனநாயகம்' சிறீலங்கா (குமாராசாமி 2003:145) என்று வகைப்படுத்தப்படுகின்ற போதும் சிறீலங்கா தேர்தல்முறைமையின் அனுபவங்களானது அவை அந்தச் சமூகங்களிற்கு பெரியளவில் பொறுப் பெடுக்காதது என்பதுடன் அரசியல் சார்புத்தன்மை கொண்டது. பொதுவாகவே பொதுமக்கள் தங்களை பிரதி நிதித்துவப்படுத்தும் தலைமையை தேர்வு செய்வதற்கான சிறப்பான கருவியாகவும், அதிகாரத்தினையும், சட்டபூர்வதன்மையையும் மாற்றுவதற்கான சிறப்பான பொறிமுறையாகவும் தேர்தல்கள் பார்க்கப்படுகின்ற போதும் தாராளவாதமல்லாத அல்லது பெரும்பான்மைவாத சனநாயகமானது இலகுவில் பெரும்பான்மை சமூகம் அதிகாரத்தினை தக்கவைத்துக் கொள்ளவும், சிறுபான்மையினரை எண்ணிக்கைப் பலத்தால் ஓரங்கட்ட ஏற்ற கருவியாகிவிடுகின்றது. தேர்தல்கள் ஜோன் ஸ்ருட் மில்ஸ் கூறியது போன்று 'பெரும்பான்மையினரின் சர்வாதிகாரத்திற்கு' (1859) இட்டுச்செல்லக் கூடியது. முரணான வகையில் தேர்தல் பொறிமுறையின் இயங்குதன்மைகளுக்கு முன்னுரிமை கொடுக்காது வெகுமானங்களும், முக்கியத்துவமும் சனநாயகத்தில் இயல்பு என்கின்ற பின்தொடரும் மாதிரியினும் நாங்கள் செல்கின்றோம்.

## 2.1 சிறீலங்காவில் சனநாயக பொறிமுறையின் தோல்வி

சிறீலங்காவின் இனக்குழும அரசியல் மோதல்கள் ஆளவேறூன்றிய முரண்பாடுகளை தீர்க்கவும், நிலைத்துநிற்கும் நியாயம் ஏற்படுத்தவும் தவறியதுமான சனநாயக பொறிமுறையினது தோல்வியின் உள்ளடக்கத்திலிருந்து உருவகம் பெற்றது. சிறீலங்காவானது சுதந்திரத்தின் பின்னர் தேர்தல்வழி மற்றும் பாராளுமன்ற சனநாயகவழிகளிற்கு சுமூகமான மாற்றுநிலையைக் கண்டிருப்பினும், சனநாயகத்தினை செழுமைப்படுத்தும் விழுமியங்கள் துரிதகதியில் பெரும்பான்மைவாதத்திற்கும், இனத்துவ ஆதிக்கத்திற்கும் வழிவிட்டுவிட்டது. உண்மையில், கீழே விபரிக்கின்றவாறு, சனநாயக அரசியலானது பதற்றங்களைக் கூர்மைப்படுத்தியதுடன் சிறீலங்காவின் தடம்பிடிக்கமுடியாத இனத்துவ அரசியல் மோதல்களை துரிதப் படுத்தியது. பெரும்பான்மைவாத சனநாயகத்திற்கான அனைத்துக் கூறுகளையும் சிறீலங்காவின் அரசியல் உள்ளடக்கியதாக இருந்தது. இவை பொதுவாக பெரும்பான்மை பொதுசன வாக்குகளால் தேர்வுசெய்யப்படும் நிறைவேற்றுபீடங்களின் கைகளில் அதிகாரங்கள் குவிக்கப்படுதாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இத்தகைய நிறுவனவடிவ பெரும்பான்மைவாதமானது, '1. வலிமையான சனதிபதி ஆட்சி[8], 2. இலகுவான பெரும்பான்மை மூலம் தேர்வு தீர்மானிக்கப்படும் முறைமை 3. ஒற்றையான சட்டசபை 4. அரசாங்கத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையே பலவீனமானமுறையில் அதிகார பிரிப்பினைக் கொண்ட அரசமைப்புச் சட்டங்கள் 5. ஒற்றையாட்சி முறை, மையப்படுத்தப்பட்ட அரசு, நிர்வாகக் கட்டமைப்புக்கள்' (பஸ்டியான் மற்றும் லக்கம் 2004:43) எனப்படுகின்றது. இன்னமும் முன்னர் சொன்னது போன்று நாடுகள் வழமையானதும்,

[8] இது சிறீலங்காவின் குறிப்பிடப்படும் நிலையாகும். இங்கு அதீதமாக அதிகாரங்கள் குவிக்கப்பட்ட சனதிபதி பணிமனையாலும், ஒப்பீட்டளவில் பலவீனமான நாடளுமன்றத்தாலும் அரசியல் பொறுப்புணர்வு குறைவானதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாவனைபண்ணும் விதத்திலுமான ‘சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்கள்’ எதிர்கொண்டால், அவை முறையான சனநாயகம் தொடர்பான பிற தகைமைகளில் குறைகளைக் கொண்டிருந்தாலும் கூட, வழமையாக சனநாயகம் என்று அழைக்கப்படுகின்றது.

அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் இனக்குழும, வர்க்க, பிரதேச அலகுகள் தழுவியதாக சமனற்ற விதத்தில் பாதுகாக்கப்படுவதால் சிறீலங்காவின் உள்ளடக்கத்தில், இனத்துவம் பற்றிப் பேசுவதே சனநாயகம் பற்றிப் பேசுவதிலும் மிகவும் பொருத்தமானது. நாடு இதுவரை மூன்று அரசமைப்புசட்டங்களைக் கண்டு விட்டது. இது அரசு பெரும்பான்மைவாத அரசாக மாற்றம் காண்பதை கோடிட்டுக்காட்டியது. முதலாவது வரைவு (பிரித்தானியரால் வரைவு செய்யப்பட்டது) வெஸ்ட்மினிஸ்டர் முறைமையை ஒத்ததாக இது அமைந்தது. இரண்டாவதும் - மூன்றாவதும் பௌத்தத்தினை சிறப்புடன் பாதுகாக்கப்படும் மதமாக ஸ்தாபித்ததுடன், ஒற்றையாட்சி முறை ஆளுமையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த அரசஅமைவு ஒற்றையான இனத்துவ வடிவத்தினைக் கொண்டது மட்டுமல்ல, இவை காலத்திற்குக் காலம் சிங்கள பெரும்பான்மைவாத உணர்வுகளை ஈர்த்து, தங்கள் ஆட்சியினை நீடிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்கு உதவும் ஆயுதங்களாக ஆளும் கட்சிகளின் கைகளிற்குக் கிடைத்தது. இந்த ‘இனத்துவ பேரம்’ (டிவெற்றா2004) ஏற்படுத்திய வீச்சு மிகச்சரியாக கற்கைசார் அவதானிப்புக்களை பெற்றுள்ளது. 1987 இந்திய - லங்கா உடன் பாடு[9] எட்டப்படும்வரை சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாகவும்[10], சிங்கள பௌத்த பெரும்பான் மையினருக்கு இந்தத் தீவு ‘சிறப்பான தாயகபூமி[11]’ என்ற பார்வை நிலவிய சூழலும் காணப்பட்டது. ராதிகா குமார சுவாமி முடிவுரைத்தது போல் “சிறீலங்காவை ஒரு சிங்கள பௌத்த அரசாகவும், அது பௌத்தத்தினை பாதுகாப்பதையும் - விருத்தி செய்வதையும் கடமையாகக் கொண்டதொரு மத்திய முடியாட்சியின் கீழ் ஒன்று பட்டது என்றும் சிங்கள தேசியவாதம் கருதுகின்றது என்பது பல கற்கையாளர்கள் சுட்டிக்காட்டும் விபரமாகவுள்ளது. இதனால் பெரும்பான்மைவாதத்தின் தவிர்க்கமுடியாத முன்னுரிமையென்பது வலுவாகக் காப்பிடப்படல் வேண்டும் எனும் சிங்கள தேசியவாத அரசியல் தேவையைக் கொண்டது. சனநாயகத்திற்கு பெரும்பான்மைவாதமற்ற அணுகுமுறைகளை பிரேரிக்க முயலும் எந்த வடிவமும், அது மத்திய அதிகாரப்பகிர்வுடன் அல்லது வெளிவட்ட அதிகார பகிர்வுடன் தொடர்புபட்டாலும் கூட கடுமையான கோபத்துடன் எதிர்கொள்ளப்படும்.” (2003:146)

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்து அரசு அமைக்கும் நெறிமுறைகள் சிறீலங்காவில் பாரபட்சம் உள் ளதாகவும், அரசின் அதிகார மையங்களிற்கும் தமிழ் மக்கள் நுழைவது நிராகரிக்கப்பட்டதாகவும் அமைந்தது. இங்குள்ள விடயம் என்னவெனில், போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலையாவது தவிர்க்க முடியாத விதத்தில் சனநாயக மாற்றுநிலைப்படுத்தலின் முழு அர்த்தங்களுடனும் இடம்பெறல் வேண்டும். மிகவும் முக்கியமாக ஆயுதப் போராட்டத்திலிருந்து தேர்தல் முறை அரசியலுக்கு மாற்றுநிலைப்படுவது அத்தகைய சனநாயக மாற்றுநிலைப்படுத்தலினை பின்தொடரல் வேண்டும்.

தமிழ் போராளிகளுக்கும் சிங்கள மேலாதிக்கம் மிக்க சிங்களப் படைகளுக்கும் இடையே 1980களில் மோதல்கள் ஆரம்பித்தபின்னர், தமிழர்கள் சிங்களவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட ஆட்சிமுறையின் கீழ் வாழ்ந்தனர். அரசினால் கட்டுப்படுத்தப்படும் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்களிற்குக் கூட அவசரகால விதிகளும், இராணுவ ஆக்கிரமிப்பும் தினசரி நிகழ்வாக அமைந்தது. எழுந்தமானமான வன்முறை, மனிதஉரிமை துஸ்பிரயோகங்கள்(பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான தண் டனைக்குட்படுத்தாத சட்டப்பாதுகாப்பு), இனத்துவ அடையாளப்படுத்தல், எதேச்சையான ஆனால் எப்போதும் தண்டிக்கும் சட்ட ஒழுங்குப் பிரயோகங்கள் என்பனவற்றால் வகைப்படுத்தப்படும் இத்தகைய ஒடுக்குமுறை

---

[9] இந்தோ-லங்கா உடன்பாடானது 1978ம் ஆண்டு அரசமைப்புக்கு திருத்தத்தினை ஏற்படுத்தி, தமிழர்களின் அபிலாசைகளை அடைவதற்காக பிரதேசசபை முறைமையை அறிமுகப்படுத்தியது.(வடக்கு கிழக்கினை ஒரு அலகாக மாற்றல், தமிழ் உத்தியோகபூர்வ மொழியாதல் போன்றன). பிரதேசசபைகள் போதியளவு அதிகாரங்களை (அவர்களது முடிவுகள் பாரளுமன்றத்தினால் நிராகரிக் கப்படலாம்) கொண்டிருக்கவில்லை என்பதுடன் செல்வாக்கு, மத்தியரவு ஆதரவு என்பனவற்றையும் பெறவில்லை. 2006ல் உடன்- பாட்டின் வடக்குக்கிழக்கு இணைப்புத் தொடர்பான முக்கிய பிரிவுகளின் சட்டவிரோததன்மை பற்றிய நீதிமன்ற உத்தரவு உடன்பாட்டை செல்லுபடியற்றதாக்கியது.

[10] 1978ம் ஆண்டு அரசமைப்பின் அத்தியாயம் ஏஜ சிங்களத்திற்கு உத்தியோகபூர்வ அந்தஸ்த்தினை (பிரிவு20) வழங்கியதுடன் சிங்களம், தமிழ் என்பனவற்றினை தேசிய மொழியாக்கியது (பிரிவு21). முக்கியமான வித்தியாசம் என்னவெனில் ஒருவர் எந்தவொரு தேசி- யமொழியிலும் கல்விகற்கலாம், எனினும், பொதுசனசேவை, நீதித்துறை, உள்ளூர்அரசாங்கம், பொதுநிறுவனங்கம் அல்லது அரசமைப் புநிறுவனங்கள் போன்றனவற்றில் உள்நுழைவதற்கு உத்தியோகபூர்வ மொழி (பிரிவு 22(5)) நிபந்தனையாகும். 13வது சட்டதிருத்தம் தமிழையும் உத்தியோகபூர்வ மொழியாக்கிய (இந்தோ-லங்கா உடன்பாட்டின் பின்விளைவாக) போதும் முழுமையாக அமுல்படுத்தப் படவில்லை.

[11] இந்தக் கற்கையானது தாங்களே மூலக்குடிமக்கள் மற்றும் தீவிற்காக தேர்வுசெய்யப்பட்ட மக்கள் எனும் சிங்கள சமூகத்தின் சுய அங்கீகாரத்தின்பாற்பட்ட ஐதீகங்களையும், வீரதீரங்களையும் பிரதிபலிக்க முற்படவில்லை. இது பரவலாகப் பல அறிவுசார் கற்கைகளில் விவாதிக்கப்பட்டுள்ளது (ஜெயவர்த்தன1985, குணவர்த்தன1995)

www.tamilarangam.net

கொழும்பினை தளமாகக் கொண்ட அரசாங்கத்தின் சட்டபூர்வத்தன்மையை சவாலுக்கு அழைக்கின்றது. இந்த அதிகாரபீடங்களுக்கான சவால்கள் பொதுவாக சமூகம், பிரதேசம் மற்றும் அரசாங்கம் என்பனவற்றிற்கு இடையே போதியளவு உறவுகள் இல்லாதபோது எழுகின்றது (பிர்சி 2001:61). பொதுவாக "தோல்வியடைந்த அரசுகள்'' என்றோ, "தாராளவாதமில்லாத சனநாயகம்'' (சக்காரியா 1997) என்றோ வகைப்படுத்தப்படும் இத்தகைய ஆளுமைப்புக்கள் சிலவேளைகளில் சனநாயக சிறப்புக்களுடன் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் அவை தேர்தல்முறைமை ஊடாகச் சென்றுள்ளன. ஆனால், பெரும்பான்மைவாத அரசாங்கத்தினை சன நாயகம் என்று கோருவதற்கும் (அதனால் அதன் சட்டபூர்வதன்மையிலும் உள்ளது என்பதற்கும்) வடக்குக்கிழக்கின் குறிப்பிடத்தக்களவு வீதமுள்ள குடிமக்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை எனவும் சட்டவிரோதமாக ஆளப்படுவதாகவும் எண்ணுவதற்கும் முரண்பாடுள்ளது. உண்மையில், சிறீலங்கா சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தின் வெளித்தெரியும் தனித்துவம் என்னவெனில் இது பெரும்பான்மையான காலம் அவசரகாலச்சட்ட அதிகாரங்களின் கீழ் ஆளப்பட்டுள்ளது.

ஜோன் ரெவல்சிற்குப் பிற்பாடு (1971) சனநாயகத்தின் முதல் கோட்பாட்டு கருத்துருவம் என்னவெனில், ஆளப்படுபவர்களின் உடன்பாட்டுடன் கூடிய கீழ்படிவு மற்றும் அடிப்படையான அரசியல் சுதந்திரம் - சட்ட ஒழுங்கின் கீழான அதிகாரப் பிரயோகம் போன்றன என்று நாங்கள் வாதிடுகின்றோம். இது சனநாயகத்தின் கூறுகளாகவுள்ள பிற (தனது நிறுவனமயப்பட்ட வெளிப்பாடுகளை பலவடிவ ஆளுமைகளில் கொண்ட) பல்வேறு காரணிகளையும் உள்வாங்கியதாக அமைகின்றது. மேலும் இந்தக் கருதுகோள்களில், போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்தும் காலகட்டங்களின் போதான சனநாயகமயப்படுத்தும் நெறிமுறைகளானது சனநாயக ஆளுமைகளை தாங்கிநிற்கும் உயரிய எண்ணங்களை உண்மையாக தாங்கியுள்ள போதும் இடைக்காலத்தில் பல்வேறு கட்டங்களின் ஊடாகவும், நிறுவன வடிவங்களின் ஊடாகவும் செல்லும். குமார் ரூபசிங்காவின் வரைவிலக்கணத்தினைப் பின்பற்றினால், சனநாயகமயப்படுத்தல் என்பது 'நிறுவனங்களை, பழக்கவழக்கங்களின் வடிவமைப்புக்கள் மற்றும் அரசியல், பண்பாடுகளை நாடுகள் உருவாக்குதல் மற்றும் அதிகாரப் பிரயோகங்களை கட்டுப்படுத்தல் என்பன போன்ற நெறிமுறைகளாகும்' (1998:215). எனினும், இன்றைய சனநாயகமயப்படுதல் தொடர்பான எழுத்துக்கள் மாற்றுநிலைப்படுத்தல் காலகட்டங்களில் நிறுவனங்களை கட்டுவது தொடர்பான குறைந்த கவனத்தினையே பெறுகின்றது. மேற்கூறிய விடயத்தினை மேலும் விரிவாக்கிப் பார்த்தால், புலிகளின் சிவில் நிர்வாகம் என்கின்ற குறிப்பிடத்தக்களவிலான நிறுவனம் கட்டும் நடவடிக்கைகள் சனநாயகமயப்படுத்துவதற்கான தகைமைகளைக் கொண்டது என்பது பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. குறிப்பாக, இந்த "வன்முறை ஒழுங்கிலான'' சமாந்தரநிலையானது, உயரளவில் அதிகாரபீடத்தினையும் - குறிப்பிட்ட பிரதேசங்களை இது கட்டுப்படுத்துவதாலும் - அதனுள் அடங்கும் பொருளாதார வளங்களாலும் - தனது சட்டபூர்வத்தன்மையை தனது பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பும், நல்வாழ்வு முறைமைகளையும் விநியோகிப்பதன் (பார்க்க அத்தியாயம் 5) ஊடாகப் பெறுவதன் பின்னணியில் இது முக்கியமானது. முற்றிலுமான அரசு என்பதுடன் ஒப்பிடுகையில் மிக ஆரம்பநிலையிலிருந்தாலும் தனது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் புலிகளின் சமாந்தர ஆளுமையானது சட்ட ஒழுங்கினை உருவாக்கியுள்ளதுடன் கட்டுப்படுத்துவதற்கும் - சமப்படுத்துவதற்குமான காரணிகள் மற்றும் சில சர்வதேச நெறிமுறைகள் மற்றும் வெகுமானங்களை மதிக்கும் நடவடிக்கைகளை கொண்டிருந்தது. புலிகளின் சிவில் நிர்வாக கட்டமைப்புக்களான சர்வதேச எதிர்பார்ப்பினையும், தராதரத்தினையும் எட்ட சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவகையில் குறிப்பிடத்தக்களவிலான மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு தேவைகளைக் கொண்டிருக்கின்றது. அது மறுபக்கத்தில், சர்வதேச நிபுணத்துவ தேவைகளையும், திறன்வளர்ப்பதற்கான ஆதரவையும் கோருகின்றது. எனினும், இது யதார்த்தத்தில் இயங்குகின்றனவற்றையும், அவை பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் வகிக்கும் பாத்திரத்தினையும் அடிப்படையாக ஏற்றுக்கொள்வதிலும் தங்கியுள்ளது.

---

[12]யோறிகோ அகபின்னுடைய 'விதிவிலக்கான அரசுகள்' எனும் இந்த உள்ளடக்கத்தில் முக்கியமானது. அதிக அரசுகள் சிக்கலான காலங்களில் விதிவிலக்கான சட்டங்களை திணித்து, ஈற்றில் அவை நிரந்தரமாவதால் சனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்குமிடையே மெல்லிய வேறுபாடேயுண்டு என்று அவர் விவாதிக்கின்றார். காலவரையற்ற சட்டஇடைத்தலே விதிவிலக்கான அரசினை தீர்மானிக்கும் கணங்களாகும். கிட்லர் வீமர் அரசமைப்பினை முறிக்கவில்லை - வெறுமனே மூன்றாவது றிச் காலம் முழுவதும் இடைநிறுத்தினார். சிறீலங்காவும் இத்தகைய விதிவிலக்கான அரசு எனும் கருத்துருவின் அடிப்படையிலேயே ஆளப்படுகின்றது. இந்த முறைகள் தற்காலிகமானவையால் விதிவிலக்கானவை. எனினும், விதிவிலக்கான அரசு நிலையாகியதுடன், சனநாயகம் விதிவிலக்கான சூழலில் சாத்தியமானதல்ல என்பதுடன் அரசுவின் கொடுங்கோண்மையுமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2.2 சட்டபூர்வதன்மை பற்றிய அவதானிப்பு

சட்டபூர்வத்தன்மை என்பது அடிப்படையில் சர்ச்சைக்குரிய கருத்துருவமாகும். நாங்கள் கோட்பாட்டாளர் களிக்கிடையேயான முரண்பாடுகளை தீர்க்கமுற்படவில்லை. ஆனால், மார்க்ஸ்வேபர் (1978:213-4) இனம் கண்ட சட்டபூர்வத்தன்மை என்பது நிலையானதும் தாக்கமுள்ளதுமான அரசியல் அதிகாரம் - அதிகாரத்திற்கு வழமையில் அடிபணிவதாக குறுக்கப்பட்டது என்பதை அடிப்படை கருத்துருவமாக வரித்துக் கொள்கின்றோம். வெபரின் சட்டபூர்வ தன்மை எனும் கருத்துருவமானது உள்ளடக்கத்தில் அதிகாரத்தினால் சொல்லப்படும் தனிநபரின் கடமை உணர்வு, கடப்பாடு அல்லது விதிகளின் கீழ் இடம்பெறல் வேண்டுமென்பதுடன், கட்டளை மற்றும் பிற விடயங்களாகும். சட்டபூர்வத் தன்மை நீடிப்பது அதிகாரம் நீதியானது என்று மக்கள் நம்பும்போது இடம் பெறுகின்றது என்று அவர் விவாதிக்கின்றார். மேலும் மூன்று வகையான சட்டபூர்வ ஆட்சிவகைகளைக் கோடிடுகின்றார்: மரபுரீதியான அல்லது பிரபுத்துவவகை - ஈர்ப்புமிக்கவகை - இயற்கையாகவே சட்டத்தன்மைமி க்கது. மரபுரீதியான அரசுகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை ஏனெனில் அவை எப்போதும் அப்படியானதாகும், அல்லது “பழமையான அங்கீகாரத்தின்” விளைபொருளாகும். ஈர்ப்புமிக்க வகைப்பட்ட அரசுகள் சட்டபூர்வமாக அமைவது அதன் ஈர்ப்புமிக்க தலைவர்கள் - கருணையின் கொடையால் - அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் ஒழுங்கின் அடிப்படையிலாகும். சட்டவழிப்பட்ட சட்டபூர்வத்தன்மையானது சட்டத்தகைமையின் அடிப்படையிலானதுடன் தர்க்கபூர்வமான உருவாக்கப்பட்ட சட்ட விளக்கங்களின் அடிப்படையில் செயற் படுதிறன் பெற்றது.

இந்த வகைப்படுத்தலின் அடிப்படையில், புலிகளின் ஆளும் உரிமை கோரலானது இரண்டாவது மற்றும் மூன்றாவது அடிப்படையிலானது. சட்டபூர்வத்தன்மை என்ற கேள்வியானது தலைமையின் அரசியல்வலு நிலையானதாகவும் - தாக்கமுள்ளதாகவும் சில ஒழுங்குகளில் இருப்பதுவே என்று கருதினால், தலைமைக்கட்டமைப்பு, பொது வெகுமானங்கள் மற்றும் கொள்கைகள் போன்ற அளவீடுகள் உடையதான ஒரு ஒத்திசைவான நிறுவன கட்டமைப்புக்கள் சட்டபூர்வ தன்மையின் இயல்புகளை வெளிப்படுத்தும்[13]. நாங்கள் புலிகள் சட்டபூர்வ ஒழுங்கினை - உள்ளக (சட்டஒழுங்கு), வெளியக (சிறீலங்காவின் தாக்குதல்களிலிருந்து) பாதுகாப்பு, நல்வாழ்வு, மற்றும் நீதிசார் பிரிப்பு அடிப்படையில் கட்டமைப்பதற்கான முயற்சிகளை பின்னர் பரிசோதிப்போம். எனினும், எவ்வாறு அரசியல் நிறுவனங்கள் மாற்றுநிலைப்படுத்தும் முயற்சிகள் மற்றும் நிறுவனத்தினும் முடிவெடுக்கும் முறைகளினை இணைந்து வடிவமைக்கின்றது என்பது சிறீலங்காவில் சர்வதேச சமூகம் முன்னெடுத்த சமாதானத்தினைக் கட்டுகின்ற முயற்சிகளினால் கண்டுகொள்ளப்படாது போனது என்பதை நாங்கள் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். மோதுகைக்கு பிற்பட்ட காலத்து சனநாயகத்தை உருவாக்கும் சர்வதேச முயற்சிகள் வழமையாகவே முன்வரையப்பெற்ற அணுகுமுறைகளை வரித்துக் கொள்கின்றன (டி சீவு 2005:481). இது ஒரு விவாதத்திற்குரிய செயற்திட்டமாகும். ஆனாலும் நல்ல ஆரம்பப் புள்ளி. எனினும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் என்ற விவகாரத்தில் இந்த விடயங்கள் ஒத்திசைவான பாங்கில் முயற்சிக்கப்படவில்லை[14]. இதனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிறுவனங்களை கட்டும் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு தர தயங்குவது தாக்கமுள்ள ஆட்சி முறையை நிலைப்படுத்தும் வாய்ப்புக்களை மட்டுப்படுத்தப்படுகின்றது என்பதுடன் அந்த பகுதிகளில் சனநாயக பொறுப்புணர்வை மட்டுப்படுத்துகின்றது.

டேவிட் கெல்ட் சுட்டிக்காட்டுவது போன்று 'அரசியல் என்பது அதிகாரம் பற்றியது. அது அவற்றின் சூழல், சமூகவியல் பௌதீக சூழலை பராமரிப்பதற்கும் மாற்றுநிலைப்படுத்துவதற்குமான சமூக முகவர்கள் மற்றும் முகவர் நிறுவனங்களின் திறன் சார்ந்தது. அது இந்த திறனைத் தாங்கி நிற்கும் வளங்கள் பற்றியது அது நிகழும் போது செல்வாக்கு செலுத்தும் சக்திகள் பற்றியது' (2005:311). இது எங்களை 2002 சமாதான நிகழ்வுகளின் அதிகாரம் சார்ந்த பரிமாணங்களை பார்ப்பதற்கு இட்டுச்செல்கின்றது. மூலோபாய சமநிலையானது பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு அவசியம் என்பது மோதல் தணிப்பு நிபுணர்கள் சமூகத்தினிடையேயுள்ள பொதுவான நம்பிக்கையாகும். அதிகார உறவுகளுக்கிடையே ஆதிக்கம் செய்யும் நிலையிலிருந்து கூட்டாகவும் பரஸ்பரம் வலுச்சேர்ப்பதாகவும் மாற்றுநிலைப்படுவதே பொதுவாக நீடித்துநிற்கும் சமாதான நிகழ்ச்சிகளுக்கான முன் நிபந்தனையாகும். வில்லியம் ஸ்ட்மான் அவதானித்தவாறு, மரபுசம-

---

[13] புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள நிர்வாக கட்டமைப்புக்களானது முற்றிலும் புலிகளின் ஏக ஆதீக்கத்தில் இல்லை. பொதுசனசேவைகள் (சுகாதாரம்,கல்வி,வலு மற்றும் நீர்வழங்கல்) சிறீலங்கா அரசு பொறிமுறைகளால் வழங்கப்படுகின்றன. புலிகளின் நிறுவனங்களால் பலகோணங்களில் பிரதிபலிக்கப்படுகின்றது. விரிவான வாதம் பார்க்க ஸ்ரோக் (2006).

[14] சில மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச உதவிகள் சமூக காவற்பணிகளுக்காக புலிகளின் காவல்துறை, நீதித்துறைக்கு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் இவை மாற்றுநிலைப்படுத்தலை ஆதரிப்பதற்கான விசாலமான மூலோபாயமாகவில்லாது துண்டுபட்ட, தற்காலிகமான முன்னெடுப்புக்களேயாகும். நோர்வே அரசு புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு நிதி உதவிவழங்கியது (அரசாங்க சமாதானச்செயலகத்திற்கும் நிதிவழங்கப்பட்டது). இவை தரப்புக்கள் பேச்சுக்களில் பங்கேற்பதை ஒருங்கிணைத்தல் என்ற உள்ளடக்கத்தில் வழங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையற்ற சூழலிலான பேச்சுவார்த்தைகள் முரண்நிலைஉண்மை கொண்டதாகும் - பேச்சுவார்த்தை நிகழ்வுகள் சமநிலை என்கின்ற நிபந்தனையில் சிறப்பானதாக இருக்கும். மேலும் தரப்புக்களிற்குப் பரஸ்பரம் எதிர்மறையான விளைவுகளை நிராகரிக்கின்ற உரிமை உள்ளபொழுது சிறப்பானதாக இருக்கும் (1995:8). 2002ம் ஆண்டு சமாதான முயற்சிகள் மூலோபாய சமாந்தரநிலை உருவாகியமையாலேயே சாத்தியமானது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது (போர்க்களத்தில் பாதிப்புள்ள அசைவற்றநிலை என்று வகைப்படுத்தப்படுகின்றது). சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நெறிமுறையில் புலிகள் இறங்கியமை சர்வதேசசமூகம் மோதலுக்காகக் காணப்படும் தீர்வினை ஆதரிக்கின்றது என்ற எண்ணத்திலாகும். சர்வதேச ஆதரவு பெற்ற மூன்றாம் தரப்பு அனுசரணை இல்லாதுவிட்டால், உதாரணமாக, ஏமாற்றும் - நேர்மையற்ற - விட்டுக்கொடுப்பற்ற தரப்பு எனத் தாம் கருதும் சிறீலங்கா அரசுவுடன் புலிகள் தீர்வு முயற்சிகளில் உள் நுழைந்திருக்கமாட்டார்கள்.

எனினும் 2002ற்கு பிற்பட்ட சர்வதேச கையாள்கையானது திட்டமிடப்பட்ட வகையில் இந்த சமநிலையை சிறீலங்கா அரசுக்கு சாதகமாக மாற்றியது எனப் புலிகள் கருதினார்கள். இயக்கத்தை[15] மீளமுடியாத அரசியல் ஓரங்கட்டலுக்குட்படுத்த சர்வதேச சமூகம் வகித்த பாத்திரம், சமாதான முயற்சி காலங்களில் சிறிலங்கா இராணுவத்தை குறிப்பிடத்தக்க அளவு ஆயுதரீதியாக பலப்படுத்தியது என்பனவற்றை சுட்டிக்காட்டுகின்றனர். முன்னாள் அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லுன் ஸ்டெட் (2007) அமெரிக்கா திட்டமிட்டவகையில் - "குறிப்பிடத்தக்களவு" இராணுவஉதவிகளை 2002 சமாதான முயற்சிகளின் ஆரம்பத்திலிருந்தே சிறிலங்காவுக்கு அதிகரித்து வந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றார். ஆர்வம்தரும் வகையில், அவர் 'இந்த நடவடிக்கைகள் சர்வதேச சமூகம் தங்களை ஓரம்கட்டி தங்களுக்கான வாய்ப்புக்களை குறைக்கின்றது என புலிகள் எண்ணுவதற்கு உதவியிருக்கலாம்' என்று (2007:18) ஏற்றுக்கொள்கின்றார். இது அரசுக்கான இராணுவ உதவி அதிகரிப்பு என்கின்ற விளைவினை மட்டும் தரவில்லை. மாறாக, 2003ல்[16] ஏப்ரலில், கொடையாளர்கள் மாநாட்டுக்கு முற்பட்ட வாசிங்டன் (புலிகள் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்) கூட்டத்திற்கு புலிகளை விலத்தி வைத்தமை, புலிகளை ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும் பயங்கரவாதத் தரப்பாக்கியமை போன்ற தடை நடவடிக்கைகள் இடம் பெற்றது. கொடையாளி நாடுகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்-குக்கிழக்கு பகுதிகளுக்கு "சட்டபூர்வ" பொறிமுறையின்மை என்னும் காரணங்களில் உதவிகள் வழங்க முடியாததன்மையும் அரசு சார்பு பாரபட்சம் என்கின்ற தோற்றத்தை பலப்படுத்தியது(பார்க்க கீழே அத்தியாயம் 7).

இந்த உருவாகிவரும் அரசியல் யதார்த்தமானது புலிகளை மூலோபாய சமநிலையை மீள உருவாக்-குவதற்கான ஒருதலைப்பட்ட மூலோபாயங்களை ஆரம்பிக்கத் தூண்டியது. இங்கு முதன்மையாக இராணுவத்தை கட்டியமைத்தல் உள்ளது. இது சமாதான காலத்தில் குறிப்பிட்ட அரசியல் மூலோபாயத்தை கைவிடத்தூண்டியது (வடக்குகிழக்குக்கான சர்வதேச ஏற்றுக்கொள்கையுடன் கூடிய இடைக்கால நிர்வாகம்). இந்த பாதுகாப்பு குழப்பநிலை உருவாகியதால், பொறுப்புணர்வுமிக்க கட்டமைப்புடன் (வடக்குக்கிழக்கிற்கான முழுமையான சிவில் நிர்வாகக் கட்டமைப்பு) கூடிய சனநாயக தரப்பொன்றை நோக்கி மாற்றுநிலைப்படுவதற்கான சாத்தியம் பின்தள்ளப்பட்டது. வடக்குகிழக்கிற்கான இடைக்கால சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்கான புலிகளின் முயற்சிக்கு இடையூறு செய்ததால் சர்வதேச சமூகம் சிறிலங்கா மோதல்களை மாற்றுநிலைப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் - நீடித்த, நீதியான தீர்வுக்கான பாதையையும் தவறவிட்டுவிட்டது. பயங்கரவாதம் மற்றும் அரசு இறைமை என்கின்ற கருத்தாடல்களுக்குள் அகப்பட்டு சர்வ-தேச சமூகம் தனது இலக்குகளின் முரண்பாடுகளுக்குள் அகப்பட்டுவிட்டது. அடிப்படை மனிதஉரிமைகள் உலகளாவியவை மற்றும் பிரிக்கமுடியாதவை என்று அது விவாதித்துக்கொண்டே, அதனை அடிப்படைக் குழுக்களின் உரிமையாக வடிவமைத்துப் பாதுகாப்பதில் தோல்விகண்டமையானது, தாராளவாத சனநாயக உள்ளடக்கத்தின் முக்கியமான முரண்நிலை உண்மைளை வெளிப்படுத்துகின்றது. சிறிலங்கா உள்ளடக்கத்தில், நீடித்த இனத்துவ அரசியல் மோதல்களை மாற்றுநிலைப்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவு தர மறுப்பதற்கும் - உறுதியான சனநாயக அரசியல் சூழலை உருவாக்குவதற்கு ஆதரவுதர மறுப்பதற்கும் வழிவகுத்தது.

---

[15] புலிகளின் அரசியல் மூலோபாயநிபுணரும், பிரதான பேச்சுவார்த்தையாளருமான அன்டன் பாலசிங்கம் 'துரதிஸ்டவசமாக சர்வதேச தரப்புகளின் அதீதமான ஈடுபாடும் அவர்களது சொந்த மூலோபாய நலன்களும், வலுவிரிவாக்கல்களும் மோதுகை தரப்புகளுக்கிடையேயான சமவலு நிலையை பாதிக்கத் தொடங்கியது. (அரசாங்கத்தின்) பெரிய திட்டமான சர்வதேச பாதுகாப்புவலை எனும் புலிகளை முடக்குவதற்கான மூலோபாயம் புலிகளை எச்சரிக்கையாக்கியதுடன் சமாதான முயற்சிகள் ஊடாக சர்வதேச பொறிக்கும் வீழ்த்துவது பற்றிய சந்தேகத்தினை ஏற்படுத்தியது.

[16] அங்கு புலிகளுக்கும், அரசுக்குமிடையே வடக்குக்கிழக்கு புனர்வாழ்வு மற்றும் மறுகட்டமைப்புக்களுக்கான சர்வதேச உதவிகளை இணைந்து பெறுவது என்ற உடன்பாடு காணப்பட்டது. 25நவம்பர்2002ல் இடம்பெற்ற முதலாவது சர்வதேச மாநாட்டில் இருதரப்பும் இணைந்து கலந்து கொண்டன. வாசிங்டனில் இரண்டாவது மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டமை புலிகளின் பங்குபற்றலை தடுத்தது. புலிகள் ஜுன்10,2003ல் டோக்கியோவில் (வாசிங்டன் மாநாடு இதன் முன்னோடியாக இருந்தது) இடம்பெற்ற மாநாட்டில் பங்குபற்ற மறுத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 3.சிறீலங்கா மோதுகை

தவிர்க்கமுடியாத வகையில் சிறீலங்காவின் மோதுகையின் மூலம், நோக்கம், குணாம்சம் என்பன விவாதத்திற்குரியதாகவுள்ளது. ஏனெனில் அது “காலத்தினூடு மாற்றம் கண்ட மற்றும் மௌனமாக்கப் படுகின்ற பல்வேறு சிக்கலாக்கப்பட்ட விடயங்களின் கலவை” (கோட்கான்ட் 2001:26-7) என்பதாலல்ல. சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதம்தரித்த போராட்டம் மற்றும் சிங்கள மேலாதிக்க அரசினால்[17] கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை - நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதம் என்பனவற்றிற்கு எதிராக தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போரை அவர்களது தாயகபூமியில் முன்னின்று நடத்துகின்றோம் என்று புலிகள் வாதிடுகின்றனர். சுருக்கமாக அவர்கள் “தேசிய விடுதலைப் போரினை” (பாலசிங்கம் 1983) நடத்துகின்றனர். மறுபுறம் தன்னை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சனநாயகம் என்று விபரிக்கும் சிறீலங்கா, புலிகளின் வன்முறையை அரசு அதிகாரத்திற்கும், ஒற்றுமைக்கும், பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் விடுக்கப்பட்ட பயங்கரவாத சவால் என்றும் விமர்சிக்கின்றது. அதனால் அரசு தான் “பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவதாக” உறுதிப்படக் கூறுகின்றது (இந்த உறுதிப்பாடானது அதனது இனத்துவ-மதவாத கருத்துருவங் களின் பகுதியாக உருவாகுவதாக சில கல்வியாளர்கள் கூறுகின்றனர்[18]). இத்தகைய மோதுகையுடன் தொடர்பு பட்ட இருதரப்பு பார்வையானது - இருதரப்பிலும் பிற ஆயுதம்தரிக்காத தரப்புக்கள் இருக்கின்ற போதும் - மோதுகையுடன் தொடர்புபட்டு பல்வகைப்பட்ட நிலைப்பாடுகள் (சுதந்திரம்,பிரிவினை, கூட்டாட்சி போன்றன) இருக்கின்ற போதும் மூலோபாய அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகள் ஊடாக புலிகளும், அரசுமே பிரதான தரப்பினராக இருப்பதற்கான நியாயங்களை உருவாக்குகின்றது[19].

புலிகளுக்கும் (80களின் நடுப்பகுதியில் பல்வகைப்பட்ட உள்மோதல்களின் பின் தனது மேலாதிக் கத்தினை தமிழ்போராளிகள் குழுக்களிடையே உருவாக்கிக் கொண்டது[20]) சிறீலங்காப் படைகளிற்கும் இடை யேயான போரானது மூன்று கட்டங்களாக (ஈழப்போர் என்று பொதுப்படக் கூறப்படுகின்றது) அதிகரிக்கப்பட்ட தீவிரத்துடனும், பிரதேச அளவிலும் ஈழப்போர்1 (1983-1988), ஈழப்போர்2 (1990-1994), ஈழப்போர்3 (1995-2002) என்பன இடம்பெற்றன. 2000-2001 போர்களில் புலிகள் மரபுவழி இராணுவ வடிவமைப்பினைப் பாவித்து அரசிடமிருந்து பெரும்பகுதி நிலத்தினைக் கைப்பற்றிக்கொண்டது. ஆயுதப் போரானது “கெரில்லாப் போராக ஆரம்பமாகிய போதும் 1998 அளவில் புலிகள் வடக்குக்கிழக்கில் பெருமளவு பிரதேசத்தினை கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்தவுடன்அது கெரில்லாப்போர் மற்றும் அரைகுறை மரபுவழிபோராகியது” (அருண் திலக2001:1484). 1999 காலகட்டங்களில் இருதரப்பும் பல்லாயிரக்கணக்கான படையினரை நவீனரக ஆயுதங் களின் ஆதரவுடன் தீவிரமான திட்டங்களுடனான போரில் ஈடுபடுத்திய போது முழுமையான மரபுவழி போ-ராகியது. 1990களில் புலிகளின் கடல் ஆயுதப்பிரிவான கடற்புலிகள் உருவாகி சிறீலங்கா கடற்படைக்கு சவால் விடுத்தனர். 2007ல் புலிகள் ஆயுதம்தரித்த இலகுரக விமானங்களைப் பாவித்து ஆரம்பநிலையிலான விமானப்படையினை வெளிக்காட்டினார்கள்.

பல்வேறு பேச்சுவார்த்தை முயற்சிகள் ஆயுதப் போர் ஆரம்பமாகியவுடன் தொடக்கப்பட்டது. 1985,1987, 1989-1990,1994-1995, மற்றும் 2002-2003களில் அவை இடம்பெற்றன. இவை எதுவும் இறுதித்தீர்வுக்கான முன்னேற்றத்தினை தோற்றுவிக்காத அதேவேளையில் நோர்வே அனுசரணையுடன் 2001ல் ஆரம்பமான

---

[17] புலிகள் (தமிழர் சுயாட்சியினைக் கோரிய அதே வேளையில்) தமிழர் தாயகம் ஒருதலைப்பட்சமாக பிரித்தானிய காலனித்துவத்தினால் சிங்கள தாயகத்துடன் சுதந்திரத்திற்கு முன்னர் இணைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினாலும், தமது போராட்டத்திற்கான நியாயத்தினை நிறுவனமயப்பட்ட பாகுபாடுகளின் ஊடாக முன்னிறுத்தினர் - கடந்தகால சுயாட்சியினையல்ல.

[18] புலிகளுக்கு எதிரான இராணுவநடவடிக்கைகளின் “நீதியான போர்” விடயத்தினை விவாதித்த திஸ்ஸ பார்த்தோலோமுஸ், எவ்வாறு ’(சிறீலங்கா அரசு) தனது போர்வீரர்களிடம் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மதக்கடமையாகக் கொள்ளுமாறு கேட்டனர்’ என்பதைக் குறிப்பிட்டார்.

[19] ரிஎம்விபி(கருணாகுழு) போன்ற புலிஎதிர்ப்புக்குழுக்கள் வடக்குக்கிழக்கு அரங்கில் தாங்கள் சுயாதீனமானவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் இந்தக் குழுக்களுக்கும், சிறீலங்கா இராணுவத்திற்குமிடையேயான ஒருங்கிணைப்பும், துணையாகச் செயற்படலும் தொடர்பான விரிவான ஆதாரங்கம் உள்ளன (மனிதஉரிமைகள் கண்காணிப்பகம்2007, றொக்2006).

[20] 1970களின் கடைசியில் 37 போராளிக்குழுக்கள் இயங்குவது பதிவுபெற்றாலும், அவற்றில் 5 தொடர்ந்த மோதல்களில் முக்கியத்துவம் பெற்றன: புலிகள், புளோட்(தமிழீழமக்கள் விடுதலைக்கழகம்), ரெலோ(தமிழீழ விடுதலை முன்னணி), ஈபிஆர்எல்எப் (ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி), ஈரோஸ் (ஈழபுரட்சிகர விடுதலை முன்னனி). சொல்லப்பட்ட இலக்கான விடுதலையை அடைவது என்கின்ற பொதுவான நிலைப்பாடு இருப்பினும், புலிகளுடனான முரண்பாடுகளின் பின்னர் பிற பிரதானகுழுக்கள் வீழ்ச்சியுற்று (80களின் பிற்பகுதியில் உருவாகிய இந்தோ-லங்கா உடன்பாடுகளின் பின்னணியில்) அவை தம்மை அரச ஆயுதப்படைகளின் சகாக்களாகினர். இது புலிகளை முன்னணி தமிழர் விடுதலை இயக்கமாக்கியது.

சமாதான முயற்சிகள் எப்போதுமில்லாத அளவில் நீண்டகால போர்நிறுத்தத்தினை உருவாக்கியதுடன் புலிகள் தங்களது அரசியல் இலக்கினை அடைவதற்கு வன்முறை சாராத நடவடிக்கைகளை தொடங்குவதற்கான இடைவெளியினைக் கொடுத்தது[21]. இந்தக் கற்கையின் பிற்பகுதியில் இந்த வழி மூடப்பட்டதற்கான பல்வேறு காரணத்தினைப் பார்க்கலாம். எனினும் இந்த மூடுதலே சமாதான முயற்சிகள் முற்றிலும் உடைவுறுவதற்கும், போர்நிறுத்தம் ஈற்றில் முறிவதற்கும் பெருமளவில் காரணமாகியது. இந்தப் பேச்சுக்களின் பிரதான நோக்கம் புலிகளைப் பொறுத்தவரை போரினால் சிதைவுற்ற வடக்குக்கிழக்கிற்கு ஒரு இடைக்கால நிறுவாகத்தினை ஏற்படுத்தி இயல்பு நிலையை உருவாக்குவதாகும்[22]. ஏற்கனவே எட்டப்பட்ட முடிவுகளை அரசு அமுல் படுத்துவதில் தோல்விகண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேச்சுக்களிலிருந்து 2003ல் புலிகள் விலகிக் கொண்டனர். மீளப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

## 3.1 முன்னைய நிகழ்வுகள்

பிரித்தானியாவால் சிலோன் என பெயரிடப்பட்டு மூன்று காலனித்துவ (போர்த்துக்கலிற்குப் பிற்பாடு நெதர்லாந்து) ஆட்சிகளுக்குப்பிறகு 1948ல் சுதந்திரமடைந்தது. 1972ல்[23] சிறீலங்கா என மீளப்பெயர் சூட்டப்பட்டது. மாங்காய்வடிவிலான தீவானது 270மைல்கள் நீளமும் 150 மைல்கள் அகலமும் அதன் நீட்டல் புள்ளியில் கொண்டிருந்தது. அங்கு சிங்கள (74), தமிழ் (18.2), முஸ்லீம் (7.4) இனத்துவக்குழுக்கள் உள்ளன. தமிழர்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். சிறீலங்கா தமிழர்கள் (12.6) மற்றும் இந்திய அல்லது மலையகத் தமிழர்கள் (5.6). பின்னைய வகுப்பினர் 1825அளவில் பிரித்தானியரால் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களாவார்கள். சிங்களவர்கள் பிரதானமாக பௌத்தர்கள், தமிழர்கள் இந்துக்கள். இருதரப்பிலும் கிறித்துவர்கள் உள்ளனர். ஆனால் “இருபதாம் நூற்றாண்டுகளில் மதம் இனத்துவத்தினை அடையாளப் படுத்துவதில் முக்கியத்துவம் பெற்றது..... 1948 சுதந்திரமடைந்த காலம் முதல் தனித்த சிங்கள பௌத்த வகையினர் அனைத்து பிற தரப்பினரையும் கோசத்தளவில் எதிர்க்கும் தனித்த - தனித்துவமான வகுப்பினராகினர்.. அவர்கள் பிற்பாடு பௌத்தர்கள் அல்லர், சிங்களம் பேசுபவர்கள் அல்லர்....சிலருடைய பார்வையில் உண்மையான சிறீலங்காக்காரர்கள் அல்ல (வின்சிலோ மற்றும் வுஸ்ட் 2004.5). தமிழர்கள் வடக்குக்கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராக இருந்தனர். சிங்கள பெரும்பான்மை மத்திய, மேற்கு, தெற்குப்பகுதிகளில் வாழ்ந்தது. முஸ்லீம்கள் நகர்புற பகுதிகளான மேற்கு, தென்மேற்கு மற்றும் கிழக்குக்கரையோரங்களில் காணப்பட்டனர். மலையகத்தமிழர்கள் மத்திய உயர்வலய தோட்டங்களில் வாழ்ந்தனர். எனினும் சுதந்திரத்திற்குப் பிற்பாடு ஏராளமான அரசு ஆதரவுடனான குடியேற்றத்திட்டங்கள் வடக்குக்கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பகுதிகளில் உருவாகியது (மனோகரன்1994).

இனத்துவம் தனதுபாட்டில் சிறீலங்காவின் மோதுகையிற்கு காரணமாக இருக்கவில்லை என்று கூறுவது விவாதத்திற்குரியது எனினும் அந்த பிரதான அடையாளத்தினைச் சுற்றியே சுதந்திரத்திற்கு முன்னரும், குறிப்பாக பின்னரும், அரசியல் பதற்றம் தூண்டிவிடப்பட்டது. கமிலா ஓர்யுலு சுட்டிக்காட்டியது போன்று சிறீலங்காவின் சனத்தொகையானது “வருடங்கள் ஊடாகத் துருவமயப்படுத்தப்பட்டு ஒப்பீட்டளவில் வரைவு செய்யப்பட்ட இனத்துவ குழுக்களாகிவிட்டது”(2003:202). அதேவேளையில் பல ஆய்வாளர்கள் இனப்பிளவுகளையும், பதற்றத்தினையும் உருவாக்குவதிலும், அதிகரிப்பதிலும் காலனித்துவத்திற்குப் பிற்பட்ட காலத்து அரசுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். உதாரணமாக சங்கரன் கிருஸ்ணா “அமைதியான, இலகுவான சிலோன் என்ற இடத்திலிருந்து மூர்க்கமான இனத்துவ வன்முறைகொண்ட இடம் என்கின்ற சிறீலங்காவின் பயணமானது, ஒரு பெரும்பான்மை சமூகம் அரசினை ஆக்கிரமித்து தனது எண்ணங்களுக்கு ஏற்ப வடிவமைப்பதுவும், அதன் பின்விளைவாக உருவாகும் இனத்துவ தேசியவாத இயக்கத்தின் உருவாக்கமும் என்கின்ற கதையேயாகும்.” (1999:31) என்கின்றார்.

சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்காக “சிலோனிற்கு” பிரித்தானியாவால் வரைவுசெய்யப்பட்ட அரசமைப்புச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கட்டுப்படுத்துவதற்கும் - சமநிலைப்படுத்துவதற்குமான வழிகள், புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசால் 900000 மலையக தமிழ் மக்களின்[24] குடியுரிமை

[21] இருதரப்பு உளவுத்துறைகளுக்குமிடையேயான நிழற்போர் எனும்வடிவில், குறிப்பாக 2004ற்குப்பிற்பாடு, வன்முறை தகிக்கத் தொடங்கியது. 2006ல் பகிரங்கப் போராகி 2008ல் அரசு போர்நிறுத்தல் உடன்பாட்டினை கைவிட்டது.

[22] அன்றைய சிறிலங்கா அரசின் மிகச்சிறிய பெரும்பான்மையானது அரசியல் மீள்கட்டமைப்பதற்கு தடையாகவிருந்தது என்று வாதிடுகையில், புலிகளின் தலைமை ’புலிகள் பங்குபற்றத்தக்க வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான’ பேச்சுக்களுக்கு அழைப்புவிடுத்தது. ஏப்.10,2001 ஊடகங்களுக்கான புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கருத்துக்கள்.

[23] சிறீலங்கா எனும் சிங்களப் பெயரும் சிங்கள,பௌத்த அரசமைப்பும் அவ்வாண்டு அமுல்படுத்தப்பட்டமை தமிழ்-சிங்கள பதற்றத்தின் பகுதியாகவுள்ளது. வசதிக்காக, சிறீலங்கா என்பது தீவினைக் குறிக்கவும், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட அரசினை குறிக்கவும் (காலகட்டங்களை கவனத்தில் கொள்ளாது) பாவிக்கப்படுகின்றது.

பறிக்கப்பட்டவுடன் தேய்வடையத் தொடங்கியது. அதேவேளையில் தமிழர்களின் வடக்குக்கிழக்கு பகுதிகளில் அரசு ஆதரவுடன் இடம்பெற்ற சிங்கள குடியேற்றத்திட்டங்களினால் (குறிப்பாக நீர்பாசனத் திட்டங்கள் ஊடான குடியேற்றங்கள் ஊடாக) தமிழர்களின் "பாரம்பரிய"[25] தாயகத்தின் சனத்தொகை விகிதம் துரிதமாக மாற்றமடையத்தொடங்கியது. சுதந்திரமடைந்து ஒருவருடத்தின் பின்னர் இந்த நிகழ்வுகளினால், குறிப்பாக தமிழர் பகுதிகள் குறுகிப்போவதால், அச்சம் கொண்ட இலங்கை தமிழ் காங்கிரஸின் ஒருபிரிவினர் தமிழரசுக்கட்சியினை உருவாக்கினார்கள். அதன் பெயர் வெளிப்படுத்துவது போன்று "பெரும்பான்மை தமிழ் பிராந்தியத்திற்கான உச்ச அளவிலான பிராந்திய சுயாட்சி - ஒற்றையாட்சி வடிவில் அல்லாது கூட்டாட்சி வடிவில் கோரினார்கள்" (கிருஸ்ணன் 1999:71). 1956 தேர்தல்களில் "சிங்களபௌத்த மேலாதிக்கவாத அரசினை அதிகாரத்திற்குக் கொண்டுவந்தமையும், அது அதேவருடத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தினை நிறைவேற்றியது" (குட்கான்ட் 2001:31) வரவுள்ள சிக்கலின் முதலாவது பிரதான வெளிப்பாடானது. இந்த சட்டமூலமானது (உத்தியோகபூர்வ மொழிச்சட்டம் என்கின்ற முறைமையான பெயரில்) ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களத்தினை அரச மொழியாக்கியது. இந்த நடவடிக்கையானது தமிழர்களை பாதகமான நிலைக்குத் தள்ளியது. குறிப்பாக அரச வேலைவாய்ப்பு விடயங்களில் தோற்றுவித்தது. குறிப்பிடும்படியாக, பிற சிங்களக் கட்சிகளும் - தோற்கடிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியும், இந்தச் சட்டத்தினை ஆதரித்தன. தொடர்ச்சியான தமிழர் எதிர்ப்பு சிறீலங்காவின் முதலாவது இனக்கலவரத்தினை தோற்றுவித்தது. 1956 தேர்தல்களானது தமிழரசுக்கட்சி "பெரும்பான்மையான வெற்றியினைப் பெற்று, கூட்டாட்சி வழிப்பட்ட சுயஅரசினை உருவாக்குவதற்கான தெளிவான அங்கீகாரத்தினைப் பெற்றது" (பாலசிங்கம் 2004:11).

"சிங்களம் மட்டும்" சட்டத்தினாலும் பிறவழிகளிலான நிறுவனமயப்பட்ட பாகுபாடுகளாலும் தமிழர்களுக்கு மோசமான பொருளாதாரப் பின்விளைவுகள் ஏற்பட்டன. தொடர்ச்சியான இரு தசாப்தங்களில் தமிழ் இளைஞர்கள் தமது வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள், குறிப்பாக அரசுதுறைகளில் குறுக்கலாக்குவதை கண்டனர். அன்று தீவின் பெரிய வேலை வழங்குபவராக அரசு திகழ்ந்ததால் புறக்கணிப்பானது தமிழர்களின் வாய்ப்புக்களில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியது. மேலும், பல்கலைக்கழக அனுமதிகளில் இனத்துவமுன்னெடுப்புடன் கூடிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டு, சிங்கள பெரும்பான்மைப் பகுதி மாணவர்களின் உள்நுழைவு தகைமை குறைக்கப்பட்டமை தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுவதை கடுமைப்படுத்தியது (வின்சிலோ மற்றும் வுஸ்ட்2004:36). மாற்றமடைய வைக்கமுடியாத சமூக பொருளாதார சூழல்கள் தமிழர் கிளர்ச்சி வளர்ச்சியடைத் தொடங்கியது என்பது இங்கு குறிப்பாக கவனிக்கத்தக்க விடயமாகும். தவிர்க்கமுடியாதவிதத்தில் "அங்கு குறிப்பிடத்தக்களவிலான தமிழர் எதிர்ப்பும் - பதிலீடாக (அரசு) அவசரகால அதிகாரங்களைப் பாவித்து தமிழர்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டன" (றோஸ் மற்றும் சவடா 1990:48). தமிழர்களின் எதிர்ப்பு பொதுமக்கள் எதிர்ப்பாகவும், ஒத்துழையாமை நடவடிக்கையாகவும் வடிவம் கண்டது. "சிங்களம் மட்டு" சட்டத்தின் பிற்பாடு (இருதசாப்தங்களின் பின்னர்) முதலாவது வன்முறை தழுவிய எதிர்ப்பின் அறிகுறி வெளிப்பட்டது.

972ல் நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசமைப்பு சிலோன் என்ற பெயரை சிறீலங்கா என்று மாற்றியதுடன் முன்னைய (பிரித்தானியவயப்பட்ட) அரசமைப்பில் எஞ்சிக்கிடந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அகற்றி சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டது போன்று பௌத்தத்திற்கு முக்கிய தகைமை வழங்கியது. அத்துடன் சிங்கள மேலாதிக்கம் உள்ள சட்டவாக்க சபைக்கு அதீதப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வழங்கியது (கொட்கான்ட் 2001:31). இந்த மாற்றங்களின் மத்தியில், ஓய்வற்றுத் தொடர்ந்த அரசு ஆதரவு பெற்ற சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்மக்களிற்கு "மேலும் மேலும் அதிக சிங்களவர்கள் தங்கள் மேலாதிக்கப் பகுதிகளில் ஊடுருவுவதால் தங்கள் பிராந்தியங்களில் தாங்கள் சிறுபான்மையாக்கப்படும் ஆபத்துள்ளது" (தம்பையா 1986:80) என்கின்ற அச்சத்தை ஏற்படுத்தியது. அந்த "தமிழர் பெரும்பான்மைப் பகுதியில் ஏற்படும் சனத்தொகைப் பலவீனப்படல் இனமோதுகை தணிப்புக்கான எந்தவித அதிகாரப்பரவலாக்கல் தீர்வுகளையும் அர்த்தமற்றதாக்கிவிடுகின்றது" (கெரிங் 2001:151) என்பது தமிழர்களின் கவனத்தினை ஈர்க்கத்தவறவில்லை[26]. இதனால் குடியேற்றங்களை எதிர்த்தல் போன்றன முக்கியமானதாகிவிட்டது. ஸ்ரான்லி தம்பையா சுட்டிக்காட்டியது போன்று "ஏனெனில் இவையே எதிர்காலத்தில் தமிழர்களின் பாதுகாப்பினையும், ஒருமைப்பாட்டினையும் உறுதிப்படுத்துவன வாகிவிட்டன. இதன் நோக்குநிலைப்பட்ட உண்மை எதுவாக இருப்பினும் மரபுவழித்தாயகம் எனப்படும் கோசமானது தமிழர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முதலாவதும் - முக்கியமானதுமாகிவிட்டது...

---

[24] இது பாரளுமன்றத்தின் 3 உள்தொடர்புகள் உள்ள சட்டமூலங்களால் அமுலாகியது - இலங்கை குடியுரிமைச்சட்டம் 1948, இந்திய-பாக்கிஸ்தான் குடியிருப்பாளர்சட்டம் (குடியுரிமை)1949, இலங்கைப் பாரளுமன்ற தேர்தல்கள் (திருத்த) சட்டம்1949.

[25] கிருஸ்ணன் மேலும் வாதத்தினை விரிவாக்குகையில் 'தமிழர்களின் பாரம்பரிய தாயகம் எனும் விடயமானது காலனித்துவத்திற்குப் பிற்பட்ட காலத்து தேசியவாதத்தினை கோடிட்டுக்காட்டும் சரியான காட்சியாகும்' (1999:68-73) தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் என்பது தொடர்பாக பார்க்க மனோகரன்(1994) மற்றும் கௌனி -மில்லர் (1987)

[26] றொனால்ட் கெயரிங்கின் குடியேற்றத்திட்டங்கள் பற்றிய ஆழமானகற்கையை பார்க்க - சர்வதேசரீதியாக பெரியளவில் நிதிஉதவி வழங்கப்பட்ட மாகாவலி திட்டம் உள்பட - தமிழ் சிங்கள பதற்றத்தினை அதிகரித்தது (2001:147-153)

www.tamilarangam.net

(மற்றும்) இது தமிழர்களின் சுயாட்சி வலியுறுத்தலுடன் தொடர்புபட்ட பிணையப்பட்ட விடயமாகிவிட்டது.'' (1986:80 அழுத்தம் சேர்க்கப்பட்டது.

மே1972ல் தமிழரசுக்கட்சியும், தமிழர் காங்கிரசும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியினை தோற்றுவித்தன. இது இலக்கு மற்றும் வழிமுறைகளில் அரசியல் உரிமைகளுக்கான தமிழர் போராட்டம் தீவிரவாதமாகுவதற்கான முன்குறியாகவிருந்தது. சுதந்திரத்திற்கும், அரசுரிமைக்குமான கோரிக்கை வெளிப்படையாக வளர்ச்சிகாண்கையில் தமிழர் போரட்டம் (பாலசிங்கம் 2004:18-21) அதன் நிழலில் கிளர்ச்சிகொள்ளத் தொடங்கியது. 1975ல் தமிழர் ஐக்கிய முன்னணி தனது பெயரை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்று மாற்றியமையானது "அதன் வெளிப்படையான பிரிவினைவாத நோக்கினை சுட்டிக் காட்டுகின்றது."(கிருஸ்ணன்1977:76). அது தெளிவான சுதந்திர ஈழ அரசுக்கான அழைப்பினை விடுத்தது. இது உயிரோட்டமானமுறையில் பிரபலமான 1976மே14 வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது. இது "தமிழர்கள் சிங்களவர்களிலிருந்து வேறுபட்டதும் - தனித்துவமானதுமானதொரு தேசியம்'' என்று குறிப் பிட்டதுடன் திட்டமிடப்பட்ட பாகுபாடுபற்றிய நியாயத்தினை வரைந்தது. இந்த தீர்மானமானது "சுதந் திரமானதும், இறைமையுள்ளதும், மதசார்பற்றதுமான சோசலிச தமிழீழத்தினை மீள்நிர்மாணம் செய்தல் .... இது தவிர்க்கமுடியாதவகையில் இந்தநாட்டின் தமிழர் தேசத்தின் இருப்புக்கு தவிர்க்கமுடியாததாகிவிட்டது'' (பாலசிங்கம் 2004:28 அழுத்தம் கொடுக்கப்பட்டது). இந்த தமிழ் தேசிய பிரஞ்ஞையின் வளர்ச்சியானது 1977 தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி "தமிழர் தேசத்தினை உருவாக்குவதற்கான ஆணையை பெறும் குறிப்பான நோக்குடன்" (பாலசிங்கம் 2004:29) போட்டியிட்டபோது உணரப்பட்டது. தமிழர்கள் மி கப்பெரும்பான்மையுடன் ஆதரவாக வாக்களித்து வடக்குக்கிழக்கில் 17 தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களை தேர்வுசெய்தனர். ஆனால், புலிகளின் கோட்பாட்டாளர் அன்டன் பாலசிங்கம் சுட்டிக்காட்டியது போன்று, இந்த முடிவுகளானது "முரண்பாடுகளுக்கான மேடையை ஒழுங்குபடுத்தியது: தமிழர்கள் பிரிவினையையும் இறைமையுள்ள அரசு என்கின்ற தனித்து இயங்குதலையும் கேட்டனர், சிங்கள ஆளும்கட்சி முற்றிலுமான அரசு ஆளுமையைக் கோரியது.... இனமோதுகை தீவிரமடைந்தது வெளிப்பட்டது.. முன்னெப் போதுமில்லாதவாறு (அரசு) வன்முறையை தமிழர்களின் மீது ஏவிவிட்டது.'' (2004:29).

இந்த கற்கையில் தீவு சுதந்திரமடைந்ததிலிருந்து இடம்பெற்ற இத்தகைய நிகழ்வுகள் தொடர்பான விபரமான ஆய்வுகளை உள்ளடக்கியதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. முதலாவது, இது காலனித்து வத்திற்குப் பிற்பட்ட காலத்து அரசு அமைப்பதற்கான குறிப்பான நெறிமுறைகளை கோடிட்டுக்காட்டு வதற்காகும். இதுவே 1970களின் நடுப்பகுதியில் "தமிழர்களின் அரசியல் அபிலாசைகளில் ஏற்பட்ட முக்கியத் துவமான நகர்வு எனப்படும் அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் கட்டமைப்பு மாற்றங்களிற்கான வேண்டுதலில் இருந்து தேசிய சுயநிர்ணய உரிமைக்கான உறுதிப்பாடு'' (டி.சில்வா 1998:154) எனும் விளைவை ஏற்படுத்தியது. இரண்டாவது, ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் இடம்பெற்ற தமிழர்களின் அமைதிவழி கிளர்ச்சி வரலாற்றினை முக்கியத்துவப்படுத்திக் காட்டுவது. பல்வேறு சமாதான உடன்பாடுகள் தமிழர் அரசியல் தலை மைகளுக்கும் அடுத்தடுத்து வந்த சிங்கள தலைமைகளுக்கும் இடையே எட்டப்பட்டன. எனினும், அனைத்தும் சிங்களத்தலைமைகளால் கைவிடப்பட்டது. வழமையாக சிங்கள கட்சிகளுக்கு இடையேயான இனத்துவ பேரங்களால் நிகழ்வதன் அடிப்படையிலேயே இதுவும் இடம்பெற்றது. மூன்றாவதாக, இது தமிழர் கோரிக்கை விரிவுபெற்றமையை பின்தொடர்வதற்காக செய்யப்பட்டது: நாடாளுமன்றத்தில் பாதுகாக்கப்பட்ட பிரதிநிதித்துவத்திலிருந்து, பிராந்திய சுயாட்சி (கூட்டாட்சி அடிப்படையில்) முடிவில் முற்றிலுமான சுதந்திரம். நாலாவதாக, எந்த வரலாற்றுப் பிற்புலத்தில் இன்றைய சர்வதேச சமூகத்தின் புலிகள் தொடர்பான எதிர்பார்ப்புகளான ஆயுதப் போரினை கைவிடுவது, தேர்தல் அரசியலில் ஈடுபடுவது மற்றும் ஐக்கிய இலங்கை க்கும் கூட்டாட்சித் தீர்வினை ஏற்றுக்கொள்வது என்பன அடங்குகின்றன என்பதை கோடிடுவது. அது தவிர்க்க முடியாதவிதத்தில் தமிழர் போராட்டத்திற்கான நியாயமான சமரசம் அல்ல - மாறாக, பின்னடைவு அல்லது பின்னோக்கி செல்லல் அல்லது சரணடைதல் என்று பார்க்கப்படும் என்பதை வரைவு செய்வதற்காக சொல்லப்பட்டது.

## 3.2 தமிழீழ விடுதலைப் புலிகள் (புலிகள்)

புலிகள் 1972ல் தோற்றம் கண்டனர். இது இதன் இன்றைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் உருவாக்கப்பட்டது. அப்போது இந்த அமைப்பு புதிய தமிழ் புலிகள் என்று அழைக்கப்பட்டது. மே5,1976ல் தன்னை தமிழீழ விடுதலைப் புலிகள் என மீளப்பெயர் சூட்டிக்கொண்டது. அது ஆரம்பத்தில் நகர்ப்புற கெரில்லா இயக்கமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது பரந்தளவு அடித்தளத்தினைக் கொண்ட "அரசின் ஒடுக்குமுறை அமைப்புக்கு தீவிரமான சவாலை தரக்கூடியவாறு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுத எதிர்ப்பியக்கமாக'' (எல்டிடிஈ 1988:9) மீள்கட்டுமானம் செய்யப்பட்டது. பிற்பாடு அது ஒரு நிரந்தரமான இராணுவமாக வளர்ச்சிகண்டதுடன், தமிழீழ சிவில் நிர்வாகத்தினை உருவாக்கியது. 1990முதல் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கடற்படைப் பிரிவை வளர்ச்சிகாண வைத்தனர். மற்றும் 2007ல் ஒரு ஆரம்பகட்ட விமானப்படையை வெளிக்காட்டினார்கள். இந்த இயக்கம் தன்னை தமிழர் விடுதலைப் போரின் தலைமையாகக் கருதுகின்றது. அரசியல் மாற்றுநிலைப்படுத்தல் எனும் அணுகுமுறையில் புலிகளின் சுயநிலை விளக்கம் அவதானிப் புக்குரியது: "எமது இயக்கத்தின் ஆயுதப் போராட்டமானது எங்கள் அரசியல் இலக்கினை சாதிப்பதற்கான ஒரேவழி... அதனால் புலிகள் அரசியலுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். அத்துடன் அரசியல் துப்பாக்-கிகளை இயக்குகின்றது என்பதை தூக்கிப்பிடிக்கின்றது" (எல்டிடிஈ).

அது பின்வருமாறு விவாதிக்கின்றது:
"தமிழர் தேசிய விடுதலைப் போரில் புலிகள் இயக்கத்தின் தோற்றம் புதிய வரலாற்றுப் பிறப்பாகும். அது அரசியல் போராட்ட நகர்வுகளை வெகுசன ஆயுதப் போராட்டமாக விரிவடையவைத்தும் - முன்னெடுத்தும் வருகின்றது. அரசியல் ஆயுதப் போராட்டத்திற்கான எமது ஈடுபாடானது அவதானமானதும், முன்னெச் சரிக்கையுடன் கூடியதுமான முறையில் எங்கள் சூழலுடன் தொடர்புபட்ட வரலாற்று மதிப்பீடுகளுடன் முன்னெடுக்கப்படும் வெகுசன போராட்டத்தின் வடிவமாகும். அது தமிழ்ப் பொதுசனம் மாற்றுவழியேதுமற்று புரட்சிகர எதிர்ப்பியக்கம் ஊடாக தனது தேசிய கோரிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற திடமான புறச்சூழலை முழுமையாகப் புரிந்து செய்யப்பட்டது"(எல்டிடிஈ1988:8).

1979ல் சிறீலங்கா அரசு புலிகளை பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கிரிமினல்வகைப்படுத்தியமைக்கு பதிலளிக்கையில், இயக்கம் மேலும் பிரகடனப்படுத்தியது:
"நாங்கள் புரட்சிகர அரசியல் செயல்முறைகளை வரித்துக்கொண்ட புரட்சியாளர்கள். நாங்கள் பாராளு மன்றத்திற்கு வெளியேயான மிக வலுவான தமிழர் விடுதலைக்கான விடுதலை இயக்கத்தினைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றோம். நாங்கள் விடுதலை, கௌரவம், மற்றும் நீதிக்காக உறுதியுடன் போராடும் மக்களின் கூட்டு உறுதிப்பாட்டின் போராட்ட வெளிப்பாட்டினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். நாங்கள் போராடும் மக்களின் ஆயுதம்தரித்த காவலர்கள். ஒடுக்கப்பட்டவர்களின் சுதந்திரப் போராளிகள். நாங்கள் எந்தவழியிலும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படப் போவதுமில்லை, அன்னியப்படப் போவதுமில்லை. ஆனால், பொதுசன உறுதிப்பாட்டில் இணைந்தும், கரைந்தும் தேசத்தின் கூட்டு ஆத்மாவுடன் இயங்குவோம்" (எல்டிடிஈ1979).

மேலும், அரசியல் விடுதலை தேசிய விடுதலைக்கான போரின் ஒருபகுதியாக இருப்பதுடன், புலிகள் "விடுவிக்கப்பட்ட" தமிழர் தாயகப் பகுதிகளில் அரசகட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். 1990கள் தொடக்கம் அது தொடர்ச்சியாக தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் சிவில்நிர்வாகக் கட்டமைப்பினை நிறுவிவருகின்றது. அது காவல்துறை, நீதித்துறை, நல்வாழ்வுமுறைகள், சுங்கம் என்பன போன்றவையும் இதற்குள்ளடங்கும். 1990களின் கடைசிமுதல் அது வளர்ச்சிகண்டு அங்கீகரிக் கப்படாத அரசு என்று விபரிக்கப்பட்டது (வில்சன் மற்றும் சந்திரகாந்தன் 1998 ஸ்ரோக்2006). இந்த கற்கைக்கு முக்கியமானதாகவுள்ளது என்னவெனில் 2002ல் நோர்வே அமைதி முயற்சிகள் ஆரம்பமானது தொடக்கம் புலிகள் தங்கள் சிவில் நிர்வாகத்தினை குறிப்பிடத்தக்களவு பலப்படுத்தி, விரிவாக்கம் செய்துள்ளனர். இதற்கு சமாந்தரமாக தமிழ் மக்களிடையேயுள்ள தமக்கான ஆதரவை தட்டியெழுப்பவும், வெளிப்படுத்தவும் சிறீலங்காவின் அரசியல் பொறிமுறையை பாவித்தது. உதாரணமாக 2001ல் பகைநிறுத்தத்திற்கு முதல் சிறீலங்காவின் நான்கு பிரதான தமிழ்கட்சிகள்[27] ஒரு கூட்டணியினை உருவாக்கி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள் எனக்கூறும் தேர்தல் பிரகடனத்தினை வெளியிட்டன. தொடர்ச்சியாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஏராளமான ஆசனங்களை 2001 தேர்தலில் வென்றதுடன் வடக்குக்கிழக்கின் பெரும்பாலான ஆசனங்களை 2004ல் தனதாக்கிக் கொண்டது[28].

---

[27] அனைத்திலங்கை தமிழ்காங்கிரஸ், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈபிஆர்எல்எப் (பிரேமச் சந்திரன் பிரிவு)

[28] ததேகூ 2001ல் 15 ஆசனங்களைக் கைப்பற்றியது,2004ல் 22. அங்கு 25 ஆசனங்கள் வடக்குக்கிழக்கிற்கு ஒதுக்கப்பட்டன. முற்றிலுமாக 225 ஆசனங்கள் பாரளுமன்றத்தில் உள்ளன.

# 4.தேர்தல் அரங்கம்

## 4.1 பெரும்பான்மை கொடுங்கோன்மை

1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது அது முன்னைய காலனித்துவ ஆட்சியாளர்களான பிரித்தானியாவின் தோற்றத்தையொத்த பாரளுமன்ற சனநாயகமாக வரையப்பட்ட அரசமைப்புடன் உருவாக் கப்பட்டது. சோல்பரி அரசமைப்பு தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்து வன என்பனவற்றை உள்ளடக்கியதாகவிருந்தது. ஆயினும் இவை அனைத்தும் பெரும்பான்மைவாத அரசியல் முக்கிய வீச்சாக உருவாகியபின்னர் கைவிடப்பட்டன. அரசின் "சிங்களமயப்படுத்தலானது" சுதந்திரத்திற்கு பிற்பட்ட அரசமைப்பினை (சிறுபான்மை பாதுகாப்பு விடயத்தில் பலவீனமாக இருந்தும் கூட) தோல்வியுற வைத்ததுடன் 1972ல் புதிய பெரும்பான்மைவாத அரசமைப்பொன்றினை உள்வாங்கிக் கொன்டது. தமிழ் மக்களின் மூலமான முறைப்பாடுகள் இந்த அரசியல் அமைப்பில் பதியம் வைக்கப்பட்டது. உதாரணமாக இது பெரும்பான்மையினரின் மதமான பௌத்தத்திற்கு 'முதல் மற்றும் முதன்மையிடத்தினை வழங்கியது'. சுதந்திரத்திலிருந்து 25 வருடங்களுக்குள் சிங்கள தேசியவாதத்தினால் நிகழ்த்தப்பட்ட இவ்வாறான அரசினைக் கைப்பற்றும் நெறிமுறையானது தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. சில கல்வியாளர்கள் சிங்கள தேசியவாத கருத்தாடல்கள்[29] பிரதான அரசியல் வெளியினை ஆதிக்கம் செலுத்தியதை ஆராய்ந்துள்ள போதும், பிறர் பெரும்பான்மைவாத அரசியலுக்கும் அறிவார்ந்த கற்கைகளுக்குமுள்ள தொடர்புகளை பிரதானப்படுத்துகின்றனர்[30].

சுதந்திரம் வந்தடைந்ததிலிருந்து சிறீலங்காவின் தேர்தல் அரசியலானது இனத்துவ அடிப்படையில் கட்ட மைக்கப்பட்ட கட்சிகளினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. 1924இல் கூட 'சிங்களவர்களே தேசிய நாடாளுமன்ற மற்றும் நிறைவேற்று பீடங்களினை ஆதிக்கம் செய்கின்றார்கள் என்பது அனேகமாக முடிந்த முடிவாகி விட்டது' (சாஸ்திரி 1994:211). புதிய பாரளுமன்றத்திற்கான முதலாவது தேர்தலில் சிங்களவர்கள் 67 சதவீத ஆசனங்களை கைப்பற்றினர் அது பிற்பட்ட தசாப்தங்களில் 80 சதவீதமாக சீராக ஏற்றம் கண்டது (கிருஸ்ணா 1999:67 -8). மேலும், 'தொகுதிகளுக்கான தனித்த உறுப்பினர் தேர்தல் முறையானது சிங்கள பெரும்பான்மை கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறீலங்கா சுகந்திர கட்சி என்பனவற்றிற்கு இடையேயான உச்சளவிலான போட்டி தோற்றம் பெறுவதற்கு ஊக்குவித்ததுடன் தமிழர்கள் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப் படுவது அதிகரித்தது' (சாஸ்திரி 1994:211). சிறீலங்காவில் பிளவுகளை நீடிக்க வைத்ததில் ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி மற்றும் பிற அரசியல் கட்சிகள் வகித்த பாத்திரத்தை அதிகப்படுத்திக் கூறமுடியாது. கிருஸ்ணன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

'அரசியல் அதிகாரத்தினை பெற்றுக்கொள்வது எண்ணிக்கை சார்ந்ததாக உருவான போது மூன்றில் இரண்டு சதவீத சனத்தொகையை சிங்கள பௌத்த வழிமுறையில் தமிழர்களுக்கு எதிராக அணிதிரட்டுவது எதிர்க்க முடியாததாகிவிட்டது. இரு பிரதான கட்சிகளான ஐ.தே.க, சு.க என்பனவற்றிற்கு இடையேயான பெரும்பான்மையினரின் விசுவாசத்திற்கான மோதல்கள் இறுக்கமானதுடன் இனத்துவ மேலாதிக்க அழைப் பானது நாளாந்த அரசியலில் வாடிக்கையாவிட்டது.' (1999.68).

உண்மையில், சிறீலங்காவில் எவ்வாறு 'அரசு கோட்பாடானது பெரும்பான்மை சமூகத்தின் அடையாளங் களுக்கு முன்னுரிமை கொடுத்தது' என்பதை அவதானித்த ஜொனாதன் குட்கான்ட் 'ஜனநாயகமும்

---

[29] நெவில் டேவேட்ட 'சிங்களம் மட்டும்சட்டம் (1956) மற்றும் (தமிழர் எதிர்ப்பு) கட்டவிழ்த்துவிடப்பட்ட இனத்துவப் பேரம்பேசும் பண்பாடு என்பன சிறீலங்காவில் பரவலான நிறுவனரீதியான பழுதிற்கு இட்டுச்சென்றதுடன் தமிழர்களின் பிரிவினை தாகத்தினை ஏற்படுத்தியது மேலும், இன்றைய நம்பிக்கைதராத இடையூறுகள் மோதுகை தணிப்பினை அனேகமாக இயலாதது ஆக்குகின்றது.

[30] கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூத்த அரசியல்விஞ்ஞானப் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட சுட்டிக்காட்டியது போல், 'எப்போது இனத்துவ விடயங்கள், அடையாள அரசியல் மற்றும் வன்முறை தொடர்பான கருத்தாடல்களில் வரலாற்றாசிரியர்களும், இலக்கியத்துறை பேராசான்களும் ஈடுபடுகின்றார்களோ அந்தளவிற்கு சிறீலங்காவின் அறிவார்த்த கட்டமைப்பு (குறிப்பாக சிங்களத்தினிடையே) அசைவற்றதாக-இனத்துவமிக்கதாக- அதிர்ச்சியூட்டுமளவு இடம்பெறுகின்றனவாக அமைகின்றது. வரலாறு, சிங்கள இலக்கியம் போன்ற கற்கைகளில் விமர்சனரீதியான ஞானம் உள்நுழைவதற்குப் போராடுகின்றது. இதனால் காலனித்துவத்திற்குப் பிற்பட்ட, சிறீலங்கா பெரும்பான்மைவாத தேசிய அரசுவினது உணர்வுபூர்வமானதும், தீவிரமானதுமான முகவர்கள் எனும் சிறப்புமிக்க நிலையில் உள்ளனர்' (1998:170). மேலும், 'சிறீலங்காவின் அனைத்து அரசியல் விஞ்ஞான கற்கையாளர்களும் எதிர்நோக்கும் பிரச்சனை என்னவெனில், அவர்கள் அரசியலுடன் தொடர்புபட்டவர்கள். அரசுடன் அதன் அண்மைய கட்டமைப்புக்களில் ஒரு ஆட்சி சார்ந்தோ அல்லது அதன் தலைவர்கள் சார்ந்தோ ஈடுபடுகின்றனர்' என்று குறிப்பிடுகின்றார்.

www.tamilarangam.net



இனவாதமும் ஒன்றுக்கொன்று உரமூட்டியது. தேர்தல் கணக்குகளினால் தூண்டப்பட்ட அரசியல்வாதிகள் இனத்துவ கோடுகளில் மக்களை அணி திரட்டினர்' (2001:32)என்கின்றார். இனத்துவ துருவமயப்படல் தவிர்க்க முடியாத விதத்தில் பின்தொடர்ந்தமைக்கு அப்பால் சிங்கள பெரும்பான்மைவாத கட்சிகளுக்கிடையேயான 'சிங்களமயப்படல்' தொடர்புபட்ட ஓயாத போட்டிகளானது மீளிணக்க முயற்சிகளுக்கு மற்றுமொரு பின் விளைவை ஏற்படுத்தியது. எரிக்மேயர் குறிப்பிட்டது போல் 'தொடர்ச்சியான சிங்கள அரசாங்கங்கள் (தமிழர்களுக்கு) சலுகைகள் வழங்குவது பற்றிய மேலோட்டமான எண்ணங்களைக் கொண்டிருந்தபோதும் அனைத்து வாக்குறுதிகளும் ஒன்றுமற்றனவாகி விட்டன. ஏனெனில் அந்தக் கணத்து எதிர்க்கட்சிகள் (அது ஐதேக அல்லது சுக இருந்தாலும்) தொடர்ச்சியாக இனத்துவ பேரம்பேசலை எழுப்பியே வந்துள்ளது'(1984:145). இன்றும் கூட நில் டிவோட்டாவின் கற்கை வெளிப்படுத்துவது போல் பேரம்பேசும் நிலைமையானது, மட்டுப் படுத்தப்பட்டளவிலான அதிகாரப்பகிரல்களுக்கான சிறீலங்கா அரசாங்க முன்னெடுப்புக்களையும் இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளையும் தொடர்ச்சியாக பலவீனப்படுத்துகின்றது (2004)[31].

இன்றைய சிறீலங்காவில் சிங்கள தேசியவாதம் தசாப்தங்களைக் கடந்த இனத்துவ மோதல்களுடன் மீளுற்பத்தி செய்யப்படுவது இனத்துவ அடிப்படைகளைக் கொண்ட அரசியல் கட்சிகளை உருவாக்குவதுடன் இனத்துவ அடிப்படையில் துருவமயப்பட்ட அரசியல், ஊடகம், பல்கலைக்கழக முறைமை மற்றும் சிவில் சமூகத்தினை உருவாக்கிவிட்டது (ஓர்யுலா 2003:199). மேலும் சுதந்திரத்திலிருந்து ஆறு தசாப்தங்களான பின்னரும் தேர்தல் போட்டிகளுக்கான பிரதேச எல்லைப்பிரிப்புக்கள் வடக்கு கிழக்குச் சிறுபான்மை வலு உறுதி படுத்தலினை தடுப்பதற்காக திரும்பத்திரும்ப மீளமைக்கப்பட்டது. புதிய அம்பாறை மாவட்ட உருவாக் கத்தினால் விளங்கப்படுத்தப்படுவது போன்று அல்லது திருகோணமலை மாவட்டத்தில் உருவாகும் புதிய உள்ளூர் அரச அமைப்புக்கள் போன்று தேர்தல் எல்லைக்கோடுகளானது திரும்பத்திரும்ப - மைய அதிகார விநியோகத்தில் சிறுபான்மை வாக்குத்திரள் தாக்கம் செலுத்துவதினை இல்லாதாக்குவதற்காக - மீளவரையப் பட்டன.. இது கிழக்கின் மூலோபாய பிரதேசங்களில் இடம் பெற்ற அரச ஆதரவு பெற்ற சிங்கள குடியேற்றங் களினால் பலப்படுத்தப்பட்டது.

புலிகளினை அரசியல் மாற்றுநிலைப்படுத்துவதற்கான கரிசனையுடன் தொடர்புபட்டவகையில் எழும் கேள்வி, ஏன் இயக்கம் சிறீலங்காவினுள்ளே தேர்தல் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை என்பதாகும். இந்த கேள்வியானது, 2001 மற்றும் 2004 பாராளுமன்ற தேர்தல்களில் புலிகளினால் ஆதரிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளடக்கிய பல தமிழ் கட்சிகள் பங்குபற்றியமையால் அதிகவலுப்பெறுகின்றது. தேர்தல்களில் பங்குபற்றுவது அரசியல் விடுதலைக்கும் அரசு உருவாக்கத்திற்குமாக போராடும் விடுதலை இயக்கங்களுக்கு உதவிடும் என்று பொதுவாக எண்ணப்படுகின்றது. தேர்தல்களில் பங்குபற்றுவது குறைந்தபட்சம் பொதுமக்கள் ஆதரவினை அணிதிரட்டுவதற்கும் - இயக்கத்திற்கான வெகுசன ஆதரவையும், தான் போராடும் சமூகத்தில் தனது கொள்கைகளுக்கான ஆதரவையும் வெளிபடுத்திக்காட்டுவதற்கு உதவிடும் என்று விவாதிக்கலாம். சட்டசபைகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது இயக்கமானது உள்நாட்டு மற்றும் பாராளுமன்ற ஆட்சிமுறையில் ஈடுபடுவதற்கும் - அதன் மூலம் அதற்குப் பிற வழிகளில் கிடைக்கப் பெறாத ஆதரவுதரும் பொறிமுறையினை (உதாரணமாக, அபிவிருத்தித்திட்டங்கள்) பெறுவதற்கும் உதவலாம். இறுதியாக 'பயங்கரவாதத்திற்கு எதிரான உலகப்போர்' என்று விவரிக்கப்படும் காலகட்டத்தில் ஆயுதம்தரித்த இயக்கமொன்று தேர்தலை வெல்வது சர்வதேச நியாயத்தன்மை வெல்வதற்கான வழியைத்தருகின்றது. புலிகள் சிறீலங்கா தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தடையாகவுள்ள கோட்பாட்டுரீதியான மற்றும் நடைமுறைகளை ஆராய்வது பெறுமதியானது.

## 4.2 கோட்பாட்டு இடையூறுகள்

தேர்தல்களில் போட்டியிடுவது வெகுசன ஆதரவின் அளவை அரசியல் பொறிமுறையில் வேறுபட்ட அபிப்பிராயங்களையும் வெகுமானங்களையும் இனங்காண்பதற்கு உதவிடும் என்று கொண்டால் அது பல்வேறுபட்ட நிலைப்பாடுகளையும் வெகுமானங்களையும் உள்ளடக்கியதொரு அடிமட்டக் கோட்டினை எடுப்பதில் ஆரம்பமாகின்றது. அரசியல் வடிவம் யாருடைய வாக்குகள் கேட்கப்படுகின்றன, எந்த நிலைக்கு (பாராளுமன்ற, உள்நாட்டு அரசாங்க, சனாதிபதி போன்ற இடங்களில்) மற்றும் தேர்தல் இடம்பெறும் பிரதேச எல்லைகள் (உதாரணமாக மாவட்டங்களின் அமைப்பு) என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

[31]பாலசிங்கம் எவ்வாறு புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் 'அமைதிப்பேச்சுக்களை அதன் நீடித்த இறுக்க நிலையிலிருந்து பாதுகாப்பதற்கான ஒரே கருவி கொழும்பின் இரு பிரதான சிங்களக் கட்சிகளான ஐதேக, சுக என்பனவற்றின் அதிகாரப் போட்டிகளுக்கும் அகப்பட்டு. சிங்கள ஆளும் உயர்குடியினரிடையேயான அதிகாரப்போட்டிகளில் இனத்துவ மோதுகையை கணித்த முறைகளில் துஷ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் அதிகாரம், செல்வாக்கினை முன்னெடுக்கவும், உச்சப்படுத்தவும் முயல்வது பேச்சுவார்த்தைவழிகள் தோல்வியுறுவதற்கான மையமான காரணமாகும்' என்கின்றார். (2004:462)

www.tamilarangam.net

ஆனால் சிறீலங்காவில் இவ்விரு அரசியல் விடயங்களும் இயற்கையாகவே மோதல்களின் மையத்தில் போட்டியிடும் விடயங்களாகிவிட்டன. தமிழர்கள் ஒரு தனித்த தேசியம் - இனங்காணப்பட்ட தமிழர் தாயகத்தில் வாழுகின்றார்கள் - சுயநிர்ணய உரிமை உள்ளது என்பன உறுதிப்படுத்தப்படுவதே மோதல்களை தணிக்கும் எனப் புலிகள் வலியுறுத்திவந்தனர். இந்த அடிப்படைகள் திம்பு கோட்பாடுகளில் தெளிவாக வலியுறுத்தப் பட்டன. இது 1985ல் இந்திய ஏற்பாட்டில் சிறீலங்கா அரசுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் பல்வேறு தமிழ் ப்போராளி குழுக்களால்[32] முன்வைக்கப்பட்டன.

திம்பு கோட்பாடுகள் பின்வருமாறு:

1. சிறீலங்கா தமிழர்கள் தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.
2. இனங்காணப்பட்ட தமிழர் தாயகம் மற்றும் அதன் பிரதேச ஒருமைப்பாடு உறுதிப்படுவது அங்கீகரிக்கப் படல் வேண்டும்.
3. சிறீலங்கா தமிழர்களின் சுயநிர்ணய உரிமை எற்றுக்கொள்ளப்படல் வேண்டும்
4. தமிழ் தோட்டத்தொழிலாளர்களின் குடியுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

திம்பு கோட்பாடுகளானவை இயல்பில் சுதந்திரத்திற்கும் அரசுரிமைக்குமான கோரிக்கையினை அவசி-யமாக உள்ளடக்கியிருக்கவில்லை. அவை ஒரு கூட்டாட்சி அல்லது இணையாட்சி அரசியலமைப்பிற்கான அடிப்படையாக அமையலாம். ஆனால் அவை இன்றைய சிறீலங்கா தேர்தல் முறை வடிக்கப்பட்டவிதத்திற்கு நேரெதிரானவை, ஏனெனில் அதுவொரு தனித்ததும் - கூட்டானதுமான தமிழ், முஸ்லிம், சிங்கள குடிமக்களைக் கொண்டதாகும். இவ்விரு அணுகுமுறைகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் முக்கியமானவை. ‘தமிழ் - சிங்களவர்களுக்கு’ இடையே அதிகாரப் பங்கீடு என்பது பேச்சுவார்த்தை நெறிமுறைகளிற்கு அடிப்படை-யாகவும், மோதலுக்கு தீர்வாகவும் அமையுமாயின் ‘கூட்டானவையின் இயைந்த வாழ்வு’ (‘தேசங்கள் என திம்பு கோட்பாடுகள் வகைப்படுத்துபவை) எனும் புரிதல் ஆரம்பப்புள்ளியாக இருக்கமுடியும். முரணாக, ஒரு ’ தனித்த சிறீலங்காவின் கூட்டு’ எனும் இன்றைய சிறீலங்கா ஒற்றையாட்சி அரசமைப்பினை தாங்கிப்பிடிப்பவை வெறுமனே அதிகாரப் பரவல் நெறிமுறைகளுக்கான வெளிகளையே (அரசு செயற்பாடுகளை உள்நாட்டு மயப்படுத்தல்) தரும். அவை அதிகார பங்கீடுகள் அல்ல. சுருக்கமாக சிறீலங்கா அரசமைப்பும், அரசியல் முறைகளும் தமிழர்களை ஒரு சொந்தத் தாயகம் கொண்ட தேசியமாக (உதாரணமாக, பிரித்தானியர்கள் ஸ்கொட்டிஸ் மக்களை அங்கீகரித்தது போன்று) அங்கீகரிப்பதில்லை. இது பிரச்சனையின் ஒரு பகுதியாகும்.

இரண்டாவதாக சிங்களம் ஆதிக்கம் செலுத்தும் அரசுக்கு எதிரான போரில் புலிகள் தங்களை தமிழர் தேசத்தின் பிரதிநிதிகளாக கருதுகின்றனர் - பல தமிழ் அரசியல் குழுக்களில் ஒன்றாக கருதுவதில்லை. ஏக பிரதிநிதித்துவம் என்ற கருத்துருவமானது சிலவேளை அதிகார பூர்வமான பிரதிநிதித்துவம் என்று வடிவப்படுவது ஆயுத மோதுகைக்கும் பேச்சுவார்த்தைக்கும் இடையேயான தொடர்புகளின் அடிப் படையிலாகும் (என்னவெனில் யார் போரிடுகின்றவனோ அவன் பேசுவது என்பதன் அடிப்படையிலானது). இனத்துவமயப்பட்ட சிறீலங்கா அரசிற்கு எதிரான ஆயுத போரினை தமிழர் சார்பாக நடாத்தும் ஒரே இயக்-கமாக தாங்களே உள்ளதாகப் புலிகள் விவாதிக்கின்றனர். காலனித்துவத்திற்குப் பிற்பட்ட காலத்து வரலாற்றில் தீவின் இன உறவுகளானது புலப்படுத்துவது என்னவெனில் சிறீலங்கா அரசு தமிழ் - சிங்கள மக்களிடையே அதிகாரப்பங்கீட்டு ஏற்பாட்டினைப் பற்றிப் பேசுவது புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் நேரடிப் பின்விளைவாகும். தமிழர் விடுதலை போராட்டத்தை கைவிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் சிறீலங்கா அரசுவின் ஒடுக்குமுறை கொள்கைகளை (கலகஒடுக்கல் நடவடிக்கைகளும் உள்ளடங்களாக) ஆதரிப்பவர்களாகவும் பங்குபற்றுபவர்களாகவும் உள்ளதால், தமிழர் பிரதிநிதித்துவத்தினை வெளிப்படுத்தும் தகைமை கொண்டவை யல்ல என்று புலிகள் விவாதிக்கின்றனர்[33].

சுயாட்சிக்கான அதிகாரங்களுக்கு உட்பட்ட அதிகார பங்கீட்டுக்கான தங்களது அளவீடுகளை தமிழர்கள் வெளிப்படுத்தவில்லை என்பதைப் புலிகள் ஏற்றுக்கொள்கின்றனர் (ஆயினும் 1977 தேர்தல் முடிவுகள் சுதந் திரத்திற்கான பரந்துபட்ட ஆதரவினை வெளிப்படுத்துகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றனர்). இவை தமி ழர்களுக்கும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும் (உதாரணமாக 2002இற்கு பிற்பாடு தமிழர்கள் தேசியவாத இயக்கங்களும் உருவாகிய கூட்டாட்சி மற்றும் முழுமையான சுதந்திரம் என்பது பற்றிய விவாதம்). சிறீலங்கா அரசமைப்பு மற்றும் அரசியல் முறைகள் தமிழர்களின் கூட்டுத் தமிழர் குரல் எழுவதை அனுமதிப்பதில்லை என்று புலிகள் விவாதிக்கின்றனர். (இதன் நடைமுறை கடினம் பற்றிய விவாதத்தினை கீழே காண்க). எவ்

---

[32] 1985ல் திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் ஈபிஆர்எல்எப்,புளோட்,ஈரோஸ்,ரெலோ,புலிகள் ஆகிய போராளிக்குழுக்களும், பாராளுமன்ற வழிப்பட்ட (போராளியல்லாத) தவிகூ ஆகிய ஆறு தமிழர் விடுதலை நிறுவனங்களும் பங்கேற்று இந்த தீர்மானத்தினை ஏகமனதாக ஒன்றுபட்டு ஆதரித்தனர்.

[33] அடிக்கடி எழுப்பப்படும் பேச்சுவார்த்தைகளில் தனித்த முஸ்லீம் பிரதிநிதித்துவம் என்றவிடயம் இந்தக் கற்கையின் பகுதியல்ல. இது தமிழர் போராட்டத்தினையும், புலிகளையுமே பிரதானப்படுத்தி ஆராய்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வாறாயினும், சிறீலங்காவின் நான்கு பிரதான தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகியமை, இவை வழங்கிய மட்டுப்படுத்தப்பட்ட சூழலில் இடம்பெற்றதாகும்.

மூன்றாவதாக, தமிழர்கள் தங்கள் குறைபாடுகளை தேர்தலில் பங்குபற்றுவதன் மூலமும் அமைதிவழியில் எதிர்ப்பதன் மூலமும் வெளிப்படுத்துவது தாக்கமற்றதாக இருந்தது என்ற வரலாற்றை புலிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அனைத்து தமிழ் கட்சிகளினதும் ஒன்றுபட்ட தனித்த அணியான தமிழர் விடுதலைக்கூட்டணி சுதந்திரத்திற்கான அழைப்பு என்ற தளத்தில் தமிழர் பிரதேசத்தை 1977 பொதுதேர்தல்களில் வெற்றி கொண்டமையானது இத்தகைய கடைசி நடவடிக்கையாகும். இத்தகைய பெருமுடிவுகள் இடம்பெற்ற போதும் சிங்கள தேசியவாத வெகுமானங்களும் கட்டுப்பாடும் 1978 அரசமைப்பில் மேலும் வலுவாக பதியப்பட்டதுடன் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் உள்ள சனாதிபதி முறையானது சாதாரண பெரும்பான்மை பெறுவதில் குறியாகவுள்ளவர் அமரவுள்ள பணிமனையில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. 1977 தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு முன்னர், தமிழரசுக் கட்சி தமிழர் வாக்குகளை திருப்திப்படுத்தும் விதத்தில் வெற்றி கொண்டது. ஆனால் இத்தகைய தேர்தல் முடிவுகள் எவையும் சிறீலங்கா தேர்தல் வழிப்பட்ட அதிகார விநியோகமுறையினால் தமிழர்களிற்குப் போதிய பேரம் பேசுவற்கான வலுவினைக் கூடத் தரவில்லை (சமநீதியுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை விட்டுவிடுவோம்). மேலும் தமிழ் தலைவர்களினால் சிங்கள தலைவர்களுடன் எட்டப்பட்ட சில உடன்பாடுகளும் ஒப்பிட்ட அளவில் அரசு புறக்கணிப்பின் சில விடயங்களிலேயே கவனம் செலுத்தியது. எதுவாயினும் ஒவ்வொரு உடன்படிக்கையும் சிங்கள தலைமைகள் எதிர்கொண்ட தேசியவாத கலகங்களால் முறிக்கப்பட்டது. இது தேர்தல் வழிப்பட்ட அரசியலினால் இனத்துவ சிக்கலை தீர்க்கலாம் என்பதிற்குக் கிடைத்த தோல்வி எனவும், முக்கியமாக அரசு வன்முறைகளினால் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மோசமடையும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தமிழர் போராட்டத்திற்கு வழிவகுத்தது என்றும் புலிகள் விவாதிக்கின்றனர்.

இங்கு மற்றுமொரு கோட்பாட்டு விவகாரமுள்ளது. அரசியல் விடுதலைக்காக போராடும் இயக்கம் என்ற அடிப்படையில் புலிகள் தங்களை பொதுவாகவொரு அரசு என்று கருதுகிறார்களே தவிர அரசியல் கட்சியாக கருதவில்லை. சுருக்கமாக, தமிழ் மக்களிடையே இதற்கான நியாயபூர்வத்தன்மையானது சிறீலங்கா தேர்தல் முறைகளின் கீழான தேர்தல் செயற்பாடுகளால் அல்லாது அதனது ஆட்சிமுறையின் தகைமையினால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று விவாதிக்கின்றனர். புலிகளின் நடவடிக்கைகளும் மூலோபாயங்களும் ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவதை நோக்கியில்லாது, ஆட்சிசெய்வது தொடர்புபட்ட நிறுவனங்களை நோக்கியதாக உள்ளது. இந்த நோக்கிலான விளக்கங்களானவை, மூலோபாய முடிவுகளை எடுப்பது தொடக்கம் தினசரி நடவடிக்கைகள் வரை அனைத்து மட்டங்களிலும் இடம்பெறும் செயற்பாடுகளில் பிரதிபலிக்கின்றது. உதாரணமாக புலிகள் கட்டுப்பாட்டு பகுதி மீதான சிறீலங்கா அரசின் பொருளாதார தடைகளும், பிற தடைகளும் அந்த பகுதிகளில் சுயநிறைவான தன்மையை உருவாக்கும் முயற்சிகளுக்கு வழிகாட்டியது. மாறாக தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அணிதிரட்டி இவற்றை நீக்க முயலவில்லை. (எனினும் இதுவும் இடம்பெற்றது)

இந்த காரணங்களினால் இன்று தேர்தல்கள் தமிழ்த்தேசிய அபிலாசைகளை சிறீலங்காவில் முன்னெடுப்பதற்கான வழிமுறையல்ல என்று புலிகள் விவாதிக்கின்றனர். சிறீலங்கா அரசமைப்பு மற்றும் அரசியலை தாங்கிநிற்கும் பண்பின் பின்னணியில் அந்த அரங்கில் நுழைவது, தேசிய சுயநிர்ணய உரிமை என்கின்ற தமிழர்களின் அடிப்படை வேண்டுதலில் பலத்த சமரசத்தை ஏற்படுத்துவதற்கு ஒப்பானது. இதனால் தமிழர் தேசத்தை சிறீலங்கா அரசியல் மற்றும் தேர்தல் நெறிமுறைகள் ஊடாகப் பிரதிநிதித்துவப்படுத்துவது சாத்திய மற்றது - அத்தியாவசியமற்றது. தொடர்ச்சியாக, சிறீலங்கா இனச்சிக்கலினை தாங்கியுள்ள மைய விடயங்கள் சிறீலங்கா அரசுவுடனான நேரடிப் பேச்சுக்கள் மூலமே தீர்க்கப்படலாம். இதன்விளைவாக சிறீலங்கா தேர்தல்களில் புலிகள் பங்குபற்றுவது எந்த தேவைகளையும் பூர்த்தி செய்யாது.

## 4.3 அரசியல் மற்றும் அரசமைப்பு இடையூறுகள்

சிறீலங்கா தேர்தல்களில் புலிகள் பங்குபற்றுவதை தடுக்கும் கோட்பாட்டுரீதியான நெருக்குவாரங்களுக்கும் அப்பால் பல சட்டரீதியான, அரசமைப்புசார்ந்த, பாதுகாப்பு மற்றும் பிற கடினங்கள் உள்ளன. இயக்கமானது தமிழர் சுயநிர்ணய உரிமையையும் விடுதலையையும் தேர்தல் முறைப்பட்ட வழியில் முன்னெடுப்பது என்று முடிவுசெய்துள்ளதாக வைத்துக் கொண்டால், இதற்கான மிகவும் சாத்தியமான தடைகளை மற்றும் அழுத்தும் இடையூறுகளை இந்த பகுதி பரிசோதிக்கின்றது. முதலில், 1978 அரசமைப்பின் 6வது திருத்தச் சட்டம் - இது 161வது சரத்தினை திருத்தியதுடன், 157ஏ சரத்தினை அறிமுகப்படுத்தியது என்பதை எடுத்துக்கொள்வோம்.

www.tamilarangam.net

இறுதியானது பின்வருமாறு பிரகடனப்படுத்துகின்றது:

1. எந்த நபரும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ - சிறீலங்காவிற்கு வெளியேயோ அல்லது உள்ளேயோ சிறீலங்கா பிரதேசங்களில் தனியரசினை உருவாக்குவதற்கு ஆதரவு - முன்னெடுப்பு - பரப்புரை - நிதி, ஊக்குவிப்பினையோ, சார்புவிவாதத்திலோ ஈடுபடக்கூடாது.

2. எந்த அரசியற்கட்சியோ, சங்கங்களோ, அமைப்புக்களோ தனது நோக்கங்களில் ஒன்றாக அல்லது இலக்குகளில் ஒன்றாக சிறீலங்கா பிரதேசங்களில் தனியரசை உருவாக்குவதை கொண்டிருக்கக் கூடாது.

சரத்து 157 ஏ மேலும் கூறுகின்றது,

4. எந்த நபரும் அத்தகைய அரசியற்கட்சி அல்லது சங்கங்கள், அமைப்புக்கள் என்பன தங்களது நோக்குகளில் ஒன்றாக அல்லது இலக்குக்களில் ஒன்றாக சிறீலங்காப் பிரதேசங்களில் தனியரசுவினை உருவாக்குவதை கொண்டிருக்கின்றது என்று பிரகடனப்படுத்துவதற்கு உச்சநீதிமன்றுவிடம் விண்ணப்பிக்கலாம்.

5. உச்சநீதிமன்றம் பந்தி (4)ன் கீழ் எந்த அரசியற்கட்சி அல்லது சங்கங்கள், அமைப்புக்கள் தொடர்பாக பிரகடனத்தினை வெளியிட்டால், அந்த அரசியற்கட்சி, சங்கம் மற்றும் அமைப்பு அனைத்துவழிகளிலும் தடை செய்யப்படுவதற்கு தகைமையானது.

சரத்து 157ஏ தாக்கம் உள்ள வகையில் புலிகள் (எந்த பிற அரசியற்கட்சிகளும்) விடுதலைக் கோரிக்கைகளை முன்னெடுப்பது சாத்தியமற்றதாக்கிவிடுகின்றது. இதனுடைய வரலாற்றைப் பார்க்கையில், சுதந்திரம் என்ற தனது இலக்கை கைவிடுவதாக வெளிப்படையாக புலிகள் அறிவிப்பது அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் செய்யப்படுதலே உச்சநீதிமன்றத்தில் எதிர்த்தரப்புக்களால் உடனடியாக அழைக்கப்படாமலிருப்பதற்கான வழியாகும். இதனால 6வது திருத்தச் சட்டமானது சிறீலங்கா அரசமைப்பின் கீழ் தமிழர்கள் தமது உள்ளக அல்லது வெளியக சுயநிர்ணய உரிமையை தேர்தல்வழிகளில் பெறுவதற்கான சாத்தியங்களை நிராகரிக்கின்றது.

இரண்டாவதாக புலிகள் சுதந்திர அரசிற்கான தனது இலக்கைக் கைவிட்டு, கூட்டாட்சி போன்ற உள்ளகசுயாட்சியை கேட்பது காப்பரண்கள் கட்டப்பட்ட சிறீலங்கா அரசமைப்பின் (அதாவது அதனை திருத்துவதற்கு தடையான உள்ளகக்காப்பு ஏற்பாடுகளால்)இயல்பினால் குறுக்கப்பட்ட தமிழர் கோரிக்கைகளே எட்டப்படுவதற்கு சாத்தியமற்றதாக்கி விடுகின்றது: அரசமைப்பானது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனது 225 ஆசன பாராளுமன்றத்தில் வேண்டுவதுடன் (தமிழ்பேசும் வடக்குக்கிழக்கு 25 ஆசனங்களைக் கொண்டது) நாடளவிலான சர்வசன வாக்கெடுப்பு மூலமான அங்கீகாரத்தை கோருகின்றது. இந்த மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற தேவையே சிங்கள பெரும்பான்மைகளின் கைகளில் அதிகாரங்களை கொடுத்துவிடுகின்றது. அண்மைக் காலங்களில் சனாதிபதி ஆட்சி முறையிலிருந்து தனித்த பாராளுமன்ற ஆட்சி முறைக்கு (இனச்சிக்கலுடன் எந்தவிதத்திலும் தொடர்பற்ற விடயமாகும்) மாறுவது கூட அடையப்பட முடியாததாயிற்று என்பதுடன் அரசமைப்பிற்கு வெளியான முறைகள் ஆலோசிக்கப்பட்டன. மேலும் தீவு தழுவிய சர்வசன வாக்கெடுப்பு என்கின்ற மேலதிக தேவையானது சிங்கள தேசியவாதிகளால் எந்த உடன்பாட்டையும் நிராகரிக்கமுடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஜெயதேவ உயன்கொட கூறியது போல் ’தமிழர் அரசியலிருந்து உருவாகும் எந்த நம்பகமான தீர்வு திட்ட முன்யோசனைகளும் சிங்கள அரசியல்கள் வர்க்கங்களின் எதிர்பார்ப்புக்கு மிகவும் அப்பாற்பபட்டதாகக் கருதப்படும்’ (2007:19). தமிழ்-சிங்கள தலைவர்களுக்கிடையே எட்டப்பட்ட எல்லா உடன்பாடுகளும் சிங்கள தேசியவாத ஆத்திரத்தினால் முறிக்கப்பட்டது என புலிகள் வாதிக்கின்றனர். இதனால் அரசமைப்பின் விட்டுக்கொடுப்பற்ற பிரிவுகளைக் கடந்து வருவது சாத்தியமற்றது என்றநிலையில் எந்த தீர்வு திட்டத்திற்கும் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட வழிகள் பின்பற்றப்படலே தீர்வினை அடைவதற்கான தவிர்க்கமுடியாத வழி என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

மூன்றாவதாக, அரசமைப்பானது அதற்குட்பட்ட பரவலாக்கல் யோசனைகளையும் கூடத் தீவிரமாக மட்டுப்படுத்துகின்றது. 13வது சட்ட திருத்தம் தொடர்பாக தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றமானது, பிரதேச சபைகளுக்கு (இதற்காகவே திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது) வழங்கப்பட்ட அதிகாரங்கள் அரசமைப்பின் கீழான எல்லைகளுக்குட்பட்டதாகவே இருக்கவேண்டும் என்று கூறுகின்றது. இறுதியாக பிரிவுகள் 2,3,4,75,76,82 என்பன இன்றைய இறுக்க நிலைகளைக் கொண்ட அரசமைப்பிடமிருந்து முழுமையாக பிரிந்து - அரசமைப்புசபையினை உருவாக்கி - புதிய சிறீலங்கா அரசமைப்பினை உருவாக்கும் சாத்தியங்களை தடுக்கின்றது. (தமிழ் மாறன் 2003).

அரசமைப்பை மாற்றுவது சாத்தியமற்றது என்பது வெளிப்படையாகியுள்ள நிலையில் - குறிப்பாக தமிழர்களுடன் அதிகார பங்கீடுகளைச் செய்யும் இனத்துவ உணர்ச்சிமிக்க விடயங்களில் சாத்தியமற்றது என்பதால் - இன்றைய மையப்படுத்தப்பட்ட அரசமைப்பின் கீழ் கொடுக்கப்படக்கூடிய அதிகாரங்கள் மட்டுப்படுகின்றது. மேலும் தமிழர்களின் அபிலாசைகளிற்கு விடுதலையே தீர்வென்பது கைவிடப்படல் (தேர்தல்களில் பங்கேற்பதற்கான தேவையான முன்நிபந்தனையாகும்) வேண்டும். புலிகளோ அல்லது பிற

தமிழ் தரப்பினரோ தமிழர்களின் உள்ளக அல்லது வெளியக சுயநிர்ணய உரிமையை தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் பெறுவதற்கு வாய்ப்புக்களேயில்லை. 2004 தேர்தல்களில் வடக்குகிழக்கை முழுமை-யாக வென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பானது புலிகளை ஏகபிரதிநிதிகளாகவும், அதிகாரபூர்வ பிரதிநிதிகளாகவும் முன்வைத்தமையால் அரசமைப்பினை மீறியதும் அதனால் போட்டியிடுவற்கு தகுதியற்றதுமாக மாறும் சூழலுக்கு அருகே சென்றது. இதனால் புலிகள் தங்களை பாராளுமன்ற நடவ-டிக்கைகளுக்கு அப்பாற்பட்ட இயக்கமாகவும், சிறீலங்கா அரசு அதனுடன் அதிகார பங்கீட்டுக்காகப் பேசுவது அர்த்தமும்ளதாகவிருக்கும் என்றும் கருதுகின்றனர். மாறாக, அனேகமான ஆதரவாளர்களாலும் - எதிர்ப்பவர்களாலும் புலிகள் தேர்தல் முறைக்குள் செல்வது தமிழர் சுயநிர்ணய உரிமையை “விற்றுவிடுவதற்கான” அல்லது “சரணடைவதற்கான” விடயமாக பார்க்கப்படும்.

இத்தகைய அரசமைப்பு விடயங்களுக்குப்பால் தமிழர் உணர்வுகள் தொடர்புபட்ட பிற நடைமுறை கடினங்கள் உள்ளன. அவை:

1. பாரியளவிலான தமிழர்கள் இடப்பெயர்வு. வடக்குகிழக்கில் நான்கிற்கு ஒரு தமிழர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவராக அல்லது வெளிநாட்டில் அகதியாக உள்ளார்கள். சிறீலங்கா இராணுவத்தினால் உயர்பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்ட பிரதேசங்களிருந்து பலர் வெளியேறிவிட்டனர்[34].

2. பாதுகாப்புக் குறைபாடு. அரச ஆதரவு பெற்ற துணைப்படைகளால் தொடர்ச்சியாகத் தமிழர் அரசியல் உரிமைக்காக செயற்படுவது இயல்பில் ஆபத்தானது. சிறீலங்கா அரசாங்கமானது துணைப்படைகளின் ஆயுதங்ளை களைந்தும் துணைப்படைகளைக் கலைத்து அல்லது தமது படைகளுக்கும் உள்வாங்குவதை போர் நிறுத்தல் உடன்பாடு கட்டாயப்படுத்தினாலும் எந்த நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. மேலும் 2002 முதல், தமிழ் தேசியவாதம் சார்ந்த நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களும் - செயற்பாட்டாளர்களும் இராணுவ உதவி பெற்ற துணைப்படைகளால் கொல்லப்பட்டனர். இவற்றுள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்நாட்டு பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் சிவில் சமூக நடவடிக்கையாளர்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் அடங்குகின்றனர். பல புலிகளின் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டனர்.

---

[34] 2002 போர்நிறுத்தல் உடன்பாட்டின் கீழ் சிறீலங்கா இராணுவம் பின்வாங்க வேண்டிய உயர்பாதுகாப்புவலயங்கம் 2002 டிசம்பர் பேச்சுவார்த்தைகளின் போது இராணுவம் கட்டுப்பட மறுத்ததால் தீவிரமான முரண்பாடுகளுக்கான பும்ளியாகியது.

www.tamilarangam.net

# 5.அரசுக்குள்-அரசு பற்றிய மேலோட்டம்[35]

இயன் ஸ்பெயர்ஸ் "அரசுக்குள்-அரசு" என்பது ஆரம்பநிலை அரசியல் வடிவம் எனவும் அது 'பெரிய அரசு ஒன்றிற்குள் தாக்கமுள்ளவகையில் பிரதேச கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதுடன் பல்வேறுவகைப்பட்ட கவரத்தக்க நிறுவன கட்டமைப்புக்களை கொண்டதாகவும், பிறபல்வேறு விடயங்களுடன் வரி வாங்கப்படுவதும் - சேவைகள் வழங்கப்படுவதும் - அனுமதிக்கப்படுவதும், பிற சர்வதேச தரப்புகளுடனான பரிமாற்றங்கள் நிகழ்த்தப்படுவதும் அடங்கும். எனினும், அவர்கள் அரசு போன்றது கொண்டுள்ள நீதி பரிபாலன தகைமையை கொண்டிருக்கவில்லை' (2004:16) .மேலும் அவர் 'அரசுக்கும்-அரசு இருப்பதற்கான ஒரே தகைமை என்னவெனில் சர்வதேச சமூகத்திடமிருந்து அங்கீகாரத்தினை பெற அல்லது பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் வெபேரியன் வரைவிலக்கணத்தின் அரசு தகைமைக்கான மூலக்கூறுகளை வெளிக்காட்டுவர்'(2004:17) என்று குறிப்பிட்டார். அவர் 'அரசுக்குள்-அரசு என்பது எப்போதும் அனுபவபூர்வமான விடயம்' என்பதை வலியுறுத்தியதுடன், 'முதலிலும் தவிர்க்கமுடியாதவிதத்தில் தெளிவாகவும் அரசுக்குள் - அரசு என்பது பகைமையுள்ள "அந்நிய அரசாங்கத்திற்கு" (அது மத்திய அரசாங்கமாகவும் இருக்கலாம்) எதிரான பாதுகாப்பு ஆதாரங்களை வழங்கும், அல்லது மாற்றீடாக மி கப்பலவீனமான அல்லது உடைவுறும் நிலையில் அரசு என்றநிலையில், தனிமனிதர்களின் நல்வாழ்வுக்கான தேவைகளை வழங்கும்' (2004:27) என்கின்றார். சர்வதேச சமூகத்திற்கான கொள்கை ஆலோசனைகளின் போது போல் கிங்ஸ்டனும் அயன்ஸ்பெயர்சும் 'முடிவாக அரிதான விடயங்களில் அரசுக்குள் - அரசானது சாத்தியமானவொன்றாகவும், முறையான அரசுடனான உறவுகள் மீளிணங்க முடியாத அல்லது ஒரு அரசு உடைவுறும் கட்டத்தில் இயங்குவதாக இருந்தால், சர்வதேச சமூகம் வேறு மார்க்கமின்றி அரசுக்குள் - அரசை சில வழிகளில் அங்கீகரிப்பதை பரிசீலிக்கும். ஆயினும் குறுங்காலத்தில் இந்த அங்கீகாரமானது நல்ல பொறுப்புணர்வுள்ள ஆட்சி அதிகாரத்தை உறுதிசெய்வதற்கான விவகாரமாக பிரயோகிப்பதற்கான ஒத்திவைக்க முறப்படும்' (2004:191). ஸ்கொட் பெய்க் என்பவர் அங்கீகாரமற்ற அரசு என்னும் கருத்துருவமானது பிரிவினையே இலக்காக உள்ள அல்லது 'இறையாண்மை அரசமைப்பின் சுதந்திரத்தை வரையறுப்பது' என்பதை 'துண்டான நிலப்பரப்பில் நடைமுறைக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள ஆனால் அரசியல் இலக்குகளோ அல்லது பிரிவினை மற்றும் இறைமை கொண்ட அரசு என்பன கொண்டிருக்காதவற்றுடன்' வேறுபட்டு நிற்கும் விடயங்கள் என்கின்றார்.

கிளிப் மற்றும் லுக்கார்ம் 'சிக்கலான அரசியல் அவசரத்தன்மைக்கான காரணங்கள் மோதல்கள் இனத்துவம் போன்று அரசியல்மயப்படுத்தப்பட்ட விடயங்களில் மட்டுமல்ல.. முன்னைய ஆட்சிமுறை தோல்வி சூழல்களிலும் உள்ளது' என்பதை சுட்டிக்காட்டி விவாதித்த குட்கன்ட் 'சிறீலங்காவின் சிக்கலின் இதயமானது அரசு சிக்கலே' என்று விவாதிக்கின்றார் (2001:30). மேலே கூறியவாறு இந்த சிக்கலின் குணாம்சமானது நிறுவனமயப்படல் மற்றும் சிங்கள பெரும்பான்மைவாத வீச்சு ஆழப்பதியப்பட்டதிலிருந்து ஊற்றுக்கொள்கிறது. தமிழர்களுக்கு எழுபதுகளின் நடுப்பகுதியிலும் கூட இது பொருளாதார அரசியல் ஓரங்கட்டலிற்கு வழி வகுத்ததுடன் குறிப்பிடத்தக்களவு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. சிமித் (2004) கூறியதைச் சுட்டிக்காட்டி ஸ்ரோக் மேலும் கூறுகையில் சமாதானத்தை கட்டி எழுப்புவது என்பது பாதுகாப்பு நல்வாழ்வு மற்றும் பிரதிநிதித்துவ விடயங்களில் அரச தோல்விகளுக்கு திட்டமிட்ட வகையில் தீர்வு காணல் என்பதை நிகழ்த்தலாகும் (2006:1025). 'எந்த நவீன அரசுக்குமான மூன்று மையமான செயற்பாடுகள்' பற்றி அவர் விபரிக்கையில் 'அரசைக்கட்டும் புலிகளின் நடவடிக்கையானது - சிறிலங்காவின் வடக்கு கிழக்குக்கான உள்ளக அல்லது வெளியக சுயாட்சி ஏற்பாட்டுடன் கூடிய அதிகாரபங்கீட்டிற்கான முன்னோட்டமாக களத்து யாதார்த்தமான இருதேசங்கள் என்பதை நிறுவனமயப்படுத்தும் அரசியல் எதிர் மூலோபாயம் ஆகும். '(2006:1026 அழுத்தம் கொடுக்கப்பட்டது). அரசு உருவாக்கும் திட்டமானது 'தமிழ்த்தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சுயநிர்ணய உரிமையை அதற்கு வழங்கும் அரசியல் திட்டத்துடன் நெருக்கமாக தொடர்புள்ளது' என அவர் விவாதிக்கின்றார். இயக்கத்தினை பிற தமிழ் அரசியல் தரப்புகளில் ஒன்றாக

---

[35] இந்த அத்தியாயமானது 2003-7வரை இதனை எழுதுபவர்கள் புலிகளின் தலைமையிலிருந்த தனிநபர்கள், நிறைவேற்று அதிகாரமற்ற நிலைகளைக் கொண்டவர்கள் மற்றும் சிவில்நிர்வாகத்தின் பலபிரிவுகளையும் சேர்ந்தவர்கள் (தமிழீழ நீதித்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, அரசியற்துறை, சமாதானச்செயலகம், இராணுவம்) எனப்பலரிடம் பெற்ற விரிவான நேர்காணல்கள் (இந்தக் கற்கைக்காகவும், கலாநிதி படிப்புக்காகவும்) அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும், இதனை எழுதுபவர்கள் வடக்குக்கிழக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் நேர்காணல்களை மேற்கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நோக்கியவாறு புலிகளின் அரசு கட்டும் திட்டத்தினை ஆய்வு செய்ய முடியாது. நடைமுறையில் தமிழீழ அரசு பொறிமுறையாக புலிகள் தங்களை பார்க்கின்றனர். அதாவது, தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்துவதற்கான காவியாகக் கருதுகின்றனர். இந்த சுய எண்ணமானது அடிக்கடி அதனது பல்வேறு நிர்வாக பிரிவுகளில் வெளிப்படுகின்றது. ( தமிழர் தேசத்தின் பாதுகாப்புக்காக பிற இயக்கங்கள் ஆயுதம் தூக்கியபோதும் சிறீலங்கா இராணுவத்துடன் மோதுகின்ற தாக்கமுள்ள தரப்பினர் தாங்களே என்கின்ற புலிகளின் வாதமானது இந்தவகையில் பார்க்கப்படல்). இந்த கற்கையானது புலிகளின் அரசு கட்டும் திட்டம் அரசியல் மாற்றுநிலைப்படுத்தலின் ஒரு வடிவம் என்ற ஸ்ரோக்கின் விவாதிப்பை மேலும் விசாலப்படுத்துகின்றது. ஆயினும் ஸ்ரொக்கின் விரிவான கற்கையானது புலிகளின் அரசு கட்டும் நடைமுறையை திட்டமிட்டு விவரிப்பதை உள்ளடக்கி இருந்தது. நாங்கள் இங்கு நிறுவனங்களை கட்டும் நடவடிக்கைக்கும் அரசியல் மாற்றுநிலைப்படுத்துவதற்கும் இடையேயான உறவுகளை பிரதானப்படுத்துகின்றோம்.

இங்கு முக்கியமான உள்ளடக்க கூறுகள் என்னவெனில், புலிகளின் அரசுகட்டும் திட்டமானது கடும் மோதல்கள் இடம் பெற்ற காலங்களிலே பெரும்பகுதி நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் 1980களின் நடுப்பகுதிகளில் வடக்கு யாழ்ப்பாண குடாநாட்டில் ஆரம்பமாகியது. 90களின் ஆரம்பத்தில் அனேகமான பிராந்தியங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் துரிதப்படுத்தப்பட்டது. இதன் அனுபவங்களும் - மாறுபட்ட விளைவுகளும் புலிகளின் சிவில் நிர்வாகம் மேம்பட்டு இன்று வன்னியில் உருவாக்க காரணமாயிற்று (சிறீலங்கா இராணுவம் 1995ல் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது). அரச கட்டும் திட்டம் இன்றும் தொடர்கின்றது. சிறீலங்கா இராணுவத்தின் குறிப்பிடத்தக்க, புலப்படாத வெளியக அச்சுறுத்தல்களின் உள்ளடக்கத்தில் அதன் மூன்று முக்கிய மைய நடவடிக்கைகளிலும் - பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் பிரதிநிதித்துவம் - தாக்கம் செய்கின்றது.

அரசுகட்டும் பார்வையில், இரண்டு காரணிகள் (அரசின்) பாதுகாப்புடன் தொடர்புபட்டவை: வெளியக மற்றும் உள்ளக காரணிகள். முன்னையது சிறீலங்கா படைகளிடமிருந்து “விடுவிக்கப்பட்ட” பகுதிகளை தற்காத்துக்கொள்வதற்கான இராணுவத்தை கட்டியெழுப்பலை உள்ளடக்கியது. அவற்றுள் நிலையான இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படை அடங்கும். எங்களுடைய பிரதான நோக்கம் அரசியல் மாற்றுநிலைப்படுத்துதல் என்பதால், நாங்கள் உள்ளக பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்துகின்றோம். அது இரு பரிமாணங்களைக் கொண்டது: வெளியக பாதுகாப்பிற்கு உதவுவது - சட்ட ஒழுங்கு அமுல்படுத்தல். சட்ட ஒழுங்கு தமிழீழ காவல்துறை மற்றும் தமிழீழ நீதித்துறையினரால் வழங்கப்படுவதாகும். காவல்துறையினர் “விடுவிக்கப்பட்ட” பகுதியெங்கும் திறக்கப்பட்ட காவல் நிலையங்களில் செயல்படுகின்றனர். அங்கு காவல்துறை பயிற்சிப்பள்ளிகள், நிர்வாக பணிமனைகள் மற்றும் இரசாயன பகுப்பாய்வு கூடங்கள் உள்ளன. நீதித்துறை கட்டமைப்பானது மாவட்ட நீதிமன்றங்கள், இரு உயர் நீதிமன்றங்கள், மீளாய்வு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் என்பவற்றை உள்ளடக்கியது. தமிழீழ குற்றவியல் ஒழுங்கு மற்றும் தமிழீழ சிவில் ஒழுங்கு என்பன முன்பிருந்ததை (அதாவது சிறீலங்கா சட்டங்கள்) அடிப்படையாகக் கொண்டு 1994ல் கொண்டுவரப்பட்டது. ஆனால், அவை சமூக விடயங்களான பெண்கள் உரிமை, சாதியமுறைமை போன்றனவற்றிற்கும் நீடிக்கப்பட்டுள்ளது. நீதவான்களும் சட்டத்தரணிகளும் சட்டக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

புலிகளின் நீதித்துறையானது இயக்கத்தை விமர்சிப்பவர்களால் சுயாதீனம் குறைந்தது என்ற நிராகரிக்கப்பட்டது. பிறர், நீதிமன்றங்களின் வடக்குக்கிழக்கு சிவில் சமூகம் சார்ந்த செல்லுபடித் தன்மையானது மக்கள் சிறீலங்கா நீதிமன்றத்தைவிட தங்கள் கோரிக்கைகளுடன் இங்கு வருவதில் அடங்கியுள்ளது என்கின்றனர் (ஸ்ரோக் 2006:1028). 1991ல் உருவாக்கப்பட்ட தமிழீழ காவல்துறையானது குற்றவியல் தடுப்பு, புலனாய்வு, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் போன்ற பாரம்பரிய காவல்துறை கடமைகளை கொண்டிருந்தது. 2002ம் ஆண்டு பகைமை நிறுத்தல், அதாவது போர்அற்ற தன்மை, சட்டங்களை மீள் தூய்மைப்பட உதவியது. மேலும், கடமையில் இல்லாத புலிகளும் உள்நாட்டு சட்டஒழுங்குக்கு கட்டுப்பாட்டிற்கும் கொண்டுவரப்பட்டனர். நீதித்துறை போன்று காவற்துறையும் ஊதியம் வழங்கப்படும் ஊழியர்களாவார்கள். அங்கு பொதுசன தொடர்பாடல்களுக்கான அழுத்தம் காணப்பட்டது: 'தமிழ்ப் பொதுமக்களிடையே அங்கீகாரத்தை ஏற்படுத்தவும் குற்றங்களை தடுப்பதற்கான மூலோபாயமாகவும் இது இருந்தது'. மேலும் குறைந்தளவிலான குற்றவிகிதத்துக்கு காவல்துறை கடமைகளை புலிகள் சுட்டிகாட்ட, புலிகளை விமர்சிப்பவர்கள், சமூக காவல் கடைமைகளிலும் பார்க்க சர்வாதிகார கட்டுப்பாடே காரணம் என்கின்றனர். எதுவாக இருந்தாலும் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் காவல்துறையும் நீதித்துறையும் உயரளவிலான சட்ட ஒழுங்கை பாதுகாப்பதுடன் அவை அதேவேளையில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் உள்நாட்டு பாதுகாப்பு அச்சில் அரசுவின் நிர்ப்பந்தப்படுத்தும் திறனை வலுப்படுத்துகின்றது என்று ஸ்ரொக் கூறுகிறார். 'இந்த நிறுவனங்கள் செயற்படும் பாங்கில் தமிழ் சிவில் சமூகத்திடையே அதற்கு அங்கீகாரம் கொடுக்கப்படுவதாக தோன்றுகின்றது. அத்துடன், புலிகளின் மேலாதிக்கத்திற்கு வடக்கு கிழக்கில் பங்களிக்கின்றது' (2006:1028) என்கின்றார். தமிழீழ காவல்துறையானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே

www.tamilarangam.net

நிறுவன மற்றும் திறன்களை கட்டி வளர்ப்பதற்கான உதவிகளை தாக்கமுள்ள சமூகக் காவல்பணிக்காக சர்வ-தேச தரப்பிடமிருந்து பெறுகின்றது. அவற்றுள் 2003ல் இரு டசின் காவல்துறை அதிகாரிகள் அயர்லாந்துக்கு கற்கை பயணத்தை மேற்கொண்டதும் உள்ளடங்குகின்றது.

சமூக நல்வாழ்வு புலிகளின் அரசகட்டுமான திட்டங்களில் "மைய இடத்தை" பெறுகின்றது. ஆயினும் அது உள்ளக - வெளியக பாதுகாப்பினை மேற்கொள்வதற்கு கீழ்ப்படிந்ததாகவுள்ளது (ஸ்ரோக் 2006:1029). நல்வாழ்வு பல்வேறுப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றது. அவற்றும் மனிதாபிமான மற்றும் சமூகமேம்பாட்டுக்கான உதவிகளை வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள், புலிகளின் சுகாதார மற்றும் கல்வித் திணைக்கழகங்கள் உள்ளடங்குகின்றன. புலிகளின் அரசு கட்டும் நடைமுறைகளின் ஆர்வமான விடயம் என்னவெனில், சிறீலங்கா அரசு நிறுவனங்களின் முக்கிய சமூக பிரிவுகளான சுகாதாரம் கல்வி போன்றனவற்றைத் தங்களது நல்வாழ்வு வழங்கலுக்கான கட்டமைப்புக்குள் உள்வாங்கிக்கொண்டதாகும். உண்மையில், முழுப்போராட்ட காலங்களிலுமே, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சிறீலங்கா அரசின் சிவில் நிர்வாகத்தை முற்றிலும் குலைக்காமல் தமிழீழ அரசுக்குள் உள்ளடக்கிக் கொண்டனர். மேலும் 'உள்நாட்டு அரச நிறுவனங்களின் பணிகளை தங்களது முன்னேற்றத்துக்காக பெற்றுக்கொண்டு சமாந்திரமாக மேலதிக நல்வாழ்வு திட்டங்களை உருவாக்கினர்' (ஸ்ரோக் 2006:1030). இது புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் சிறீலங்காவின் அரசு பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு இயந்திரத்தினை முற்றிலும் சீர்குலைத்தமையுடன் முரண்பட்டதாகும்.

புலிகளின் "பங்குதாரர்" அணுகுமுறையில், திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும் மையப்பட்டதாகவிருக்க - திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிறரால் மேற்கொள்ளப்படும். இது மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்திற்கும் - நவதாராளவாத அணுகுமுறைக்கும் இடையேயான தன்மை யினை பிரதிபலிக்கின்றது. அடிப்படையில் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச ஆதரவு கோரப்படுகையில் தமிழீழ அரசின் வளர்ச்சி அதனோடு சேர்ந்து முன்னேறுகின்றது. மேலும் நல்வாழ்வு தொடர்புடைய புலிகளின் நிறுவனங்கள் சர்வதேச தரப்புக்களுடனான (முக்கியமாகவும் முன்னணியாகவும் தமிழ்ப்புலம் அத்துடன் வெளிநாட்டு கொடையாளர்கள், சிறீலங்கா அரச நிறுவனங்கள் உட்பட) தீவிர ஈடுபாட்டினால் வகைப்படுத்தப்படுகையில், இவை தமிழீழ அரசு உருவாகுவதற்கான உப பாத்திரத்தை வகிப்பதாக பார்க்கப்பட்டது. இதற்கான விளக்கம், 'மனிதாபிமான உதவிகள் மற்றும் நல்வாழ்வு விநியோகம் போன்றன நிபுணத்துவ மேம்பாட்டு நிர்வாக விடயங்கள் என்ற கருத்துருவால் பலப்பட்டது - இது தெளிவாக மோதுகையுடன் தொடர்புள்ளதாகவும் ஆனால் தொடர்பு அறுக்கப்பட்டதாகவும் அமைகின்றது' (2006.1031) என ஸ்ரோக் வாதிக்கின்றார். 2002ற்கு பிற்பாடு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான நிறுவன ஆற்றல் மேம்பாட்டையும், தமிழீழ அரசு வேண்டி நின்றதுடன் அபிவிருத்திக்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கவும் கோரியது. சர்வதேச அளவில் கொடையாளிகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் புலம் என்பவற்றுடன் செயற்படுவதன் மூலம் உள்நாட்டு மட்டத்தில் நல்வாழ்வு - அபிவிருத்தி என்பனவற்றினை வழங்குவதற்கான அரசு திறனை குறிப்பிடத்தக்களவு விரிவுபடுத்துகின்றது(ஸ்ரோக்2006.1033). திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுக்கான பணிமனை 2004ல் உருவாக்கப்பட்டமையானது போர்நிறுத்தத்திற்குப் பிற்பாடு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் சென்றடைந்த புலத்து வளங்களையும், நிபுணத்துவத்தையும் ஒன்றுபடுத்துவதற்காகவேயாகும். 2004 டிசம்பர் சுனாமிக்கு பிற்பாடு புலத்தினர் வெள்ளம் போன்று வந்தமையால், திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு பணிமனை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்[36] என்பன வற்றை புனர்வாழ்வுக்கும் மற்றும் மீள்கட்டமைப்புக்கான முக்கிய காவியாகியது மட்டுமல்ல தமிழீழ அரசின் ஒருங்கிணைப்பையும் - வெளிவளப்படுத்தலையும் சிறப்பாக நிறைவேற்றியது.

புலிகளின் விமர்சகர்களால் முன்வைக்கப்படும் தமிழீழ அரசு பற்றிய மைய மற்றும் கடுமையான விமர்சனம் என்னவெனில், சனநாயக அரசியல் பிரதிநிதித்துவப்படுத்தலுக்கான தளமாக இது செயல் படுவதற்கான அளவு பற்றியதாகும். ஸ்ரோக் 'புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நிலவும் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சிமுறையானது வலுவான மையப்படுத்தப்பட்ட அரசும் சனநாயக பிரதிநிதித்துவத்துக்கான சில முறைசார் நிறுவனங்களும் ஆகும்' என்கின்றார். ஆனால் 'இந்தப் பலஅடுக்கு ஆட்சி வடிவமானது பங்குதாரர் ஏற்பாட்டுக் கூறுகளினால் மேம்படுத்தப்படுகின்றது, குறிப்பாக சமூக நல்வாழ்வு மற்றும் பொருளாதார மேம்பாடு விடயங்களில்' (2006.1035) என்று குறிப்பிடுகின்றார். அதனால், புலிகளின் அரசு 'மாற்றுநிலைப் படுத்துவதற்கான சாத்தியங்களை ஆட்சிமுறை நோக்கியதாக - சந்தை மற்றும் சிவில் சமூகத்தில் அரசு

[36]இது சிறீலங்கா அரசாங்கத்தின் சமூகசேவைகள் சட்டத்தின் கீழ் அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவுபெற்றது. தபுக தன்னை பாரபட்சமற்ற மனிதநேய நிறுவனமாகவும் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, அபிவிருத்தி, அவசரஉதவிகளை வழங்கும் நிறுவனம் என்கின்றது. இதற்கு வடக்குக்கிழக்கு எங்கும் கிளை பணிமனைகளும், திட்டங்களும் உள்ளன. இதனது தலைமைப் பணிமனை கிளிநொச்சியில் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒருங்கிணைப்பு மற்றும் அரசு சார்பற்ற தரப்புக்களின் அனுசரணை என்ற தளத்தில் - கொண்டுள்ளது (2006.1035) என்று ஸ்ரோக் வாதிடுகின்றார். புலிகளின் பார்வையில், தமிழீழத்திற்குள்ளான அரசியலானது சிறீலங்கா ஆயுதப்படைகளினால் தோற்றுவிக்கப்படும் புலப்படாத - நீடித்த குறிப்பிடத்தக்களவுமான வெளியக பாதுகாப்பு அச்சுறுத்தலின் உள்ளடக்கத்தில் இடம்பெறுகின்றது. முழுமையான சமாதான உடன்பாட்டுடனோ அல்லது உறுதியான பாதுகாப்பு உத்தரவாதப்படும் இடைக்கால நிர்வாகத்தினாலோ இத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல் அகற்றப்படுவதே சனநாயக வெளிக்கான நிபந்தனை என்று புலிகளின் ஆதரவாளர்கள் விவாதிக்கின்றனர். புலிகளை விமர்சிப்பவர்கள் இயக்கத்திற்கு மேலும் அதிகாரங்கள் கிடைப்பது சனநாயகத்திலும் பார்க்க சர்வாதிகாரத்தனத்தை உருவாக்கும் என்கின்றனர். ஆனால் புலிகளின் தற்கால குறைபாடுகள் என்னவாயினும் 'எதிர்கால அரசியல் மாற்றுநிலைப்படுத்தலுக்கான சாத்தியங்களை அவர்கள் கட்டாயமாக நிராகரிக்கவில்லை' (2006:1035). என்று ஸ்ரோக் குறிப்பிடுகின்றார். 2002ற்கு பிற்பட்ட புலிகளின் அரசியல் துறை பிரிவாக்கம், தமிழ்த் தேசியகூட்டமைப்பின் ஊடாக இயக்கம் தேர்தல்களை கையாண்டமை, மனிதஉரிமைகள் செயலணியினை உருவாக்க ஊக்குவிக்கப்பட்டமை என்பவற்றுடன் அதன் 'அதிகார பகிர்வு - திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுதல்களின் சமூக பங்குபற்றுதல்கள் போன்ற தோற்றம்பெறும் பரிசோதனைகள் ' (2006:1035-6) என்பன இந்த வகையிலான முக்கிய வெளிப்பாடுகள் ஆகும்.

www.tamilarangam.net

# 6.புலிகள் மற்றும் 2002அமைதி வழிமுறைகள்

நோர்வே அனுசரணையுடனான சமாதான நெறிமுறைகளே தீவின் நீடித்த மோதல்களில் இடம்பெற்ற மிகவும் நேரடியானதும் - ஒருங்கிணைக்கப்பட்டதும் - நீடித்து நிற்பதுமான சர்வதேச தலையீடாகும்[37]. ஒஸ்லோ முயற்சிகளானது 1999இல் மறைவான முறையில் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் வழிமுறையாக ஆரம்பமாகியது. மோதல்கள் புதிய உச்ச அளவை எட்டியிருந்த போதும், 2000ல் வெளிப்படையாக முறையான அனுசரணை நடவடிக்கையாகத் தோற்றம் பெற்றது. எனினும் நடுவான - வலதுசாரி, சந்தை சார்பு ஐக்கிய தேசிய முன்னணிக் (ஐதேமு) கூட்டணி டிசம்பர் 2001 பாராளுமன்ற தேர்தலில் பெற்ற குறுகிய வெற்றியின் பின்னரே நோர்வே சமாதான முன்னெடுப்புக்கள் உண்மையான அவதானிப்பினை எட்டியது. பலர் ஆச்சரியப்படும் வகையில் சமாதான முயற்சிகளானது கழுத்து முறியும் வேகத்தில் நகர்ந்தது. ஐதேமு வெற்றி பெற்ற சில நாட்களில் புலிகள் ஒருதலைப்பட்சமான ஒருமாத கால போர் நிறுத்தத்தினை அறிவித்தனர். புதிய அரசு அதற்கு உடனடியான பிரதிபலிப்பினைக் காட்டினார்கள். இரு முரண்பட்ட தரப்பினரும் பகை நிலமையிலிருந்து பரஸ்பர போர்நிறுத்த உடன்பாட்டினை இரு மாதங்களில் சென்றடைந்தனர். (அங்குமிங்குமாக நோர்வே இராஜதந்திரிகள் இதற்கான பேச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்). அப்போது தீவிரமான 'நல்லெண்ண' நடவடிக்கைகள் இருதரப்பிற்குமிடையே பெப்ரவரியில் இருந்து ஆரம்பமாகியது. அவற்றுள் கைதிகளை விடுதலை செய்தல், புலிகள் கட்டுப்பாட்டு பகுதிக்கான அரச தடைகளை நீக்குதல் என்பன உள்ளடங்கும். புலிகள் மீதான தடையை அரசு நீக்கியதும் உள்ளடங்கும். மேலும் பல்வேறு முரண்பாடுகள் மத்தியிலும் (பொதுவாக, போர் நிறுத்தல் உடன்பாட்டின் விரிவு பட்ட விடயங்களை அமுல்படுத்தாமை) புலிகளும் சிறீலங்கா அரசும் நேரடியாக (முகத்திற்கு முகமான) நோர்வே மத்தியத்துவப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். பிரதிநிதிகள்குழு மாதமொரு தடவை என்ற அடிப்படையில் 2002 செப்டம்பர் முதல் ஆறு மாதங்களில் தாய்லாந்து, நோர்வே, ஜெர்மனி மற்றும் ஜப்பானில் மூத்த நோர்வே அதிகாரிகள் தலைமையிலான பேச்சுக்களில் சந்தித்துக் கொண்டன. 2002 டிசம்பரில், பேச்சுவார்த்தை ஆரம்பமாகி 3 மாதங்களேயான நிலையில் (பகை நீக்கல் இடம் பெற்று ஒரு வருடங்களுக்கும்) இரு தரப்பும் கூட்டாட்சி முறையினை மோதலின் நிரந்தர தீர்விற்கான வழியாக முயற்சித்துப் பார்த்தலெனும் முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாட்டை எட்டியது.

ஆனாலும் அதே துரிதகதியில் உற்சாகம் கலைந்து சமாதான நெறிமுறையின் ஆர்வம் காணமல்போயின. தீவிரமடைந்த முரண்பாடுகள் மத்தியில் (குறிப்பாக சிறீலங்கா அரசாங்கமானது போர் நிறுத்த உடன்பாட்டிலும் முன்னைய உடன்பாடுகளிலும் உள்ள மனிதாபிமான விடயத்தை அமுல்படுத்தாமை பற்றிய புலிகளின் குற்றச்சாட்டு) புலிகள் ஏப்பிரல் 2003 இல் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக பின்வாங்கினர். எனினும் தொடர்ந்தும் தாங்கள் சமாதான நெறிமுறைகளுக்கான ஈடுபாட்டை தொடர்ந்தும் கொண்டவர் என்று கூறினர். நேரடிப் பேச்சுவார்த்தைகள் உடைவுற்ற போதும் நோர்வேயின் இராஜ தந்திரத்தினால் அங்குமிங்குமான சமாதான முயற்சிகள் - பிரதான விடயமாக கூட்டாட்சி பற்றிய அதிகார கட்டமைப்பிலிருந்து (அதாவது இறுதித்தீர்வு) இடைக்கால ஏற்பாடு பற்றியதாகவும் (புலிகளின் இடைக்கால தன்னாட்சி சபை பற்றிய யோசனைகள் உட்பட) பின்னர், 2004 டிசம்பர் சுனாமி பேரழிவுகளின் பிற்பாடு சுனாமி முகாமைத்துவத்திற்கான நடவடிக்கை கட்டமைப்பு உட்பட உதவிகளையும் பகிரும் பொறிமுறைகள் தொடர்பாகவும் தொடர்ந்தன. 2004 முதல் நோர்வே சமாதான நெறிமுறைகளானது அதிகரித்துத் தொடர்ந்த வன்முறை சுழற்சிகளால் உடைவு பெறத்தொடங்கியது. நாங்கள், நோர்வே சமாதான நெறிமுறையில் புலிகள் தனித்தவொரு தேவையுடனேயே உள்நுழைந்தாரென்று விவாதிக்கின்றோம். அது வடக்குகிழக்கிற்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதும், அந்த நிர்வாகத்தில் தமக்கு முதன்மையான பாத்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச அங்கீகாரத்திற்குரிய களநிலையை தயார்செய்வதுமேயாகும். இதனால் நோர்வே சமாதான முன்னெடுப்புகளானது புலிகளை பொறுத்தவரை ஆயுத எதிர்ப்பியக்கம் என்பதிலிருந்து இடைக்கால ஆட்சிமுறைக்கு மாற்றுநிலைப்படுத்தல் எனும் முக்கியமானதொரு மாற்றுநிலைப்படுத்தும் முன்முயற்சியாகும். இந்த முனையில், எதிர்பார்க்கப்பட்ட தனது அரசு-கட்டமைக்கும் திறனை விரிவாக்கம் செய்தல் என்பதற்கும் அப்பால் புலிகள் பல்வேறு முக்கிய அரசியல் மூலோபாயங்களை கையாண்டனர்.

---

[37] இது 1980களின் கடைசியில் இடம்பெற்ற இந்திய இராணுவ தலையீட்டிற்கும் அப்பால் தரப்புக்களின் எண்ணிக்கை, வகைகள், ஈடுபாட்டின் ஆழம் என்பனவற்றில் சென்றுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவை,

1. சர்வதேச கண்காணிப்புடன் கூடிய நிறைவான போர்நிறுத்த உடன்பாடு ஒன்றிற்குள் சிறீலங்கா அரசுடன் 2002ல் உள்நுழைதல் - அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் தமது அரசியல் பிரிவினருக்கு அனுமதி வழங்க வேண்டும் என்பதை போர் நிறுத்தல் உடன்பாட்டில் உள்ளடக்க வலியுறுத்தல்.

2. நோர்வே அனுசரணையுடன் உயர் மட்டளவிலான பேச்சுவார்த்தைகளை சிறீலங்கா அரசுடன் நடத்தல் - தமது வழங்கல் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு இரு டசின் உறுப்பினர்கள் கொல்லப்பட்ட பிற்பாடும் கூட பேச்சுக்களை தொடரல்.

3. அரசுடன் இணைந்த கூட்டு பொறிமுறைக்கு உடன்படல் (உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழு (சிரான்), பதட்ட தணிப்பு மற்றும் இயல்பு நிலைப்படுத்தலுக்கான உபகுழு, பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழு)

4. போரினால் அழிவுபெற்ற வடக்குக்கிழக்கு பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமான உதவி களுக்கான சர்வதேச ஆதரவு பெற்ற உதவிகளிற்கு நேரடியான முடிவெடுக்கும் பாத்திரத்தை கேட்டல்.

5. மனித உரிமைகள் மற்றும் வயது குறைந்தோரை படையிலிணைக்கும் விடயங்கள் தொடர்பான சர்வதேச விமர்சனங்களை கையாளல். (உதாரணமாக மனித உரிமைகள் பிரகடனத்தை சிறீலங்கா அரசுடன் பேசுதல், யுனிசெவ்வின் நடவடிக்கை திட்டத்திற்கு உடன்படல். வடக்குக் கிழக்கு மனிதஉரிமைகள் செயலணியை -நிசோர் - உருவாக்கல்.)

6. கூட்டாட்சியை நிரந்தர தீர்வுக்கான சாத்தியமான வழியாக முயன்று பார்ப்பதற்கு உடன் படும் அதே வேளையில் இடைகால நிர்வாகத்திற்கான அழுத்தங்களை கொடுத்தல். 25 உறுப்பினர்களை கொண்ட குழுவை பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் வேறுபட்ட கூட்டாட்சி வழியிலான ஆட்சிமுறை பற்றிய நடைமுறை விடயங்களை பரிசோதிப்பதற்காக அனுப்புவதும் தென்னாபிரிக்க தேர்தல்களில் அந்நாட்டு அரசின் அழைப்பில் கண்காணிப்பாளராக கலந்து கொண்டமையும் உள்ளடங்கும்.

7. சுயாதீனமாக முன்னெடுக்கப்பட்ட சிறீலங்காவின் நான்கு பெரிய தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு ஒற்றைத்தளத்தில் ஒன்றுசேர்ந்தமையை, தமிழர் நலன்கள் அடிப்படையில் ஆதரித்தல். இடைக்கால நிர்வாகம் மற்றும் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளல் என்பன போன்றன அத்தகைய நலன்களாக அமைந்தன.

8. பிற சிறுபான்மையின சமூகங்களான மலையக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் அரசியல் கூட்டமைப்பினை தேடல். முஸ்லீம் சமூகத்துடன் மீளிணக்க நெறிமுறையில் ஈடுபடல் (அவற்றும் புலிகளின் தலைமைத்துவத்தின் பகிரங்க மன்னிப்பு கோரல் மற்றும் உள்நாட்டு மசூதி கூட்டமைப்புக்களும் புலிகள் இயக்க உறுப்பினர்களும் கொண்ட களமட்டத்திலான கூட்டுறவு குழுக்கள் என்பன அடங்கும்)

9. புலம் சார்ந்த மற்றும் பிற சட்டவியல் மற்றும் பிறவிடயம்சார் தொழில் நிபுணர்களுடன் இடைக்கால தன்னாட்சி அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பு (ஐஎஸ்ஏ) தொடர்பாக விரிவான நீடித்த ஆலோசனை நடவடிக்கைகள் மேற்கொள்ளல் இதுவே புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால அல்லது நிரந்தர தீர்வுக்கான உறுதியான யோசனைகளாகும்.

10. புலிகளின் அரசியல் பிரிவை விரிவாக்கம் செய்தல். அவற்றும் வடக்குகிழக்கு அரசு கட்டுப்பாட்டு பகுதிகளில் அரசியல் பணிமனைகளை உருவாக்குவதும் அடங்கும். இதன் மூலம் அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை யோசனைகள் பற்றிய பொதுசன விழிப்பை திட்டமிட்டு உருவாக்குவதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உள்நாட்டு (கிராம) மட்டத்திலான ஆதரவை திரட்டல்.

11. கடலலைகளால் சிதைக்கப்பட்ட வடக்குகிழக்கிற்கு சிறீலங்கா அரசுடன் இணைந்து சுனாமிக்கு பிற்பட்டகால சர்வதேச உதவிகளை முகாமைத்துவம் செய்ய உடன்படல் (பீடொம்ஸ்)

## 6.1 சட்டபூர்வத்தன்மை பற்றிய கேள்வி

2002இல் சமாதான நெறிமுறைகள் தொடங்கிய போது புலிகள் சிறீலங்கா அரசுடன் மூலோபாய இராணுவ சமநிலையை உருவாக்கி விட்டார்கள் என்று கருதப்பட்டது. குறிப்பிடதக்களவு நிலப்பரப்புக்களை கைப்பற்றி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல சிறீலங்கா இராணுவ படைகளின் வலிந்து தாக்கும் திறனை தோற்கடித்து விட்டனர். சிறீலங்கா அரசாங்கம் யாழ் குடா மீதான புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்த போதும் புலிகளிடம் தான் இழந்த பகுதிகளை மீள கைப்பற்ற அதனால் முடியவில்லை. மேலும் பொருளாதாரம் பின்நோக்கி சென்ற சூழலில், பேசுமாறு ஏற்பட்ட சர்வதேச அழுத்தம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. புலிகள் வலுவான மூலோபாய நிலையிலிருந்து சமாதான முயற்சிக்கும் நுழைந்த போதும் பலவீனமான சர்வதேச நற்சான்றுகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் வெளிநாடுகளில் ஈவிரக்கமற்ற வெறிபிடித்த பயங்கரவாத குழுவாகவும் தர்க்கமற்ற முறையில் சுதந்திரக் கோரிக்கையை வரித்துக் கொண்டவர்களாகவும் பார்க்கப்பட்டனர். சர்வதேச “சட்டபூர்வத்தன்மை”, அதாவது சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நியாயபூர்வமான பூரணமான அரசியல் தரப்பு என்பது புலிகளுக்கு தற்போது அழுத்தம்

www.tamilarangam.net

தரும் மைய விடயமாகியது. மேலும் தீவின் தமிழர் வாழும் பகுதிகளில் ஆட்சி புரிவதற்கான சர்வதேச ஏற்றுக்கொள்ளுகை என்ற உள்ளடக்கத்தில் இது முக்கியத்துவம் பெற்றது. புலிகளின் தத்துவாசிரியர் 2002 செப்ரம்பரில் 'எங்களிடம் பெரியளவிலான நிரந்தர நிர்வாகக் கட்டமைப்புக்கள் எங்கள் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ளது. எங்களுக்கு என்ன தேவையெனில் சர்வதேச நியாயத்தன்மையாகும். இதனால் நாங்கள் சிறீலங்கா அரசுடனும் சர்வதேச சமூகத்துடனும் ஒருங்கிணைந்து பணியாற்றலாம்' என்று கூறினார்.[38]

எனினும், சில சர்வதேச தரப்பினரிடம் பரவலான பார்வையொன்று உள்ளது. அது என்னவெனில் நோர்வே முயற்சிகளில் புலிகள் ஈடுபடுவதற்கான முதன்மை காரணம் "பயங்கரவாதத்திற்கான போரில்" இருந்து தப்புவதேயாகும். சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் 9-11ற்குப் பிற்பட்ட காலத்தில் அதிகரித்த அரசல்லாத ஆயுதம் தரித்த தரப்புக்களுக்கு எதிரான மோசமடையும் சர்வதேச சூழலில் தன்னை தற்காத்துக் கொள்ளும் தேவை புலிகளுக்கு இருந்தது. எனினும், இது புலிகளின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளின் மூலோபாய இயங்குதன்மையை விளங்கப்படுத்தவில்லை. ஆயினும் சர்வதேச தொடர்பாடலுக்கான பிரதான தர்க்கமாக கருதப்படுவது புலிகள் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகளுக்கு பதிலாகவே பேச்சுக்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதேயாகும். இந்தத் தோற்றம் சிறீலங்கா அரசினால் மீளவலுப்படுத்தப்பட்டது. இங்கு அவதானிக்கக்கூடிய விடயம் என்னவெனில் நோர்வே சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வேறுபட்ட எதிர்பார்ப்புக்கள் இருந்தன. முன்னையது "கெரில்லாக்களில் இருந்து அரசாங்கமாக" (அரசுக்கும் அரசு ஆட்சி எனும் சொல்லாடால்) மாற்று நிலைப்படுத்த முற்படுகின்றது. பின்னையது (சிறீலங்கா அரசும் இணைந்து) புலிகளை மட்டுப்படுத்துவதற்கும் கட்டிப்போடுவதற்குமான பாதையாக ஆயுதகளைவையும், படைக்கலைப்பிலும் கரிசனை செலுத்தியது.

முன்னர் அவதானித்தவாறு நோர்வே சமாதான முயற்சிகளுடனான புலிகளின் மூலோபாய நோக்கமானது வடக்குகிழக்கிற்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குதல். (இந்த கருத்து ஒரு புதினமானதல்ல. இரு பிரதான சிங்கள கட்சிகளும் ஒரு கட்டத்திலோ அல்லது மறு கட்டத்திலோ இடைக்கால சபை என்ற கருத்தை முன்வைத்துள்ளன). ஆயினும் புலிகள் மிகவும் வீரியமான விரிவடையும் - குறிப்பிடத்தக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட - பிரதானமாக மீள்கட்டமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவொன்றை - முன்வைத்தனர். 1999முதற் தொடங்கிய நோர்வே ஈடுபாடானது அரசாங்கத்திலோ, புலிகளிடமோ சமாதான நெறிமுறைகள் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு அசைவுகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் வியக்கத்தக்க துரித கதியில் முன்னெடுக்கப்பட்ட நோர்வே முயற்சிகளானது 2001 டிசம்பர் தேர்தலின் பின்னர் ஐ.தே க தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி - புலிகளுடன் பேச்சுவார்த்தை வழிப்பட்ட தீர்வு திட்டத்தை எட்டுதல் என்ற கோரிக்கையில் போட்டியிட்டு - குறுகலான தோல்வியை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணிக்கு (யுபிஎவ்ஏ)[39] ஏற்படுத்தியதன் பின்னர் ஏற்பட்டதாகும். குறிப்பாக ஐ.தே.க தேர்தல் பிரகடனமானது "சமாதான முயற்சிகள்" என்ற தலைப்பில் 'ஒரு இடைக்கால நிர்வாகமானது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு[40] உருவாக்கப்படும் என்று கூறியது. புலிகள் ஐதே.கட்சிக்கு ஆதரவு கொடுத்தனர். இதனால் வடக்குகிழக்கிற்கு வெளியான பகுதிகளில் தமிழர்களின் வாக்குகள் இந்த கட்சிக்கு கிடைத்தது[41]. ஐ.தே.க மற்றும் புலிகளுக்குமிடையேயான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுக்கள் ஐதேக ஆட்சிக்கு வரும் முன்னரே ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன.

இடைக்கால நிர்வாகத்தினை தாக்கமுள்ளதாத வெற்றிகரமாக உருவாக்குவது - முரண்படும் தரப்புக்களிடையே படைப்பலத்தை பாவிப்பது அத்தியவசியமற்றது மற்றும் பிரச்சனைக்குரியது என்ற நிலையை உருவாக்கும் தகைமையுள்ளதுடன் - நிரந்தர தீர்விற்கான பேச்சுக்களை நீடிக்கும் தகைமையையும் கொண்டது. புலிகள் முதன்மை நிலை வகிக்கும் இடைக்கால நிர்வாகமானது நிறைய வாய்ப்புக்களை கொண்டது. ஏனெனில் அது "போரிலிருந்து சமாதானத்திற்கு" மாற்றுநிலைப்படும் நெறிமுறைக்கான அடிப்படையலகை உருவாக்கும். அவை,

1. சர்வதேச ஆதரவு பெற்ற சிவில் நிர்வாகம், ஆட்சிக்கட்டமைப்பானது புலிகளினதும் சிறீலங்கா அரசினதும் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் நிபந்தனையாக கொள்ளும்.
2. அது புலிகளுக்கு எதிர்ப்பியக்கம் என்பதிலிருந்து இடைக்கால அரசாங்கம் என்ற நிலைக்கு செல்

---

[38] தி கார்டியன்: "தமிழ்புலிகள் சுதந்திரக் கோரிக்கையை கைவிட்டனர்"(செப்.19,2002)

[39] குறிப்பிடத்தக்க அவதானிப்பு என்னவெனில், வடக்குக்கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்கள், மலையகத்தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகியோரின் வாக்குக்களைப் பெற்றாலும் ஐதேக சிறியளவு பெரும்பான்மையுடனேயே வென்றது. ஐமசுக சிங்கள வாக்குக்களை பெருவாரியாகப் பெற்றது.

[40] ஐதேக தேர்தல் பிரகடனம், செப்.2001 பக்கம்7

[41] பார்க்க புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 27நவம்பர்,2001 மாவீரர்நாள்உரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வதற்கான மாற்று நிலைப்படுத்தும் காவியை வழங்கும்.
3. அது சிறீலங்கா அரசு அதிகாரங்களை தமிழ் மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பிப் பதற்கான மாற்றுநிலைபடுத்தும் காவியை வழங்கும்.
4. அது போரினால் சிதைவுண்ட வடக்குகிழக்கின் புலிகள் கட்டுப்பாடு மற்றும் அரச கட்டுப்பாடுப் பிரதேசங்களை ஒன்றுபடுத்தி தனித்த கட்டமைப்பின் கீழ் தேவைப்படும் மீள்கட்டமைப்பு திட்டங்களுக்கான திறமையை வழங்கும்.
5. இறுதி தீர்விற்கான பேச்சுக்கள் தொடரும் அதேவேளையில் வடக்குகிழக்கிற்கான அவசர மனிதாபிமான தேவைகளுக்கு முகம் கொடுக்கும் (மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சமாதான இலாபங்கள் ஈற்றில் இடம் பெறாமல் முடிந்துவிட்டது).

முதல் 2002 - 2003 நோர்வே அனுசரனையுடனான பேச்சுக்களில் முதல் சுற்றுக்களில் ஐ.தே.க தலைமை யிலான அரசினால் இடைக்கால நிர்வாக சபை நிராகரிக்கக்கப்பட்டது. மாறாக 3 உபகுழுக்கள் அமைக்கப் பட்டன. அவற்றில் வடக்குகிழக்கின் அவசர மனிதாபிமான தேவைகளை கையாள்வதும் ஒன்று. இந்த பலவீனமான நிறுவனங்கள் ஈற்றில் பலனற்றவை என்பது நிரூபணமாகியது. வடக்குகிழக்கு மனிதாபிமான சிக்கல்கள், குறிப்பாக சிறீலங்கா இராணுவமானது போர் நிறுத்த உடன்பாட்டில் முக்கியதேவையான ‘இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள்’ என்பதை மதிக்க மறுத்த சூழலில், தொடர்ந்தும் வீக்கமடைந்தது. மேலும் சர்வதேச ஊக்குவிப்புடன் (குறைந்த அழுத்தங்களுடனல்ல) பேச்சுவார்த்தைகள் கூட்டாட்சியை மோதல் தணிப்புக்கான இறுதித்தீர்வாக கலந்துரையாடுவது நோக்கி முன்னேறியது. புலிகள் இரண்டு காரணங்களைக் காட்டி 2003இல் பேச்சுக்களில் பங்குபற்றுவதை நிறுத்திக்கொண்டதுடன் 2003 டோக்-கியோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டையும் பகீஷ்கரித்தனர். அவை,
1. அரசாங்கத்துடன் முன்னைய சுற்றுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகள் அரசினால் நிறைவேற்றப் படவில்லை
2. புலிகள் திட்டமிட்ட வகையில் சர்வதேச புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளில் ஓரம் கட்டப்படுகின்றனர்.[42]

## 6.2 இடைக்கால நிர்வாக சபை யோசனைகள்

பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறியதன் பிற்பாடு, 2003 நடுப்பகுதியில் வடக்கு கிழக்கிற்கு இடைக்-கால நிர்வாகத்திற்கான யோசனைகளை முன்வைக்குமாறு ஐ.தே.க தலைமையிலான அரசிற்கு புலிகள்கோரிக்கை விடுத்தனர். முதலிரண்டு அரசாங்க யோசனைகள் போதியனவாகவில்லை என்று நிராகரித்ததன் பின் புலிகள் தமது சொந்த இடைக்கால நிர்வாக சபைக்கான ஐஸ்ஜிஏ யோசனைகளை (தீவிலும், புலம் பெயர் சமூகத்திலிருந்தும் திரட்டப்பட்டு தமிழ் சட்டவியல் நிபுணர்களுடன் பல மாதங்கள் இடம்பெற்ற ஆலோசனை களின் பின்னர்) 2003 ஒக்டோபரில் முன்வைத்தனர். இது மாற்றுநிலை நெறிமுறைக்கான முக்கிய கணமாகும். இதுவே புலிகளால் இடைக்கால அல்லது நிரந்தர தீர்வுக்காக முற்றிலுமான விடுதலையல்லாமல் முன்வைக்கப்பட்ட கட்டமைப்பாகும். மேலும் இந்த யோசனைகள் சர்வ-தேச ஆட்சிநெறி தராதரத்திற்கான ஈடுபாடுகளையும் உள்ளடக்கியது. முக்கியமாக, புலிகள் இந்த யோசனைகளை சிறீலங்கா அரசுடன் நோர்வே அனுசரனையுடனான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக கருதினார்கள் என்பதாகும். இந்த யோசனைகளானவை விவாதங்கள் மூலம் மாற்றங்கள் செய்யப்படுவதற்கு தயாரானது என்பதைக் காட்டியது.

புலிகளின் யோசனைகள் தெற்கில் கோபாவேசமான முரண்பாடுகளை உருவாக்கியது. அது சிறீலங்கா சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவிற்கு விசுவாசமான அதிகாரிகளால் மேலும் தூண்டப்பட்டது. இடைக்கால தன்னாட்சி சபை யோசனைகள் உச்சபட்ச நிலைப்பாட்டு வேண்டுதல்களென அதன் விமர்சகர்களால் நிராகரிக்கப்பட்டது. மேலும் 2002இல் இறுதியில் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டாட்சி வடிவத்தை முயன்று பார்த்தல் என்பதற்கும் மிகவும் அப்பாற்பட்டது என்று விமர்சிக்கப்பட்டது. ஆயினும் இவ் யோசனை களானது இணைந்த ஆட்சி முறைப்பட்ட அதிகார பகிர்வு புரிதலின் அடிப்படையிலானது என வகைபடுத் தப்படக் கூடியது (எதிரிசிங்க 2007)[43] என்ற போதும், இது சிறீலங்கா அரசு இன்றுள்ள ஒற்றையாட்சி அரசு கட்டமைப்பிலிருந்து வேறுபட்ட எதுவித மாற்றுயோசனைகளையும் முன்வைக்கவில்லை என்ற அடிப்படையில்

[42] குறிப்பாக, இரண்டாவது கொடையாளர் மாநாட்டினை புலிகள் மீதான தடை இருக்கக் கூடியதாக வாசிங்டனில் ஏப்.14,2003 நடத்தியமையை புலிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
[43] எதிரிசிங்கவின் அபிப்பிராயங்களானது “முகப்புக்களுடன் திண்டாடுதல் அல்லது தீர்வை நாடுதல்” எனும் மாநாட்டின் முக்கிய கருத்துரையில் வெளிப்பட்டது. இது 30 ஒக்.2007ல் கொழும்பு கொல்ப் கிளப்பில் தென்னாசிய அமைதி நிறுவனமும், பெர்ரி எபேடஸ்பே ர்ட் இணைந்து நடத்திய மாநாடாகும்.

அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் இந்த யோசனைகள் சமாதான முயற்சிகளை மீள தொடர்வதற்குப் பொருத்தம் குறைந்த யோசனைகள் அல்ல. உண்மையில், இந்த யோசனைகள் 'தெளிவாக உணர்ச்சி மயமான விடயங்களை முன் தொடுவதை விட்டுவிட்டு அதில் இரத்தத்தையும் கொதிக்க வைக்கும் எந்த சிவப்பு கொடிகளும் கிடையாது' (பெரேரா 2003). புலிகளை விமர்சிப்பவர்கள் குறிப்பாக சிங்கள தேசியவாதிகள் இந்த யோசனைகள் பிரிவினைக்கான அடிக்கற்கள் என்று கண்டித்தனர். அத்துடன் புலிகளுடன் பேசுவதை எதிர்த்தனர். எனவே, இதன் தர்க்கவியல் தொடர்ச்சி என்னவெனில், எந்த அதிகார பகிர்வு யோசனைகளும் (தற்காலிகமானதோ அல்லது நிரந்தரமானதோ) அது தனித்த நாட்டிற்கான பாதையாகவே நோக்கப்படும். 'பேச்சுவார்த்தைகள் வழியில் சிறீலங்காவில் அமைதியினை கொண்டுவருவதில் அக்கறைகொண்டதொரு அரசாங்கம் இந்த பேச்சுவார்த்தையூடான இடைக்காலநிர்வாக சபையை வருடக்கணக்கான பிரிவினைவாத போரின் பின்னர் மீள் ஒன்றிணைவதற்கான முதல்நடவடிக்கையாகப் பார்க்க வேண்டும்' என்று சுட்டிக்காட்டிய உயங்கொட' மாறாக தீவிர பரீசிலனைக்கு சுலோகங்களை மாற்றீடாக்குகின்றனர்' என்று எதிர்ப்புத் தெரிவித்தார்.

அதனை விமர்சிப்பவர்களின் நிலைப்பாடுகளுக்கு முரணாக, இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் மீள பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கானதாக உள்ள அதேவேளையில் இடைக்கால நிர்வாகம் உருவாக் கப்பட்டு இயங்கும் போது இறுதி தீர்வுக்கான மேலதிக பேச்சுக்கள் இடம்பெறுவதை தடுக்கவில்லை. உண்மையில் தரப்பட்ட எதிர்பார்ப்பான ' இந்த கட்டத்தில் இடைக்கால நிர்வாகம் அனுமதிக்கப்படுவதாகவும் - சாத்தியமானதுமானதுமாக இருக்கவேண்டுமாயின் அது இறுதித் தீர்விலும் பார்க்க குறைந்த அதி காரங்களையும் சனநாயகத்தையும் அவசியமாக கொண்டிருக்க வேண்டும்' (பெரேரா: 2003) என்று இருக்கின்ற போது இடைக்கால நிர்வாக யோசனைகளானது ஐந்து வருட வாழ்வு வட்டத்தை பிரேரிப்பதுடன் - இறுதித் தீர்வு அந்தக்கட்டத்தில் எட்டப்படாவிட்டால் மேலும் நீடிக்கப்படும் என்கின்றது. மேலும் இடைக்கால நிர்வாக யோசனைகளில் வெளியே தெரியும் விடயங்கள் (மாற்றுநிலைப்படுத்தும் அரசியலின் அடிப்படையில் கவனிக் கப்பட்டால்) புலிகளின் யோசனைகள் போரில் இருந்து சமாதானத்திற்கு சிறீலங்காவினை மாற்றுநிலைபடுத் துவதற்கான ஆரம்ப வாய்ப்பாக இருந்தது. எனினும் இது இழக்கப்பட்டுவிட்டது. இடைக்கால தன்னாட்சி அரசு நிர்வாகம் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களுக்கான தனித்த நிர்வாக அலகாகும். ஆனால் இடைக்கால நிர்வாகத்தின் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தை புலிகள் கேட்கும் அதேவேளையில் அது வடக்கு கிழக்கின் சிங்கள முஸ்லிம் சிறுபான்மையினருக்கான தெளிவான பிரிப்புக்களைக் கொண்டிருந்தது. புலிகள், ஏக பிரநிதித்துவம் (அதிகாரபூர்வ பிரதிநிதிகள்) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற தங்களது நீண்டகால வலியுறுத்தலினைக் கைவிட்டிருந்தனர். மேலும் இந்த யோசனைகள் ஐந்து வருடங்களுக்கு பின்னர் (அந்த நேரத்தில் இறுதித்தீர்வு எட்டப்படாவிட்டால்) 'சர்வதேச சனநாயக கோட்பாடுகளுக்கும் தராதரத்திற்குள் அமைவாகவும் - சர்வதேச கண்காணிப்புடனும்' கூடிய தேர்தல்கள் இடம்பெற்று இடைக்கால சபையின் பிரதி நிதித்துவம் தேர்வு செய்யப்படும் என்று பிரேரிக்கின்றது. ஐக்கிய சிறீலங்கா என்பதில் உறுதிகொண்டவ-ர்களுக்கு சந்தேகமற்றவகையில் கரிசனை கொள்வதற்கு காரணங்கள் உள்ளன: சிறீலங்கா அரசிற்கும் இடை-டக்கால தன்னாட்சி சபைக்கும் எதுவித தெளிவான தொடர்புகளும் இல்லை என்பதுடன் இந்த யோசனைகள் கடல் பகுதி கட்டுப்பாட்டையும் வடகிழக்குக்கு அருகே உள்ள கடல்வளங்களை கட்டுப்படுத்துவதையும் கோருகின்றது போன்ற விடயங்கள். இந்த விடயங்களைப் பேச்சுக்களின்போது விவாதிக்கக் கூடாது என்பதற்கான காரணங்கள் எதுவுமில்லை. ஆயினும், மிகவும் கூர்மையானதும், விசாலமானதுமான அவதானிப்பு அனுபவம் மிக்க அரசியல் இராணுவ ஆய்வாளர் சிவராமினால் வெளியிடப்பட்டது. இறுதியில் உடன்பாடு காணப்படும் எவையும் ஆழவேர்பதித்த சிறீலங்கா அரசமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்த முடியாததாகவே இருக்கும் என்ற இலகுவான காரணங்களால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கூச்சல்கள் “வெற்றுக்கூச்சல்களாகவே” அமையும் என்று அவர் கிண்டல் செய்தார். 'இடைக்கால சபை அது போன்ற அனைத்து பிரகாசமான 1978 தொடக்கம் வெளிப்பட்ட யோசனைகள் - திட்டங்கள் போன்று - முழுமையாகவோ பகுதியாகவோ - எது நடந்தாலும் அமுல்படுத்த முடியாது. 13வது அரசமைப்பு சட்டதிருத்தத்தில் வழங்கப் பட்டமைக்கு மேலாக தமிழர்களுக்கு சிறிதளவு அதிகமான பிராந்திய தன்னாட்சி நிச்சயமாக சாத்தியமற்றது என்பது அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பால் வெளிப்படுத்திக் காட்டப்பட்டது' (2004)

எதுவாயினும், இடைக்கால தன்னாட்சிசபை யோசனைகள் பூச்சியத்திற்கு வந்துவிட்டது. நவம்பர் 2003 ஆரம்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அதிகார போட்டியில் ஈடுபட்டிருந்த சனாதிபதி குமாரதுங்க பாராளுமன்ற அரசிடமிருந்து மூன்று அமைச்சுக்களைக் கைப்பற்றியமையானது 2004 ஏப்பிரல் தேர்தல் வரை நீடித்து - ஈற்றில் ஐதேக ஆட்சியிலிருந்து கவிழ்த்த தேர்தல்வரையிலான அரசியல் சிக்கல்களுக்கு அழைத்துச் சென்றது. இடைக்கால தன்னாட்சி சபையை நிராகரித்தல் உட்பட கடுமையான தளத்தில் ஐ.ம.சு.க தேர்வு செய்யப்பட்டது. ஆனால் சமாதான முயற்சிகள் வேறு காரணங்களினால் உடையத் தொடங்கின: இராணுவ ஆதரவு பெற்ற துணைப்படை குழுக்களுக்கும் புலிகளுக்குமிடையேயான - 2002 போர்நிறுத்தல் தொடக்கம் தனல்கொண்டிருந்த - நிழல் யுத்தம், 2004 ஆரம்பத்தில் மட்டக்களப்பு அம்பாறை தளபதி கேணல் கருணா புலிகளின் தலைமைக்கு எதிராக கிளர்ச்சி செய்தபோது கூர்மையடைந்தது. கருணாவின் ஆறுவார கால

கிளர்ச்சி ஏப்பிரலில் புலிகளால் நசுக்கப்பட்ட போதும் அவரும் அவரது சகாக்களும் கொழும்புக்குத் தப்பியோடி, அங்கிருந்து இராணுவ ஆதரவுடன் புலிகளுக்கும் அவர்களின் வெளிப்படையான ஆதரவாளர் களுக்கும் எதிராக படுகொலை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்[44]. இந்த நிழல் போரானது, 2005 இறுதியில் இடம் பெற்ற தேர்தல்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒற்றையாட்சியை வலியுறுத்தியும் - கூட்டாட்சியை நிராகரித்தும் - நோர்வே அனுசரணையையும் 2002 போர்நிறுத்த உடன்பாட்டையும் நிராகரிக்கும் சிங்கள தேசி யவாத அடிப்படையில் வெற்றி பெற்ற பின்னர் படிப்படியாக புலிகளுக்கும் சிறிலங்கா படைகளுக்குமி டையேயான நேரடி யுத்தமாக பரவல் அடைந்தது. 2008 ஜனவரி வரை இருதரப்பும் உத்தியோகபூர்வமாக போர்நிறுத்த உடன்பாட்டுக்கு கடப்பட்டாலும் 2006ல் முழுமையான ஆனால் “பிரகடனப்படுத்தப்படாத போர்” வெடித்தது.

போர் நிறுத்தல் உடன்பாட்டை மூழ்கடித்த படிப்படியான வன்முறைச்சக்கரமானது, புலிகளுக்கும் இராணுவ பின்னணியுடன் கூடிய துணைப்படைகளுக்கும் இடையேயான நிழல் போரில் வேரூன்றியுள்ளது. இது 2002 உடன்பாட்டினால் கூட முடிவுக்கு கொண்டுவரப்பட முடியாததாகவிருந்தது. 2002 இறுதிப்பகுதியில் புலிகளை எதிர்க்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆயுததாரிகளும் கொல்லப் பட்டமையானது சமாதான நெறிமுறையின் ஆதரவாளர்களிற்கு கரிசனைக்குரிய விடயமாகவிருந்தது. புலிகள் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக கருத்தேதும் தெரிவிக்காத போதும், இராணுவத்தினரால் புலிகளின் முகவர்கள் குறிவைக்கப்படுவது போன்று இராணுவ உளவாளிகளாலும் முகவர்களும் குறிவைக்கப்படுவதாக அதன் அதிகாரமட்டத்தினர் ஏற்றுக்கொண்டனர். இராணுவ புலனாய்வாளர்களுக்கும் புலிகளை எதிர்க்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஆயுததாரிகளுக்குமிடையே உறவுகள் நிலவியதன் மத்தியில், உரிமை கோரல்களும் - எதிர் உரிமை கோரல்களும் வேறுபடுத்திப் பார்க்க முடியாததாகவிருந்தது. ஆனால் புலிகள் மீது குற்றம் சுமத் தப்பட்ட “அரசியல் படுகொலைகளானது” சமாதான முயற்சிகளில் புலிகளின் ஈடுபாடு தொடர்பான தீவிர கரிசனைகள் (குறிப்பாக சர்வதேச தரப்பினரிடம்) வளர்ச்சியுறத் தொடங்கியது.

அங்குவன்முறை சுழற்சி நிலவியபோதும் புலிகளை, முழுமையாக இல்லாவிட்டாலும் - பிரதானமாக, குற்றம் சுமத்தும் போக்கு சில சர்வதேச தரப்பினரிடையே நிலவியமையானது சிக்கலை மேலும் எவ்வாறு ஆழப்படுத்தியது என்பதை கீழ்வரும் ஏழாவது பிரிவில் நாங்கள் ஆராய்வோம். இந்த விரக்தியானது 2005 ஒகஸ்ட் 12ல் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் குறிபார்த்துச் சுடுபவரால் கொல்லப்பட்டதன் பின்னர் நியாயமானதாகவோ அல்லது நியாயமற்றமுறையிலோ, கோபமாக உரு வெடுத்தது. அரசாங்கம் புலிகளை குற்றம் சாட்டியது, ஐரோப்பிய ஒன்றியம் (எந்த வித மேலதிக விசா-ரணைகளுமில்லாது) இயக்கத்திற்கு போக்குவரத்து தடை விதித்தது. சில மாதங்களின் பின்னர் கனடாவுடன் இணைந்து புலிகளை பயங்கரவாத இயக்கமாக தடை விதித்தது. இந்த தடை விதிப்பானது விட்டுக்கொடுப்பற்ற, சச்சரவு செய்யும் புலிகளுக்கு எதிரான வலுவான தண்டனையை நோக்கமாக கொண்டது. எனினும் இந்த தடைகள் சமாதான முயற்சிகளை மீளஉருவாக்கவில்லை. மாறாக புலிகள் மீதான கண்டனங்கள் சிறீலங்கா கடும்போக்கு அரசை புலிகளுக்கும் - தமிழ் பொதுமக்களுக்கும் எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவித்தது. தனிப்பட்ட ரீதியில் சில ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இந்த விளைவுகளால் ஆச்சரியம் அடைந்ததாக ஒப்புக்கொண்டதுடன் சிலர் பின்னர் வருத்தம் தெரிவித்தனர்[45]. ஆயினும் நிர்ப்பந்தப் படுத்தும் வகை இராஜதந்திர கற்கையாளர்கள் கூறுவதுபோல் ஒரு மோதல் பொறிமுறையில் ஒருதரப்பை குறிவைக்கும் நிர்ப்பந்தத் தலையீடானது தவிர்க்கமுடியாத வகையில் பிறரின் நடவடிக்கைகளை குறிப்பாக எதிர்தரப்பின் நடவடிக்கைகளைப் பாதிக்கும். எதிர்த்தரப்பினர் இந்த புதிய அழுத்தத்தை பயன்படுத்தித் தங்கள் கடுமையை வலுப்படுத்தி நிலமையை மோசமாக்குவார்கள் (பேர்க் 2003:104). சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிலவும் மோதல் வீச்சுக்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான வேறுபட்ட - தாக்கமுள்ள மூலோபாயங்களுக்கு வழிவகுக்கும் (இதற்கும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் இன்னமும் ஒரு பகுதியாக இருக்கும்). சிறீலங்கா அரசின் பின்னணியுடன் புலிகள் இயக்கப் போராளிகளையும், ஆதரவாளர்களையும் கூட குறிவைத்து இடம் பெறும் வன்முறைச்சுழற்சியை பார்ப்பதற்கு பதிலாக அரச படைகளையும் அரசியல் எதிரிகளையும் புலிகள் குறிவைப்பதையே பார்க்கும் போக்கு நிலவியது. அரசு பகிரங்கமாக போரை தொடுத்தபோதும் - சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்பாளர்களின் தலைமை மீதும் இருதடவைகள் எறிகணை தாக்குதல்கள் இடம்பெற்ற போதும் சர்வதேச சமூகம் பெரியளவில் அமைதியாக இருந்தது.

---

[44] 2004 நடுப்பகுதிமுதல் - பாரளுமன்றஉறுப்பினர்கள்,ஊடகவியலாளர்கள், உதவிவழங்கும் நிறுவன பணியாளர்கள், சிவில் சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களுடன் - போர்நிறுத்தல் உடன்பாட்டிற்கு அமைய அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பணியாற்றிய புலிகளின் அரசியற்துறைப் போராளிகள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

[45] ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகளுடன் 2006 - 2007 காலப்பகுதியில் இதை எழுதுபவர்கள் நடத்திய உரையாடல்கள்

www.tamilarangam.net

சிறீலங்கா இராணுவ பின்னணியுடனான புலி எதிர்ப்புத் துணைப்படைகள் பற்றிய சர்வதேச அணுகுமுறையை இது விபரிக்கின்றது. துணைப்படைகள் சமாதான முயற்சிகளின் தொடக்கம் முதலே புலிகளின் கரிசனையுடன் தொடர்புபட்டவை: 2002 போர்நிறுத்தல் உடன்பாட்டின் பிரிவு 2.10, துணைப் படைகளை அரசு ஆயுதக்களைவு செய்வதையும் கலைப்பதையும் அல்லது தமது இராணுவத்துக்கும் உள் வாங்குவதையும் கட்டாயப்படுத்தியது. தொடர்ச்சியாக இது நடக்கவில்லை என்று புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் சர்வதேச தரப்பினரால் இந்த விடயம் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை (குறிப்பாக இந்தக் கொலைகள் அரசியல் எதிர்ப்பாளர்களை புலிகள் குறிவைப்பதால் பின்னவர்கள் மறுதலிப்பதாக பார்க்கப்பட்டது). 2005 பிற்பகுதியில் ஆட்கடத்தல்கள், சட்ட விரோத படுகொலைகள் மற்றம் பிற உரிமை மீறல்கள் என்பன துணைப் படையினருக்கு எதிராக பெருமளவில் சுமத்தப்பட்ட பின்னர் துணைப் படைகளை ஆயுதக்களைவு செய்யுமாறு அரசிடம் கோரும் சர்வதேச அழுத்தம் ஏற்பட்டது.

சுருக்கமாக, புலிகள் நோர்வே தலைமையிலான சமாதான முயற்சிகளில் வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் நோக்குடனேயே ஈடுபட்டனர். மேலே விபரிக்கப்பட்ட காரணங்களினால், அத்தகை-யதொரு ஆட்சிக் கட்டமைப்பு சிறீலங்காவில் போரில் இருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்துவதற்கு உறுதியான அடித்தளத்தை வழங்கியிருக்க கூடும். புலிகளும், அரசும் வன்முறையில் இருந்து விலகி சமாதான பங்குதாரர்களாக மாற்றுநிலைபடுவதற்கான பாதைக்கு வழிசமைக்கும் அதேவேளையில் போரால் சிதைவுண்ட பிரதேசங்களின் அவசர மனிதாபிமான சிக்கலுக்கு முகம்கொடுக்க உதவியிருக்கும். எனினும் தொடக் கத்திலேயே பேச்சுவார்த்தைகளின் மைய விடயம் இடைக்கால நிர்வாகம் என்பது கைவிடப்பட்ட அே-தவேளையில் நிரந்தர தீர்வுக்கான வழியாக கூட்டாட்சியை விவாதிப்பதற்கு முற்பட்டமை, போரில் இருந்து சமாதானத்திற்கு படிப்படியாக மாற்றுநிலைப்படுவதற்கான பொருத்தமான வழியை மூடிவிட்டது. மேலும், களநிலைமை (மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு விடயங்கள்) இறுதித்தீர்வுக்கான உடன்பாட்டினை எட்டுவதற்கு சாதகமற்றதாக படிப்படியாக உருவாகுகின்ற வேளையில் அடிப்படை விடயங்களை விவாதத் திற்கு எடுப்பதை இது அவசரப்படுத்தியது. குறிப்பாக சர்வதேச புனர்வாழ்வு மற்றும் மேம்பாட்டு நெறிமுறைகளில் (அதாவது தமிழர் நலன்சார்விடயங்களில்) ஓரம்கட்டப்படுவது தொடர்பான புலிகளின் கோபம் சிறீலங்காவில் சர்வதேச சமூகத்தின் பாத்திரம் பற்றிய அதனது சந்தேகத்தினை அதிகப்படுத்தியது. உண்மையில், ஐதேக அரசாங்கம் எப்போதுமே சுட்டிக்காட்டும் "சர்வதேச பாதுகாப்பு வலை" என்பது சமாதான முயற்சிகளை ஆதரிப்பதற்கு பதில் புலிகளை வலையிடும் நோக்குடையாதாக தோற்றம் தந்தது. கேள்வி என்னவெனில், ஏன் இத்தகைய உறுதிமொழிகளுடன் ஆரம்பமாகிய சர்வதேசமயப்பட்ட சமாதான நெறிமுறைகள் மீளமுடியாது - சீர்கெட்டு முழுமையான போருக்கு திரும்பியது.

# 7.சர்வதேச பாத்திரம்

சர்வதேச பின்னணியுடனான நோர்வே சமாதான முயற்சிகள் மோதுகை மாற்றுநிலைப்படுத்தலினை ஏற்படுத்துவது இலகுவில் நொறுங்குமளவுக்குப் பலவீனமானது என்பது வெளிப்பாடுகளினூடு தெளிவானது. புலிகள் - சிறீலங்கா - சர்வதேச தரப்பு என்பன சமாதான முயற்சிகளின் போக்கில் மேற்கொண்ட தொடர்ச்சியான நடவடிக்கைகளும், அதனுடன் இணைந்து வெளிப்படுத்திய சமிக்ஞைகளும் முரண்பட்ட உலகபார்வையுடன் அர்த்தப்படுத்தப்பட்டன. புலிகள் அடிப்படையில் போர்க்குணம் கொண்ட விட்டுக் கொடுப்பற்ற அழுங்குப்பிடி கொண்டவர்கள் என்பதுடன் அவர்களின் சமாதான முயற்சிகளுடனான ஈடுபாடு நம்பிக்கையற்றதும் வஞ்சகமானதாகும் (மேலும், சர்வதேச நெருக்குவாரத்தினால் ஏற்பட்டதுமாகும்) என்பதுமே சர்வதேச அபிப்பிராயமாகவுள்ளது. அதாவது, ஐக்கிய இலங்கைக்கு கடப்பாடு கொண்ட வன் முறையற்ற தீர்வு என்பதிலிருந்து வெளியே செல்லும் விடுதலை இயக்கத்தின் எந்தச் செயற்பாடுகளும் அரசியல் சமரசத்திற்கோ அல்லது ஆயுதப்போரிற்கு மாற்றீடான அமைதிவழியை யோசிப்பதற்கோ காட்டப் படும் தயக்கம் என்று பார்க்கப்படுவதைக் குறிக்கின்றது.

பீற்றர் கெற்சின்ஸ்ரன் மற்றும் ரோபேட் கியோகெனி (2006) 'உலக அரசியலில் அமெரிக்க எதிர்ப்பு' என்பதைப் பரிசீலிக்கையில், அமெரிக்கா தொடர்பில் வெளிப்படும் சர்வதேச நம்பிக்கையீனங்களை வேறுபட்ட கோணங்களில் பிரித்து பார்க்க முயன்றனர். அவர்களது ஆழமான பார்வைகொண்ட முடிவுகள் (புலிகளினது உட்பட) பல்வேறு சூழலுக்கும் பொருந்தக்கூடியவை. இந்த நம்பிக்கையீனங்களானது ஆழப்பதிந்தும் - போதியளவு நிறுவனமயப்பட்டும், உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் நடத்தைகளை மேம்படுத்தல் என்பனவற்றிற்கு தடையாக இருப்பவையும் உள்ளடங்கும். அவர்கள் மூன்று கோணங்களிலான ஆழமான சந்தேகங்களை வரையறுக்கின்றனர்: அபிப்பிராயம் (எதிர்மறையான), நம்பிக்கையின்மை மற்றும் பாரபட்சம். முக்கியமாக எதிர்மறையான கருத்துக்கள் வேர்விடும் போது அது வழுக்கி ஆழமான நம்பிக்கையீனங்களிற்கும் செல்வது இலகுவாக இடம்பெறுமெனத் தெரிவிக்கின்றனர். 'அமெரிக்கா தொடர்பாக எவ்வளவு அதிகமான எதிர்ப்பை ஒருவர் முன்னரே கொண்டுள்ளாரோ அந்தளவுக்கு குறைவான தகவல்கள் அமெரிக்க கொள்கைகளை எதிர்மறையாக பார்ப்பதற்குத் தேவைப்படும். கடுமையான முன்முடிவுகள் - பாரபட்சம் என்பன - அது நோக்கும் அந்தச்சூழலாக பார்க்கப்படாமல், அமெரிக்காவினை ஒரு தரப்பாக்கி நடவடிக்கைகளையும் நோக்கங்களையும் எதிர்மறையாக்கிக் காரணம் கற்பிக்கப்படுகின்றது (2006.21 அழுத்தம் கொடுக்கப்பட்டது). மேலும் அமெரிக்காவை நம்பாத மக்கள் மட்டுமல்ல அது தொடர்பாக பாரபட்சம் கொண்டவர்கள் - பாரபட்சமற்ற மக்களிலும் பார்க்க - தகவல்களை வேறுவிதமாக நெறிப்படுத்துவார்கள். பாரபட்சமான தரப்பினர் 'மோசமான கொள்கைகளைக் கூட குறித்த சுழலுக்குள் பார்க்காமல், அமெரிக்காவின் அடிப்படை தன்மையென்று பழிசுமத்துவார்கள். மேலும் 'அவர்கள் சாதகமான சாத்தியம் கொண்ட தகவல்களை நீக்கி எதிர்மறையான தகவல்களை வெளிப்படையானதாக்குவார்கள்' (2006.21) என்று விவாதித்தனர். இதன் சாத்தியமானதொரு பின்விளைவு என்னவெனில் 'அமெரிக்க அரசு தொடர்பாக நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தும் பரவலான - சிலவேளை நிறுவனமயப்படுத்தப்பட்ட நம்பிக்கையீனம் அமெரிக்க கொள்கைகளை எதிர்மறையாக முன்கூட்டியே பார்க்க வைக்கின்றது'(2006.21). இத்தகைய வீச்சு புலிகளுடனான சர்வதேச உறவுகளில் இடம்பெறுகின்றது என்று விவாதிக்கலாம்.

சிறீலங்கா மோதல் முறைமையில் தொடர்புபட்ட பிறதரப்பினர்கள் போன்று சர்வதேச சமூகமும் ஒற்றை யானதல்ல - பிளவுபட்ட பிரிவாகும். சர்வதேசதரப்பினரின் கொள்கைகள் வேறுபட்ட தேசிய நலன்கள், பாதுகாப்பு கரிசனைகள், பொருளாதார விடயங்கள், அரசை மையப்படுத்திய கூட்டுறவு உடன்பாடுகள் மற்றும் மோதுகைக்கு பிற்பட்ட காலத்தில் சமாதான கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள் என்பவற்றினால் இழுத்துச் செல்லப்படுகின்றது. மேலோட்டமாக, நான்குவகை போட்டியிடும் சிந்தனை கற்கைகள் காணப்படுகின்றன. அவை நிபந்தனைவகை அணுகுமுறை, மாற்றுநிலைபடுத்தும் அணுகுமுறை, பயங்கரவாத எதிர்ப்பு அணுகு முறை, சுதந்திரத்தேர்வுசார் அணுகுமுறை என்பனவாகும். இந்த நிபந்தனைவகை அணுகுமுறையானது சமாதான நெறிமுறைகளில் நன்கொடைகள், அபிவிருத்தி உதவிகள் என்றவிடயங்களில் "அணைத்தும் - அச்சுறுத்தியும்" செயற்படும் முறையைக் கடைப்பிடித்தலாகும். மாற்றுநிலைப்படுத்தும் கொள்கை கற்கையை முன்னெடுப்பவர்கள் புலிகளுடனான கையாள்கையை வலியுறுத்துவதுடன் - பேச்சுவார்த்தைகளின் தேவை களுக்காக - தரப்புகளை சமனாக நடத்துகின்றனர். பயங்கரவாத எதிர்ப்பு அணுகுமுறையை ஆதரிப்பவர்கள் பகைநிலை ஏற்படும் போது சிறீலங்காவிற்கு இராணுவ உதவிகளை வழங்குகின்றனர். சுதந்திரத்தேர்வுசார் அணுகுமுறையை ஆதரிப்பவர்கள் தலையிடா கோட்பாட்டை பின்பற்றுகின்றனர். எனினும், யதார்த்தத்தில்

இந்த அனைத்து அணுகுமுறைகளும் அருகருகாக - எந்தவித பிரதான கொள்கை மாற்றங்களுக்கு அல்லது குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் சர்வதேச தரப்புக்களிடம் தோன்றுவதற்கு வழிவகுக்காமல் இயங்குகின்றன. அமெரிக்க தூதுவர் ஜெவ்ரி லுன்ஸ்டட் கூறுவது போன்று 'சமாதான முயற்சிகளை மேம்படுத்துவதற்கான மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கா சிறீலங்கா அரசாங்கத்திற்கான இராணுவ உறவுகளை வலுப்படுத்த ஆரம்பித்துள்ளது' (2007.17) என அடிக்கடி விடுக்கப்படும் அறிக்கைகள் சிறிதளவிலான சலசலப்பை ஏற்படுத்தியதுடன் உள்ளடக்கத்தில் இயல்பிலான முரண்நிலை உண்மையைக் காட்டுகின்றது. அடிக்கடி வகைப்படுத்தப்படும் "ஓரே சிந்தனையுள்ள'' அல்லது "ஒத்த சிந்தனையற்ற'' அரசுகள் என்பது சிறீலங்கா உள்ளடக்கத்தில் குழப்பமானது. பொதுவாக ஒத்திசைவின்மையும் - ஒன்றுக்கொன்று உதவுதலும் - யதார்த்த அரசியலின் நெருக்கடியும் - மோதுகை மாற்றுநிலைப்படுத்தல் இலக்குகளின் போட்டியிடும் தன்மையும் - நடவடிக்கைகளில் காணப்படும் பயங்கரவாத எதிர்ப்பும் - சர்வதேச சமூகத்தின் கொள்கை மற்றும் மூலோபாயங்களும் சிறிலங்காவில் சமாதானத்தை உருவாக்குவதற்கான சர்வதேச முயற்சிகளை தவிர்க்க முடியாத விதத்தில் பலவீனப்படுத்துகின்றது.

தொடக்கத்தில் சமாதான முயற்சிகளை சிறீலங்கா அரசுடனான தமது இராணுவ சமநிலையை தக்கவைத்தவாறு சர்வதேச சமூகத்துக்கு தனது நடைமுறை ஆற்றலையும், ஆட்சி செய்வதற்கான பொதுசன ஆதரவையும் வெளிப்படுத்திக்காட்டுவதற்கான காலத்திற்குகந்த - அரசியல்வெளி எனப்பார்த்தனர். இதனால் புலிகளுக்கு பல இயல்பான முடிவுகள் இருந்தன:

1. தகமையான சிவில் நிர்வாகத்தினை வெளிக்காட்டுவதூடாகவும் படிப்படியாக சர்வதேச தராதரத்தினை எட்டுவதனூடாகவும் (மனிதஉரிமைகள் மற்றும் ஆட்சிமுறை) இடைக்கால நிர்வாகத்திற்கான தனது முயற்சிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெறல்,
2. நோர்வே சமாதான முயற்சிகளானது இணைந்த வகையில் பிற சர்வதேச தரப்புகளுடன் குறிப்பாக சர்வ-தேச விமர்சகர்களுடனான தொடர்பாடல் வாய்ப்புகளை வழங்கும்,
3. இந்த நெறிமுறைகள் ஊடாக பல்வேறு உள்நுழைதலுக்கான வாய்ப்புக்கள் (சர்வதேச கொடைகள், அரசியல் உள்நுளைவு, நிறுவனமயப்படலுக்கான ஆதரவு பெறப்பட்டு தனது நிர்வாக திறனை வெளிக்காட்டிடலாம்.

இங்கு முக்கியமானது என்னவெனில், சர்வதேச தரப்பினர் - குறிப்பாக அமெரிக்கா - புலிகளை, இயல்பில் வன்முறை நிறைந்த - விட்டுக்கொடுப்பற்ற தரப்பு, சமாதான முயற்களில் சர்வதேச நெருக்குவாரத்தால் ஈடுபடுகின்ற - கிடைக்கின்ற அவகாசத்தை மற்றுமொரு இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆயத்தப் படுத்துவதற்கான வாய்ப்பாக அல்லது இரண்டுவகைப்பட்டதுமான தரப்பாகப் பார்க்கப்படுகின்றனர். இந்தப் பார்வையின் பின்விளைவுகள் என்னவெனில் - சிறீலங்கா அரசு போரினால் களைப்புற்ற சிறீலங்கா ஆயுதப் படைகளை மீள் ஒழுங்குபடுத்தவும், மீள ஆயுதமயப்படுத்தவும் தேவையான பிரதான சர்வதேச உதவிகளை வழங்குதல், புலிகளுக்கான மீள்விநியோகங்களை தடுப்பதற்கான சர்வதேச உதவிகள் (சிறீலங்க கடற்படை ஆயுதங்களையும் காவக்கூடிய புலிகளின் வணிகக் கப்பல்களை அழிப்பதற்கு உதவுதல்), பாரிய இருதரப்பு மற்றும் பல தரப்பு உதவிகளை வழங்கி சிறீலங்காவின் போரால் சேதமுற்ற பொருளாதாரத்தை நிலைப்படுத்தி மீளக்கட்டுவதற்கு உதவுதல் போன்றன. காலங்கள் ஊடாக இந்த வழியின் விளைவுகள்: சமாதான நெறி முறைகளை உருவாக்கிய மூலோபாய சமநிலையை இறுக்கமான முறையில் அரசுக்கு ஆதரவாக திருப்புதல். அதிகரித்த பாதுகாப்பு கரிசனைகள் - குறிப்பாக மோசமடையும் நிழற்போர் வன்முறை சுழற்சிகள் - இடைக்கால நிர்வாகம் போன்ற அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளுக்கான சாத்தியத்தை (கூட்டாட்சி தீர்வு போன்ற மைய விடயங்கள் பேசுவதையும் அப்படியே விட்டுவிட்டு) முன்கூட்டியே மூடியது.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வு எனும் புலப்படாத கரிசனை மற்றும் நோர்வேயினால் சடங்கு போன்று கடைப்பிடிக்கப்பட்ட புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் பேணப்பட்ட சமதரப்பு நிலை என்பன மத்தியிலும் புலிகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் சந்தேகம் வெளிப்பட்டது. அமெரிக்கா போன்ற சில தரப்பினர் புலிகளை "பயங்கரவாதத்திற்கெதிரான உலகப்போர்'' என்கின்ற சட்டகத்துக்குள் செயல்வடிவில் பொருத்தினர். புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான வழமையான எதிர்மறையான அர்த்தப்படுத்தல்களின் (அரசுக்கு பொதுவான அனுதாபமான அணுகுமுறை) பரவல், போரில் இருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப் படுத்தும் பல வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்படுவதற்கும் - மிக முக்கியமாக புலிகள் அமைப்பினும் தோற்றம் பெற்ற அடிப்படையான மாற்றுநிலைப்படுத்தும் வீச்சை பலவீனப்படுத்துவதற்கும் - வழிவகுத்தது.

நாங்கள் முன்னர் சுட்டிக்காட்டியது போன்று, எந்த பிற அரசியல் தரப்புகள் போல புலிகளும் ஒரு ஒற்றையான தரப்பல்ல என்பதுடன் அதனது முடிவுகள் கூர்வடிவ ஒழுங்கில் - முன்னுள்ள சாத்தியமான வாய்ப்புக்கள் தொடர்பான உள்ளக ஆய்வுகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. நோர்வே சமாதான நெறிமுறைகளின் ஆரம்பகட்டங்கள் கணிசமான அளவிலான உள்ளக கலந்துரையாடல்கள், சமாதான நெறிமுறைகளை ஆதரிக்கும் சர்வதேச தரப்பினருடன் புலிகளின் பலமட்டங்கள் மேற்கொண்ட

பரிமாற்றங்களினால் ஊக்குவிக்கப்பட்டது என்பது மூத்த புலிகள் இயக்கத்தினருடன் உரையாடும் போது தெளிவாகியது. "புறாக்கள" மற்றும் "வல்லூறுகள்" என்னும் மோசமான வகைப்படுத்தல்கள் பல்வேறுவகைப்பட்ட பார்வைகள் நிலவுவதைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையெனினும், புலிகளின் வலுமிக்க பிரிவுகள் சர்வதேச ஆதரவுபெற்ற சமாதான முறைகள் வழங்கிய சாத்தியங்களை முழுமையாகப் பிரயோகிக்க ஆர்வமாக இருந்தனர். குறிப்பாக, இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கி தமிழர் போராட்டத்தை சர்வதேச அரசியல் அரங்கிற்கு நகர்த்தும் விடயங்களில் ஆர்வமாகவிருந்தனர். பிறர் சர்வதேச நோக்கம் பற்றிய நம்பிக்கையின்மையைக் கொண்டிருந்தனர். குறிப்பாக, முன்னைய வருடங்களில் இடம்பெற்ற மூர்க்கமான மோதல்களில் தமிழ்ப்பொதுமக்கள் இராணுவ வன்முறைகளால் பாதிக்கப்பட்ட போது சிறீலங்கா அரசின் முக்கிய கூட்டாளிகளாக இருந்தவர்கள் எவ்வாறு தற்போது பேச்சுவார்த்தைகளை ஆதரிக்கின்றனர் மற்றும் புனர்வாழ்வின் அவசர தேவைகளை வற்புறுத்துகின்றனர் போன்ற கேள்விகளை உதாரணங்களாகக் கொள்ளலாம். இந்த விவாதங்கள் சில காலம் தொடர்ந்த வேளையில், சமாதான முயற்சிகளின் ஆரம்ப கட்டங்களில் - சமாதான முயற்சிகளை எதிர்க்கும் வலுவான தெற்கின் மீது சர்வதேச அழுத்தம் அழுத்தங்களை கொடுத்ததாக பார்க்கப்பட்ட போது - "புறாக்கள்" வலுப்பெற்றனர். இது புலிகள் சர்வதேச சமூகத்துடன் பலவித தொடர்பாடல் முயற்சிகளை எடுப்பதற்கு வழிவகுத்தது. அவற்றுள், 2003ல் இடம்பெற்ற கூட்டாட்சி கற்கைக்கான பயணம், வயது குறைந்த புலிகளின் படையினரை மீள சமூகத்திற்குள் உள்வாங்குவதற்காக யுனிசெவ் உடனான நடவடிக்கை திட்டம், தேர்வு செய்யப்பட்ட சில ஐரோப்பிய அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புலிகளின் காவல் மற்றும் நீதித்துறையினை மேம்படுத்துவதற்கான தொடர்பாடல்கள் என்பன போன்றன உள்ளடங்கும்.

சர்வதேச சமூகத்தின் முக்கிய உறுப்பினர்கள் சிறிலங்கா இராணுவத்தினை மீளக்கட்டுவதற்காக மேற்கொண்ட துரித நடவடிக்கையும் (பொருளாதாரத்தினை தாங்குவதற்கான விரிவான நடவடிக்கைகளுடன்), அதனுடன் இணைந்த வகையில் புலிகள் மீது காட்டப்பட்ட பகைமையும் இந்த "புறாக்களின்" நிலையைப் பலவீனப்படுத்தியது. போர்நிறுத்த உடன்பாட்டை அரசு கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தாத சர்வதேச தரப்பின் தோல்வி (குறிப்பாக துணைப்படைகளின் ஆயுதக்களைவு, பெருமளவிலான தமிழர் குடியிருப்பு பிரதேசங்களிலிருந்து இராணுவம் வாபஸ் பெறாமை போன்றன) அல்லது முன்னைய சுற்று பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தாமை போன்றன "சமாதான பொறி" என்னும் "வல்லூறுகளின்" வாதங்களை பலப்படுத்தியது. புலிகளின் உறுப்பினர்களையும், குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் - ஊடகவியலாளர்கள் - மனிதாபிமான பணியாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என்போர் இராணுவ ஆதரவு பெற்ற துணைப்படைகளால் கொல்லப்பட்ட வன்முறை சுழற்சி மோசமடைந்த வேளையில் மாற்றுநிலைப்படுத்தும் அணுகுமுறையை ஆதரிப்போர் தவிர்க்கமுடியாத வகையில் ஓரங்கட்டப்பட்டனர். இதனால், மேலே பட்டியலிடப்பட்ட பல முயற்சிகள் சாவடைந்தனவாகிவிட்டன. உண்மையில், இணைத்தலைமை நாடுகள் போன்ற பல சர்வதேசத் தரப்பினர் நெருக்கமாக ஒன்றாக பணியாற்றியமையினால் சமாதான முயற்சிகளின் பல தரப்புச் சர்வதேச ஈடுபாடுகளும் "வல்லூறுகளின்" கணிப்பில் அமெரிக்க தலைமையிலான "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்று குறுக்கப்பட்டது. ஆட்சிமுறைக்கான கட்டமைப்பினை உருவாக்குவதற்குப் பதிலாக மூலோபாய பாதுகாப்பு, புலிகளின் முதன்மைக் கரிசனையாகி வருகின்ற போது மாற்றுநிலைப்படுத்தும் முயற்சிகள் மேலும் முன்னுரிமையற்றதாகிவிட்டது.

சுயதிருப்தி தரும் எதிர்வுகூறல் கட்டவிழ்ந்தது. புலிகளின் மாற்று நிலைப்படுத்துதலுக்கான தயார் நிலையை சந்தேகத்துடன் பார்த்த சர்வதேச சமூகம், புலிகளின் மாற்றுநிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மந்தகதி அடைவதை தங்களது சந்தேகத்திற்கு சார்பான சான்றாக சுட்டிக்காட்டினர். மோசமடையும் பாதுகாப்பு சூழலில் (இதற்கான குற்றச்சாட்டுக்கள் தவிர்க்க முடியாதவாறு புலிகளில் போடப்பட்டு), புலிகள் சமாதான முயற்சிகளை தொடர்வதற்கு தேவையான தாக்கமுள்ள நிர்ப்பந்தத்தினை வழங்குமாறு அமெரிக்கா உட்பட வலுமிக்க சர்வதேசத்தரப்புகள் கோரியது. இது மேலும், மாற்றுநிலைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான வெளிகளைக் குறைத்தது. உதாரணமாக, 2005ன் ஐரோப்பிய பயணத்தடை மற்றும் முற்றுமுழுதாகப் புலிகளுக்கெதிராக 2006 ஆரம்பத்தில் ஐரோப்பியஒன்றியம் மற்றும் கனடாவினால் விதிக்கப்பட்ட முற்றிலுமான தடை போன்றன புலிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையேயான தொடர்பாடல் வாயப்புக்களை முற்றிலும் மூடியது. இந்த தடைகளில் எதுவித விதிவிலக்குகளும் வழங்கப்படவில்லை. உதாரணமாக, புலிகளின் அரசியற்பிரிவு அல்லது சிவில் நிர்வாகபிரிவுகளுடனான தொடர்புகளுக்கும் விலக்குக்கள் கிடைக்கவில்லை. புலிகள் அரசியல் மாற்றுநிலைப்படுத்துவதை (சர்வதேச சமூகத்தினால் புரிந்து கொள்ளப்பட்டவாறு) ஊக்குவிப்பதே நோக்கமெனில் இந்த நகர்வு முரண்நிலைஉண்மையாகும். ஏனெனில், புலிகளின் இந்த பிரிவுகளே பெரும்பான்மையான சர்வதேச தரப்புகளுடன் மாற்றுநிலைப்படுத்தும்

[46] புறாக்களும், வல்லூறுகளும் எந்தப் பிரிவுகளிலும் காணப்படுகின்றது. எனினும், வேறுபட்ட அளவிலான ஆதிக்கத்துடன்.

www.tamilarangam.net

அணுகுமுறை மற்றும் நடவடிக்கைகளில் உறவாடல்களை மேற்கொண்டு வந்தது. இந்தத் தடை அத்தகைய முயற்சிகளுக்கு இடையூறு செய்ததுடன் முன்கூட்டியே அவற்றினை மூடியது. மேலும், புலிகளின் அகத்தே இத்தகைய நடைமுறையை ஆதரிப்போரையும் பலவீனப்படுத்திவிட்டது. சுவராசியமான முறையில், ஜரோப்பிய நாடுகள் பேச்சு வழியிலான தீர்வையும் புலிகளுடனான உறவாடல்களையும் ஆதரிப்பதாக தொடர்ந்தும் உறுதி கூறுகையில், நடைமுறையில் இயக்கம் தான ஜரோப்பிய ஒன்றியத்தின் 2006ம் ஆண்டுத் தடை அவசியமான இடைவெளியை அகற்றியதுடன் இந்த ஆதரவை மயக்கத்திற்குள்ளாக்கியுள்ளது.

சிறீலங்கா அரசு சர்வதேச சமூகத்தின் புலிகள் எதிர்ப்பு நடவடிக்கையால், இராணுவ வழியை அதிகரித்த மூர்க்கத்துடன் முன்னெடுக்குமளவு, பலப்படுத்தப்பட்டதாக உணர்ந்த வேளையில் புலிகளின் பதில் வன்முறைகள் சர்வதேசதரப்பினை இயக்கத்தை சிதறவைப்பதற்கான கூடியளவு தாக்கத்தை செய்யுமாறும் ஊக்குவித்தது. சர்வதேச தோற்றப்பாட்டில் கூட புலிகள் “மாற்றுநிலைப்படுவதற்கு தயார் இல்லை” என்பது சுயதிருப்திபடும் எதிர்வுகூறல்களாக அமைந்தது. இவை புலிகளின் சர்வதேச விமர்சகர்களிடம் குறிப்பிட்டு சொல்வதற்கான ஆட்சேபங்கள் எதுவுமில்லையென்று சொல்லவில்லை. புலிகள் வடக்குகிழக்கு (அரச கட்டுப்பாட்டு பகுதிகள் உட்பட) வணிக வரிவிதிப்பினை மேற்கொள்ளுதல், பதினெட்டு வயதிற்குக் குறைவானவோரைப் படையில் சேர்த்தல், தங்களை எதிர்க்கும் தமிழ்க்குழு உறுப்பினர்களை அரசியல் கொலை செய்தல், தனது கட்டுப்பாட்டு பகுதியில் சுதந்திர ஊடகம் மற்றும் அரசியல் பன்மைத்தன்மையை எதிர்த்தல் மற்றும் சர்வாதிகார வடிவிலான நிர்வாகத்தை நடத்தல் போன்றவற்றிற்காக விமர்சிக்கப்பட்டனர். ஆனால் இவை குழப்பமற்ற குற்றச்சாட்டுகள் அல்ல. மேலும் இந் நடவடிக்கைகளைப் பொறுத்து அல்லது ஆதரித்து நிற்காமல் இவை ஒவ்வொன்றும் உள்ளடக்கத்துடன் பார்க்கப்படல் வேண்டும் என்று நாங்கள் வாதிக்கின்றோம். இவற்றிற்கு முகம் கொடுப்பதற்காக இலக்குகளையும், அளவீடுகளையும் கொண்டதொரு பயணவரைவொன்றுக்குப் புலிகளோடு இணக்கம் காணல் வேண்டும். சர்வதேச பிரக்ஞையில் இந்த விடயங்கள் பெரிதாக காணப்படும் அதேவேளையில், முரணாக தமிழ்ச் சமூகம் மீதான இனத்துவ நோக்கு, தற்போது நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைகள், தமிழ்ச்சமூகத்துடன் அதிகாரத்தை பகிரும் ஏற்பாட்டுக்கு உடன்பட தயாரில்லாத நிலை மற்றும் பேச்சுவார்த்தையிலிருந்து இராணுவழித்தீர்வுக்கு சிறிதளவான கரிசனையுடன் மட்டுமே சென்ற நிலைப்பாடு உட்பட பல்வேறு தோல்விகளை சிறீலங்கா கொண்டிருந்தது. உண்மையில், நூற்றுக்கணக்கான மக்களை கைதுசெய்தல போன்ற இத்தகைய ஒடுக்குமுறை வடிவங்கள் புலிகளுக்கும் அரசுக்குமான பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்காக பேச்சுவார்த்தை விடயங்களாக குறுக்கப்பட்டன.

புலிகளின் நம்பகத்தன்மை தொடர்பான சர்வதேச சந்தேகப்பார்வையானது நோர்வே சமாதான முயற்சிகளின் போது புலிகள் வெளிக்காட்டிய இலகுதன்மையை பாராட்டத் தவறிவிட்டன. உதாரணமாக, சிறிலங்கா இராணுவம் போர்நிறுத்த உடன்பாட்டில் இயல்புநிலையை தோற்றுவிக்கும் சரத்துக்களை குறிப்பாக நடைமுறைப்படுத்த தவறிய போதும் 2002 பேச்சுக்களில் புலிகள் உள்நுழைந்தனர் (ஆரம்பம்தொட்டே கொழும்புடனான நேரடிப்போச்சுக்களுக்கு போர்நிறுத்தல் உடன்பாட்டை முழுமையாக அமுல்படுத்தல் ஒரு முன்நிபந்தனை எனப் புலிகள் வலியுறுத்தி வந்தனர்). தமது முதன்மையான நோக்கமான இடைக்கால நிர்வாகம் நிகழ்ச்சிநிரலில் இருந்து இலகுவாக அகற்றப்பட்ட போதும் கூட (குறைந்த மட்டத்திலான - போதியளவு வலுவற்ற உபகுழுக்கள் பதிலாக வழங்கப்பட்டது) புலிகள் நேரடிப்பேச்சுககளினை தொடர்ந்தனர். 2003ல் சிறிலங்கா கடற்படையினால் இரு ஆழ்கடல் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு பன்னிரண்டு போராளிகளின் உயிர்கள் இழக்கப்பட்ட போதும் புலிகள் போர்நிறுத்தல் உடன்படிக்கையை கடைப்பிடித்தனர். அரசுரிமை - விடுதலைக்கான இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கம் கூட்டாட்சி முறைமையை பரிசீலித்துப் பார்த்தல் என்பதற்கு உடன்படல் எனும் வேதனையான பிரகடனத்தினை செய்த போது அவை சுதந்திரத்தினை முன்னெடுப்பதற்கான தந்திரோபாய படிக்கற்களாக அல்லது மீள ஆயுதம்தரிப்பதற்கான கால அவகாசத்தை பெறும் நம்பிக்கையற்ற சதியாக பார்க்கப்பட்டது. இத்தகைய சர்வதேச நம்பகமின்மையால் “நிர்ப்பந்திக்கும்“ வழிமுறைகளே புலிகளுடனான பரிமாற்றமாகப் பார்க்கப்பட்டது.

புலிகள் தொடர்பான முக்கிய சர்வதேச நம்பகமின்மை ஏற்படுத்திய முக்கிய பின்விளைவு, அதனது நிறுவனங்களை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு கொடுக்கப்பட்ட அர்த்தப்படுத்தல்களில் வெளிப்படுகின்றது. புலிகளின் ஆயுதங்களை களைவதையும், படைக்கலைப்பு செய்வதையும் (அரசியல்கட்சியாக மாற்றுதல்) இயக்கத்தினை மாற்றுநிலைப்படுத்துவதற்கான தனித்துவத் தகைமையாக பிரயோகிக்கப்படுகையில், அதனது நிறுவனங்களை கட்டியெழுப்பும் நடவடிக்கை சிக்கலுக்குரியதாகவும், பின்னடைவானதாகவும் பார்க்கப்பட்டது. பல சர்வதேசதரப்பினர் புலிகளின் நிறுவனங்களுக்கு பங்களிக்கும் நடவடிக்கைகளை தவிர்க்குமாறு தீவிரமாக வேண்டப்பட்டனர். அமெரிக்கா போன்ற சில தரப்பினர் சட்டத்தடைகளை காரணம் காட்டி புலிகளை முற்றிலும் தவிர்த்தனர். உதாரணமாக, 2005ல் புலிகள் சிறீலங்கா அரசுடன் சுனாமிக்கு பிற்பட்ட முகாமைத்துவ உடன்பாட்டைக் கண்ட போது அமெரிக்கா உடனடியாக அந்தக்

கட்டமைப்பு ஊடாக தனது சுனாமி உதவிகள் செல்வதற்கு மறுத்தது. எனினும், ஐரோப்பிய ஒன்றியமும் பிறரும் பகிரங்கமாக கொடைகளைப் பகிரும் பொறிமுறைக்கு தீவிர வெளிப்படையான ஆதரவை வெளிப்படுத்தினர். நாங்கள் மேலே விவாதித்தவாறு, அரச நிறுவன கட்டமைப்புக்கள் வடக்குகிழக்கில் மோதல்களாலும், அரசு புறக்கணிப்பாலும் பெருமளவில் உடைவடைந்திருந்தன. நிறுவன கட்டமைப்புக்கள் (குறிப்பாக போர் வலயங்களில்) மீள்கட்டமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளிற்குத் தேவைப்பட்டன. மேலும், நீண்டகால அடிப்படையில் - அதிகாரப்பகிர்வுக்கு தாக்கமுள்ளதாக இருக்க வேண்டுமாயின் - வடக்குகிழக்கில் நிறுவன கட்டமைப்புக்கள் மேம்படுத்தப்படுவது அவசியமானது என்பதுடன் அவை புதிய அரசமைப்பு ஏற்பாடுகளுடன் (அது எவ்வாறானதாக இருப்பினும்) இணைய வேண்டும். புலிகளின் சிவில் நிர்வாக கட்டமைப்பு பலப்படுவதை தவிர்க்கும் வழிகளை தேடுவது போருக்கு மீளச்செல்வதை தடுக்கும் என்பது முரண்நிலைஉண்மையாகவுள்ளது. குறிப்பாக, இதற்குச் சமாந்தரமாக, குறிப்பிடத்தக்களவு நிதி மற்றும் பிற உதவிகள் அரசிற்கு வழங்கப்படுகின்றது. ஆர்வமூட்டும் விதத்தில், 2003 யூனில் டோக்கியோவில் சரவதேச கொடையாளர் சமூகம் சந்தித்தபோது 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்குவதாக வாக்களிக்கப்பட்டதுடன், இதில் சிறு பகுதி வடக்குகிழக்கிற்கு ஒதுக்கப்பட்டது. நடவடிக்கையளவில், டோக்கியோ பிரகடனமானது புலிகளும் அரசும் கூட்டாட்சி தீர்வுத் திட்ட முயற்சிகளில் முன்னேறுவது இந்த அவசர மறுகட்டமைப்பு மற்றும் புனரவாழ்வு நிதிக்கான நிபந்தனையாகவுள்ளது. எனினும், சிறீலங்காவிற்கான பிற இருதரப்பு மற்றும் பலதரப்பு கொடைகள் எதுவித நிபந்தனைகளுக்கும் உட்படவில்லை. நடைமுறையில், புலிகளின் அரசியல் சமரசநிலையே (அதனை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளுமானால்) வடக்குகிழக்கிற்கான சர்வதேச உதவிகள் கிடைப்பதற்கான ஒரே வழியாகியது.

வடக்குகிழக்கு மனித உரிமைகள் செயலணி பற்றிய விடயமும் முரண்நிலைஉண்மையை பிரதிபலிக்கின்றது. மனித உரிமைகள் செயலணியானது 2004 நடுப்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான வன்னியில் உருவாக்கப்பட்டது . வடக்கு கிழக்கில் மீறல்களை கண்காணிப்பதற்கும் மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்குமாக உருவாக்கப்பட்டது. இது புலிகளினால் தெளிவாக அங்கீகரிக்கப்பட்டாலும், இதன் பணியாளர்களாக சமூகத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க உறப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என்போரை கொண்டிருந்தது. புலிகள் இயக்க உறுப்பினர்கள் உள்ளடங்கவில்லை. புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை செயலணி விசாரணை செய்வதற்கு ஒத்துழைக்க ஒப்புக்கொண்டனர். ஆனால், இந்த அமைப்பு சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்று பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், செயலணி சுயாதீனமாகச் செயற்பாட்டுக்காக சர்வதேச நிதி ஆதரவுகளை கோரிய போது அது சாத்தியமற்றதாகியது. செயலணியானது புலிகளின் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதி என்பதால் சுயாதீனமானதல்ல என்ற காரணத்தினைக் காட்டி கொடையாளர்கள் நிதி வழங்க மறுத்தனர் (முரணாக சிறிலங்கா அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படும் மனித உரிமை ஆணைக்குழுவானது மனித உரிமைகள் விடயத்தில் நடுநிலைமையானதா எனும் சந்தேகத்தால் பாதிக்கப்படவில்லை). மேலும் இந்த அமைப்பானது - புலிகள் அல்லாத - சிவில் சமூகநிலையில் நம்பகமான பணியாளர்களைக் கொண்டது. இந்த நிறுவனம் வயது குறைவான புலிகள் இயக்க படைவீரர்களை விடுவிப்பது உட்பட வன்னியில் சில மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பகரமான வெற்றிகளை சாதித்த போதும் இன்று அனேகமாகச் செயலிழந்து விட்டது.

செயலணி விடயத்திலும் இத்தகைய சுயதிருப்தி கொள்ளும் ஆரூடங்கள் காணப்படுகின்றன. சர்வதேச சமூகத்தை பொறுத்தவரை செயலணியானது மனித உரிமைமீறல்கள் பற்றிய விமர்சனத்தை தவிர்ப்பதற்கான நம்பிக்கையற்ற வஞ்சகத்திட்டமும் - சர்வதேச கொடையாளர்களிடமிருந்து நிதி பெறுவதற்கான வழியுமாகும் - செயலணியை ஆதரிக்க மறுப்பதன் மூலம் புலிகளின் தந்திரம் தோற்கடிக்கப்பட்டது. புலிகளின் பார்வையில் செயலணி விடயமானது, அரசியல் சந்தர்ப்பவாதத்தினை முதன்மையாக கொண்டுள்ளதாக தோற்றம் கொண்ட, சர்வதேச சமூகத்தின் மனித உரிமைகளுக்கான ஈடுபாடு பற்றிய கற்கையாகும். வடக்குகிழக்கில் மனித உரிமைகள் பணிமனையை உருவாக்குவதன் மூலமே சாதகமான விளைவுகளை பெறலாம் என்பதே வாதமாகும். தொடக்கத்தில் செயலணியின் பாரபட்சமற்ற தன்மை மீது சந்தேகமிருப்பின், அது தொடக்க நிதிகளை மிகக் குறைவாக பெற்றுக்கொண்டு - தொடர்ச்சியான நிதிகளை செயற்பாடு பற்றிய நிபந்தனைகளுடன் ஏன் பெறமுடியவில்லை?. இரண்டாவது, சர்வதேசரீதியாக நிதி ஆதரவு (வெளிப்படையானதன்மையுடன்) வழங்கப்படும் செயலணி - நம்பகமான உள்நாட்டு பிரமுகர்களை

---

[47] தமிழ்நெட்2004. 'மனிதஉரிமைகள் குழுக்கள் பிரகடனத்தினை முடிவுசெய்ய ஒன்றுகூடினர்' ஆகஸ்ட்1

[48] 2005 மனிதஉரிமைகள் நாளில் புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சுப.தமிழ்செல்வன் 'மனிதஉரிமைகள் கடந்த சிலவருடங்களாக முக்கியத்துவம் பெறுகின்றது - உலக பயங்கரவாதச் சூழலானது அரசுகளை தங்கள் நலன்களை முன்னெடுப்பதற்கு மனிதஉரிமைகளை கருவியாகப் பாவிக்கின்றனர்' தமிழ்நெற் 2005 புலிகளின் மனிதஉரிமைகள் ஈடுபாடு ஆக்கபூர்வமான தடத்தில் - தமிழ்செல்வன் டிசம்பர் 11.

www.tamilarangam.net

கொணடதாகவும் - மனிதஉரிமைகள் விடயத்தில் புலிகள் மீது தீவிர அழுத்தத்தை கொண்டுவரக்கூடியதாகவும் இருந்திருக்கலாம். பொதுவாக, சிறிலங்கா பூராவும் மனிதஉரிமைகள் மேம்பாட்டுக்கான தமது ஆதரவை கொடையாளர்கள் பிரகடனப்படுத்துவதன் மத்தியில், செயலணி இதற்கான மற்றுமொரு சொத்தாக இருந்திருப்பதுடன் அது இந்த நோக்கில் கொள்கை அடிப்படையிலான சர்வதேச அங்கீகாரத்தினையும் பெற்றிருக்கும்.

சர்வதேச கொடைகளுக்கான டோக்கியோ உதவி வாக்குறுதிகளில் இணைக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் மற்றும் செயலணி எனும் உதாரண விடயம் கோடிட்டுக் காட்டுவது என்னவெனில், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதஉரிமைகள் மேம்பாடு என்பன சிறிலங்காவில் அதீத அரசியல்மயப்படுத்தப்பட்டதாக வெளிபடுகின்றது. இவை நிபந்தனைகளுக்கு எதிரானதாக அல்லது மனிதஉரிமை மேம்பாட்டிற்கெதிரானதாக வாதிக்கப்படவில்லை. மாறாக, கொடையாளர்களும் விசாலமான சர்வதேசசமூகமும் கொள்கைமயப் படுத்தப்பட்ட நிலைப்பாட்டை மனிதாபிமான - மனித உரிமைகள் விடயத்தில் எடுத்திருந்தால் சாதகமான தாக்கத்தை இலகுவாக ஏற்படுத்தியிருக்கலாம் என்பதைக் குறித்துக் கொள்கின்றது. முக்கியமாக, அதன் உறுப்பினர்கள் கூறுவது போன்று சர்வதேச சமூகமானது இலங்கை மோதுகை முறைமையில் வெளியானதரப்பல்ல - மாறாக மோதுகை முறையில் உள்ளடங்கிய பகுதியாக, உள்நாட்டுத் தரப்பினருக்கு பிரதிபலித்து - அவர்களை மீள்ப்பிரதிபலிக்க தூண்டுகிறது. செயற்பாடுகளின் விளைவுகள் விரிவான மோதுகைமுறைமையில் ஏற்படுத்தும் தாக்கத்தினை கவனத்திலெடுக்காமல், மோதுகை முறைமையின் குறுகிய இழைகளை பிரதானப்படுத்திச் செயற்படும் (உதாரணமாக, புலிகளை அதனது வன்செயல்கள் எனும் அடிப்படையில் தடைவிதித்தல்) தன்மையானது தீவிரமான மோசமான விளைவுகளை நோர்வே சமாதான முயற்சிகளிற்கு ஏற்படுத்தியதுடன் முற்றுமுழுதான மோதலுக்கு மீள திரும்புவதைத் துரிதப்படுத்தியது. இத்தகைய குறுகலான சர்வதேச அணுகுமுறையானது சிறிலங்கா அரசு மோதலுக்கு இராணுவத்தீர்வை முன்னெடுப்பதற்கு பொருத்தமானதாக இருந்தது. மேலும், தமிழர்களுக்கு போதியளவான அரசியல் விட்டுகொடுப்புகளை தவிர்ப்பதற்கும் அனுமதித்தது. சுருக்கமாக, சர்வதேச மறுப்பு அல்லது நம்பிக்கையீனத்தினால் வகைப்படுத்தப்பட்ட, அரசு சார்புத்தன்மை மற்றும் “அரசு அல்லாத“ தரப்புகளுடன் உறவாடுவதற்கான சட்டஅழுத்தம் போன்ற வரம்புகளிலிருந்து வெளியேற இயலாமை என்பன சிறீலங்கா அரசினது தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை வலுப்படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முடிவுரை

சிறீலங்கா மோதலில் சிக்கல் தன்மையானது ஒரு நீட்டுவாக்கு வழி ஆய்வின் எல்லைகளை வெளிப்படுத்துவதுடன் முறைமைப்பட்ட அணுகுமுறைக்கான மறுக்கமுடியாத தேவையை வெளிப்படுத்துகின்றது. மோதுகை ஆய்வுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்பபுள்ளியான 1983 என்பதே பிரச்சனைக்குரியது. சிறிலங்கா மோதலின் வேர்கள் -வெஸ்ட்மினிஸ்டர் வடிவிலான பாராளுமன்ற அரசமைப்பு ஏற்பாட்டை இனத்துவ மற்றும் மத அடிப்படையில் பிளவுபட்ட சமூகங்களிடையே புகுத்துவது என்பன போன்ற தவறான திணிப்புக்களையும் உள்ளடக்கியதாக - காலானித்துவ காலகட்டத்தில் காணப்படுகின்றது. சிறீலங்கா சனநாயகமானது பெரும்பான்மைவாத கொடுங்கோன்மையினை ஆழப்பதித்ததுடன் சிங்கள மேலாதிக்க அரசினால் தமிழர்கள் ஒடுக்கப்படுவது நிறுவனமயப்படுத்துவதற்கு வழிவகுத்தது. புலிகளும் பிற ஆயுதம் தரித்த இயக்கங்களும் தமிழர்களுடைய மனக்குறைகளை அமைதி வழி எதிர்ப்புக்கள் மூலம் அகற்றுவது தோல்வியுற்றதால் தோற்றம் பெற்றன. சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு, தமிழர்களின் கோரிக்கைகளானது மையத்தில் அதிகாரத்தை பகிர்வதில் இருந்து சுயாட்சி (கூட்டாட்சி) என்பதாகி இறுதியில் அரசியல் விடுதலையையும் அரசுரிமையையும் சென்றடைந்தது. போராட்டத்தின் வடிவமானது அமைதி வழி எதிர்ப்பிலிருந்து ஆயுத எதிர்ப்பாக ஈற்றில் அரசிற்குள் ஒரு அரசை அமைப்பதாக நகர்ந்தது. புலிகள் மறைமுகப் போராளிக்குழு என்பதிலிருந்து வளர்ச்சி கண்டு எதிர்ப்பியக்கமாக மாற்றம் கண்டு பின்னர் நிலையான இராணுவம் மற்றும் சிவில் நிர்வாக அமைப்புமாக மாறியது.

2002ல் ஆரம்பமாகிய நோர்வே சாமாதான முயற்சிகள் சிறீலங்கா போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்துவதற்கான நம்பகமான வாய்ப்பை கொண்டதாகவிருந்தது. அத்தகைய மாற்றுநிலைக்கான அடித்தளமானது வடக்குகிழக்கிற்கு புலிகள் செல்வாக்கு செலுத்தும் இடைக்கால அரசாங்கத்தை (வடக்குகிழக்கு முரண்பாட்டுக்கான இறுதித்தீர்வு உருவாகும்வரையில்) உருவாக்குவதிலிருந்தது. இங்கு, புலிகள் "அரசுக்குள் அரசு" என்பதிலிருந்து இடைக்கால நிர்வாகமாக மாற்றம் காண்கையில், சிறீலங்கா அரசு ஒற்றை இனத்துவ ஆளுமையிலிருந்து தமிழர்களுடன் அதிகாரங்களை பகிர்வதற்கு, மட்டுப்படுத்தப்பட்டளவில், மாற்றுநிலைப்படலாம். நோர்வே சமாதான முயற்சிகளின்போது புலிகளுடனான சர்வதேச கையாள்கை இயக்கத்தினுள் தமிழர் போராட்டத்துக்கான வழிவகைகள் தொடர்பான விவாதங்களை தோற்றுவித்தது. "புறாக்கள" அரசியல் நெறிமுறையுடன் கூடியளவான தொடர்பாடலை ஆதரிக்க "வல்லூறுகள" ஆயுதப்போராட்டம் பலவீனப்படுவது பற்றிய எச்சரிக்கையை வெளிப்படுத்தினர். சமாதான முயற்சிகள் தொடர்பான சர்வதேச தொடர்பாடல்கள் புலிகளின் நன்நோக்குப் பற்றிய ஐயத்திலேயே தங்கியிருந்தது. இது போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுவதற்கான நேர்மையான வாய்ப்புக்கள் ஆதரிக்கப்படுவதை தடுத்து விட்டது. மாறாக, இது சர்வதேச நடவடிக்கைகளில் புலிகளுக்கு எதிரான பாரபட்சமாக வெளிப்பட்டதுடன், இதன் பின்விளைவாக சமாதானமுயற்சிகளை தோற்றுவித்த (சிறிலங்காஅரசிற்கும் புலிகளுக்குமான) மூலோபாய சமநிலையை பாதித்தது. இறுதியாக, சர்வதேசத்தின் புலிகள் தொடர்பான ஐயப்பாடு பிரதிபலிக்கப்பட்டு, நடவடிக்கைகள் ஊடாக புலிகள் இயக்கத்தினுள் "வல்லூறுகளின்" ஐயங்களை பலப்படுத்திவிட்டது.

அரசியல் மாற்றுநிலைப்படுத்துவதற்கான வரைவிலக்கணம் "ஆயுதப்போரிலிருந்து அரசியலுக்கு" நகர்தல் என்பதே. அதாவது ஆயுதப் போரிலிருந்து தேர்தல் முறைமைக்குள் நகர்வது என்பது அதீதமாகக் குறுக்கப்பட்ட வடிவமாகும். ஆயுதப்போரிலிருந்து அரசாள்வது என நகர்வது, கெரில்லாக்களாக இருந்து அரசாக மாறுவது எனப்படுவது போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்த வழிவகுக்கும் அரசியல்மாற்று நிலைப்படுத்தலுக்கானதொரு வாதிடும் விடயமாகும். அதுபோன்றே, வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகமானது சிறிலங்காவில் போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைபடுவதற்கான வலுவானதும் நம்பகமானதுமான காவியாகும்.

## புலிகள் பற்றிய இந்தக் கற்கையின் முக்கிய கோட்பாட்டுரீதியான முடிவுகள்:

சமாதான உடன்பாட்டை பிரதானப்படுத்தும் துண்டுபட்ட அணுகுமுறையான தேர்தல்களை நடத்துவது மற்றும் சனநாயகத்திற்கு உதவுவது என்பன நீண்டகாலத்தில் தாக்கமற்றது. எனெனில், மோதல்கள்

www.tamilarangam.net

பொதுவாக கட்டமைப்பு மற்றும் கீழுறையும் முரண்பாடுகளின் விளைவுகளே என்பதாலாகும். நீடிக்ககூடிய சமாதான நெறிமுறைகள் கட்டமைப்பு, விடயங்கள், தரப்புக்கள், மனோநிலை மற்றும் முழுமையான அணுகுமுறையில் தங்கியுள்ள கொள்கைகள் என்பனவற்றின் அடிப்படை மாற்றுநிலைப்படுத்தல்களில் நங்கூரமிடப்படல் வேண்டும். சுருக்கமாக, நீடித்த மோதுதல்களிற்கு நீடித்த சமாதான உருவாக்குதல்கள் தேவை.

மோதல் முறைமையானது நீண்டதும் - நீட்டுவாக்காற்றதுமாகும். அதனால் தரப்புக்கள், விடயங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் நீட்டுவாக்கற்ற வழியில் வளர்ச்சியுறும். இதனால், தரப்புக்கள் அசைவற்றதும் ஒருசீரானவையுமானதல்ல. மாறாக, வேறுபட்ட, தொடர்ச்சியான மாற்றம் காணும் (சுயமாக இயங்கி) நெறிமுறை இயக்கமாகும்.

1.தமிழர்களின் தேசிய விடுதலை திட்டமானது அடிப்படையில் ஒரு அரசியல் போராட்டமும், வன்முறைவடிவில் போராடப்படுவதுமாகும். போராட்டமானது வன்முறை அல்லாத - அமைதிவழி அரசியல் கிளர்ச்சி என்பதிலிருந்து ஆயுதப் போராக காலகட்டங்கள் ஊடான மாற்றுநிலைக்குள் நகர்ந்தது. இந்த ஆயுதப் போரானது இணையாக அரசுகட்டும் திட்டமாக வளர்ச்சி கண்டுள்ளது. புலிகள் ஆரம்பத்தில் சட்டஒழுங்கினை நிறுவனமயப்படுத்தும் கட்டமைப்புக்களை தோற்றுவித்தனர். பின்னர் தாக்கமுள்ள சிவில் நிர்வாகத்தினை உருவாக்கினர்.இதனால் - இதனை “ஆயுதக் குழு“ அல்லது “அரசு அல்லாத தரப்பு“ என்பதிலும் பார்க்க “அரசுக்குள் அரசு“ அல்லது சமாந்தர அரசு அல்லது பிரதியீடான தேச அரசு என்று பேசுவது சிறீலங்கா உள்ளடக்கத்தில், அதிகம் பொருத்தமானமாக அமையும்.

2.மாற்றுநிலைப்படுத்தல் தொடர்பான நீட்டளவுமுறையிலான அணுகுமுறை நிராகரிக்கப்படல் வேண்டும். மாறாக, மாற்றுநிலைப்படுத்தும் நெறிமுறை அசைவை சமநேரத்திலான, குழப்பகரமான, முரண்பாடான வளர்ச்சிப் பாதை கொண்ட சிக்கலான பரிமாற்றமாகப் பார்க்க வேண்டும். இது சிறீலங்காவில் நன்கு உதாரணப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு (அ) புலிகள் எப்போதும் அரசியல் தரப்பு, அரசியல் பார்வையுடன், அரசியல் போராட்டத்தினை வன்முறை ஆதிக்கம்செய்யும் வழியில் முன்னெடுக்கின்றனர். (ஆ) சனநாயக அரசாக உருவாக்கப்பட்ட சிறீலங்கா அரசு முற்றிலுமான சிங்கள - பௌத்த அரசினை உருவாக்கும் சட்ட வலுவினை தனக்குத்தானே சூடிக்கொண்டுள்ளது. மாற்றுநிலைப்படுத்தல் எனும் எண்ணமானது - அது இராணுவத்திலிருந்து அரசியல் தரப்பாகவோ அல்லது சர்வாதிகார அரசு என்பதிலிருந்து சனநாயக அரசாகவோ அமைந்தாலும் - சிறீலங்காவின் அறுபது வருட காலனித்துவத்திற்குப் பிற்பட்ட காலத்து பதற்றம் மற்றும் வன்முறை உள்ளடக்கத்தில் அடிப்படைகள் மீள பரிசோதிக்கப்படல் வேண்டும்.

3.சமாதான முயற்சிகளை ஆதரிப்பதற்கான சர்வதேச மூலோபாயமானது வேறுபட்ட, முரணான கொள்கைவடிவங்களிற்குள் சிக்குண்டு போய்விட்டது. பல்வேறு சர்வதேச தரப்புக்களிடையேயான முறைசாரா வேலைப்பிரிப்பு (லுன்ஸ்ரட் 2007:7) அதிக குழப்பத்திற்கும், ஊகிக்கமுடியாத தன்மைக்கும் இட்டுச்சென்றது. மோதுகை மாற்றுநிலைப்படுத்தல் மற்றும் பயங்கரவாதஎதிர்ப்புப் போர் என்ற இரு வேறுபட்ட வடிவங்களில் பெரும்பான்மையான சர்வதேச தரப்பினர் இயங்கினர். அனைவருக்கும் பயன்தரும் அமைதிமுயற்சியில் அனைத்துத் தரப்புடனும் ஆக்கபூர்வமான தொடர்பாடல்களை மேற்கொள்வது என்று முதலாவது வகையை முன்னிறுத்துகையில், பின்னையது “அரசு அல்லாத“ தரப்பினை இராணுவரீதியாக பலவீனப்படுத்த முயல்கின்றது. முற்றுப்பெற முடியாத மோதல்களுக்கு நீதியான தீர்வினைக் காண்பதுவே பிரதானமாகவிருந்தால் இந்த இரு மூலோபாயங்களும் ஒரேநேரத்தில் முன்னெடுக்கப்பட முடியாதது என நாங்கள் வாதிடுகின்றோம். மாறாக, அதிகம் ஒத்திசைவான, வெளிப்படையான, வெகுமானங்களுக்கான அல்லது நடுநிலை-நலன்கள்சார் ஆதரவே சிறீலங்காவில் சமாதானத்தினை கொண்டுவரல் எனும் இலக்கிற்கு நன்கு பயன்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# உசாத்துணை நூற்பட்டியல்


**Agamben, Georgio (2005):**
State of Exception. Chicago: The University of Chicago Press.

**Alkire, Sabina (2003):**
A Conceptual Framework for Human Security. Centre for Research onInequality, Human Security and Ethnicity, University of Oxford, CRISE Working Paper 2.

**Arunatilake, Nisha, Sisira Jayasuriya and Saman Kelegama (2001):**
The Economic Cost of the War in Sri Lanka. World Development, 29(9), 1483-500.

**Azar, Edward (1990):**
The Management of Protracted Social Conflict: Theory and Cases. Hampshire: Dartmouth.

**Balasingham, Anton (1983):**
Liberation Tigers and Tamil Eelam Freedom Struggle. Madras: Political Committee, Liberation Tigers of Tamil Eelam.

**Balasingham, Anton (2004):**
War and Peace: Armed Struggle and Peace Efforts of Liberation Tigers. London: Fairmax Publishing.

**Bartholomeusz, Tessa J. (2002):**
In Defense of Dharma: Just-War Ideology in Buddhist Sri Lanka. London: RoutledgeCurzon.

**Bartholomeusz, Tessa J. and Chandra R. De Silva (Eds.) (1998):**
Buddhist Fundamentalism and Minority Identities in Sri Lanka. Albany: State University of New York Press.

**Bastian, Sunil and Robin Luckham (Eds.) (2003):**
Can Democracy Be Designed? The Politics of Institutional Choice in Conflict-Torn Societies. London: Zed Books.

**Bentham, Jeremy (1960):**
A Fragment on Government: An Introduction to the Principles of Morals and Legislation. Edited by Wilfried Harrison. Oxford: Blackwell.

**Birch, Anthony H. (2001):**
The Concepts and Theories of Modern Democracy. Oxon: Routledge.

**Blodgett, Brian (2004):**
Sri Lanka's Military: The Search for a Mission. San Diego: Aventine Press.

**Bodansky, Daniel (1999):**
The Legitimacy of International Governance: A Coming Challenge for International Environmental Law. American Journal of International Law. 93, 596-599.

**Bose, Sumantra (1994):**
States, Nations, Sovereignty: Sri Lanka, India and the Tamil Eelam Movement. London: Sage Publications.

**British Broadcasting Corporation (2008) Timeline:**
Sri Lanka http://news.bbc.co.uk/2/hi/south_asia/country_profiles/1166237.stm Accessed February 20, 2008.

**Burg, Steven L. (2003):**
Coercive Diplomacy in the Balkans: The U.S. Use of Force in Bosnia and Kosovo, in: Art, Robert J. and Patrick M. Cronin (Eds.): The United States and Coercive Diplomacy. Washington: United States Institute of Peace, 57-118.

**Burton, John (1990):**
Conflict: Resolution and Prevention. New York: Macmillan.

**Clapham, Christopher (1998):**
African Guerrillas. London: James Currey Publishers.

**Cochran, Molly (1999):**
Normative Theory in International Relations. London: Cambridge University Press.

Conciliation Resources (2008) Chronology http://www.c-r.org/our-work/accord/sri-lanka/chronology.php Accessed February 20, 2008

**Coomaraswamy, Radhika (2003):**
The Politics of Institutional Design: An Overview of the Case of Sri Lanka, in: Bastian, Sunil and Robin Luckham (Eds.): Can Democracy Be Designed? The Politics of Institutional Choice in Conflict-Torn Societies. London: Zed Books, 145-167.

**Daase, Christopher (2001):**
Terrorismus- Begriffe, Theorien und Gegenstrategien. Ergebnisse und Probleme Sozialwissenschaftlicher Forschung, in: Die Friedenswarte, 76(1),55-77.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**De Silva, Kingsley M. (1998)**:
Reaping the Whirlwind: Ethnic Conflict, Ethnic Politics in Sri Lanka. New Delhi: Penguin India.

**DeVotta, Neil (2004):**
Blowback: Linguistic Nationalism, Institutional Decay, and Ethnic Conflict in Sri Lanka. Stanford: Stanford University Press.

**De Zeeuw, Jeroen (2001):**
Building Peace in War-Torn Societies: From Concept to Strategy. The Hague: Netherlands Institute of International Relations 'Clingendael', Conflict Research Unit.De Zeeuw, Jeroen (2005): Projects Do Not Create Institutions: The Record of Democracy Assistance in Post-Conflict Societies. Democratization, 12(4), 481-504.

**Etzioni, Amitai (1968):**
The Active Society: A Theory of Societal and Political Processes. New York: Free Press.

**Fukuyama, Francis (1992):**
The End of History and the Last Man. New York: Free Press.

Galtung, Johann (1990):
Cultural Violence. Journal of Peace Research, Nr.3, 291-296.

**Galtung, Johann (1997):**
Theorien des Friedens, in: Meyer, Berthold (Ed.): Formen der Konfliktregelung. Eine Einfuehrung mit Quellen. (Frieden und Konfliktforschung, Bd.3) Opladen: Leske und Budrich, 55-65.

**Gamage, Siri and Bruce Watson (Eds.) (1999):**
Conflict and Community in Contemporary Sri Lanka.New Delhi: Sage.

**Goodhand, Jonathan, (2001):**
Aid, Conflict and Peace Building in Sri Lanka. London: The Conflict Assessments, Security and Development Group, University of London.

**Goodhand, Jonathan and Bart Klem (2005):**
Aid, Conflict, and Peacebuilding in Sri Lanka 2000-2005. Colombo: The Asia Foundation.

**Graevingholt, Joern, Claudia Hofmann and Stephan Klingebiel (2007):**
Entwicklungszusammenarbeit im Umgang mit Nichtstaatlichen Gewaltakteuren, Bonn: Deutsches Institut fur Entwicklungspolitik.

**Gunawardana, R. A. L. H. (1995):**
Historiography in a Time of Ethnic Conflict: Construction of the Past in Contemporary Sri Lanka. Colombo: Social Scientists' Association.

**Gurr, Ted Robert, Barbara Harff and Anne M. Speca (1996):**
Dynamic Data for Early Warning of Ethnopolitical Conflict. Paper presented at a conference and workshop on Risk Assessment and Crisis Early Warning Systems at the University of Maryland, November 14-16.

**Held, David (2005):**
What should democracy mean today?, in: Held, David (Ed.): The Polity Reader in Social Theory. London: Polity Press, 304-312.

**Herring, Ronald (2001):**
Making Ethnic Conflict: The Civil War in Sri Lanka, in: Esman, Milton and Ronald Herring (Eds.): Carrots, Sticks and Ethnic Conflict: Rethinking Development Assistance. Ann Arbor: University of Michigan Press.

**Hippler, Jochen (Ed.) (2004):**
Nation Building. Ein Schlüsselkonzept für Friedliche Konfliktbearbeitung? Bonn: Dietz.

**Human Rights Watch (2007):**
Return to War. Human Rights Under Siege. Volume 19, 11(c).

**Jayawardene, Kumari (1985):**
Ethnic and Class Conflicts in Sri Lanka: Some Aspects of Sinhala Buddhist Consciousness Over the Past 100 Years. Dehiwala: Centre for Social Analysis.

**Katzenstein, Peter J. and Robert O. Keohane (2006):**
Introduction: The Politics of Anti-Americanisms, in: Katzenstein, Peter J. and Robert O. Keohane (Eds.): Anti-Americanisms in World Politics. New York: Cornell University Press, 1-38.

**Kaufmann, Chaim (1996):**
Possible and Impossible Solutions to Ethnic Wars. International Security, 20(4), 136-175.

**Kearney,** Robert and Barbara Miller (1987) Internal Migration in Sri Lanka and Its Social Consequences. Boulder: Westview Press.

**Kingston, Paul (2004):**
States-within-States: Historical and Theoretical Perspectives, in: Kingston,Paul and Ian S. Spears (Eds.): States-within-States: Incipient Political Entities in the Post- Cold War Era. New York: Palgrave Macmillan, 1-14.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Kingston, Paul and Ian S. Spears (2004):**
Conclusions and Policy Options, in: Kingston, Paul and Ian S. Spears (Eds.): States-within-States: Incipient Political Entities in the Post-Cold War Era. New York: Palgrave Macmillan, 189-192.

**Krishna, Sankaran (1999):**
Postcolonial Insecurities: India, Sri Lanka, and the Question of Nationhood. Minneapolis: University of Minnesota Press.

**Kukathas, Chandran and Gerald F. Gaus (2004):**
Handbook of Political Theory. London: Sage Publications.

**LTTE (1979):**
Letter to Prime Minister R. Premedasa.

**LTTE (1988):**
Socialist Tamil Eelam: Political Programme of the LTTE.

**Lunstead, Jeffrey (2007):**
The United States' Role in Sri Lanka Peace Process 2002-2006. Colombo: The Asia Foundation.

**Manogaran, Chelvadurai (1994):**
Colonization as Politics: Political Use of Space in Sri Lanka's Ethnic Conflict, in: Manogaran, Chelvadurai and Bryan Pfaffenberger (Eds.): The Sri Lankan Tamils: Ethnicity and Identity. Boulder: Westview, 84-125.

**Meyer, Eric (1984):**
Seeking the Roots of the Tragedy, in: Manor, James (Ed.): Sri Lanka in Change and Crisis. London: Croom Helm, 137-52.

**Mill, James (1967):**
Essays on Government, Jurisprudence, Liberty of the Press and Law of Nations. New York: Augustus M. Kelley.

**Mill, John Stuart (1859):**
On Liberty. Indianapolis: Library of Liberal Arts.

**Nithiyanandam, V. (2000):**
Ethnic Politics and Third World Development: Some Lessons from Sri Lanka's Experience. Third World Quarterly, 21(2), 283-311.

**Orjuela, Camilla (2003):**
Building Peace in Sri Lanka: A Role for Civil Society? Journal of Peace Research, 40(2), 195-212.

**Pegg, Scott (2004):**
From De Facto States to States-Within-States: Progress, Problems, and Prospects, in: Kingston, Paul and Ian S. Spears (Eds.): States-within-States: Incipient Political Entities in the Post-Cold War Era. New York: Palgrave Macmillan, 35-46.

**Perera, Jehan (2003)**
LTTE: A Maximal Proposal. South Asia Intelligence Review, Weekly Assessments and Briefings, 2(16).

**Pfaffenberger, Bryan and Chelvadurai Manogaran (Eds.) (1994):**
The Sri Lankan Tamils: Ethnicity and Identity. Boulder: Westview.

**Ponnambalam, Satchi (1983):**
Sri Lanka: National Conflict and the Tamil Liberation Struggle. London: Zed Press.

**Pool, David (2001):**
From Guerrillas to Government: The Eritrean Liberation Front. Oxford: James Currey.

**Rawls, John (1971):**
A Theory of Justice. London: Oxford University Press.

**Reynolds, Andrew (1999):**
Electoral Systems and Democratization in Southern Africa. Oxford: Oxford University Press.

**Rock, Allan (2006):**
Field Trip Report of Special Advisor to the Special Representative of the Secretary General for Children and Armed Conflict. November 4-15.

**Ropers, Norbert (2008, forthcoming):**
Systemic Conflict Transformation: Reflections on the Conflict and Peace Process in Sri Lanka. Berghof Handbook, Berlin: Berghof Research Center for Constructive Conflict Management.

**Ross, Russell R. and Andrea M. Savada (Eds.) (1990):**
Sri Lanka: A Country Study. Washington: Government Printing Office for Department of the Army.

**Rupesinghe, Kumar (Ed.) (1998):**
Negotiating Peace in Sri Lanka: Efforts, Failures and Lessons.London: International Alert.

**Schumpeter, Joseph A. (1947):**
Capitalism, Socialism and Democracy. New York: Harper, 2nd Edition.

**Shastri, Amita (1994):**
The Material Basis for Separation: The Tamil Eelam Movement in Sri Lanka, in: Manogaran, Chelvadurai and Bryan Pfaffenberger (Eds.): The Sri Lankan Tamils: Ethnicity and Identity. Boulder: Westview Press, 208–235.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Sivaram, Dharmaratnam (2004):**
ISGA Bashing: Much Ado About Nothing, in: The Daily Mirror, 25 August.

**Smith, D. (2004) Towards a Strategic Framework for Peacebuilding:**
Getting Their Act Together. Oslo: Norwegian Ministry of Foreign Affairs, Evaluation Report 1/2004.

**Spears, Ian S. (2004):**
States-within-States: An Introduction to Their Empirical Attributes, in: Kingston, Paul and Ian S. Spears (Eds.): States-within-States: Incipient Political Entities in the Post-Cold War Era. New York: Palgrave Macmillan, 15-34.

**Stokke, Kristian (2006):**
Building the Tamil Eelam State: Emerging State Institutions and Forms of Governance in LTTE-Controlled Areas in Sri Lanka. Third World Quarterly, 27(6), 1021-1040.

**Tambiah, Stanley Jeyaraja (1986):**
Sri Lanka: Ethnic Fratricide and the Dismantling of Democracy. London: IB Tauris.

**Tambiah, Stanley Jeyaraja (1992):**
Buddhism Betrayed? Religion, Politics, and Violence in Sri Lanka.London: University of Chicago Press.

**TamilNet (2003):**
Federalism Will Unite Divided Sri Lanka. January19.http://www.tamilnet.com/art.html?catid=13&artid=8189

**Uyangoda, Jayadeva (1998):**
Biographies of a Decaying Nation-State, in: Tiruchelvam, Mithran and Subbanarasimha Dattathreya (Eds.): Culture and Politics of Identity in Sri Lanka. Colombo: International Centre for Ethnic Studies.

**Uyangoda, Jayadeva (2004):**
The Present Crisis: A Way Out, in: The Daily Mirror, July 9.

**Uyangoda, Jayadeva (2007):**
Ethnic Conflict in Sri Lanka: Changing Dynamics. Washington: East West Center.

**Waltz, Kenneth N. (2000):**
Structural Realism after the Cold War. International Security, 25(1), 5-41.

**Weber, Max (1978):**
Economy and Society: An Outline of Interpretive Sociology. Edited by Guenther Roth and Claus Wittich. Berkeley: University of California Press.

Wils, Oliver, Ulrike Hopp, Norbert Ropers, Luxhi Vimalarajah and Wolfram Zunzer (2006): The Systemic Approach to Conflict Transformation. Berlin: Berghof Foundation For Peace Support.

**Wilson, Alfred J. (1988):**
The Break-up of Sri Lanka: The Sinhalese-Tamil Conflict. London: C. Hurst& Co.

**Wilson, Alfred J. and A. Joseph Chandrakanthan (1998):**
Tamil Identities and Aspirations, in: Conciliation Resources (Ed.): Demanding Sacrifice: War and Negotiation in Sri Lanka. London: Conciliation Resources.

**Winslow, Deborah and Michael D. Woost (Eds.) (2004):**
Economy, Culture, and Civil War in Sri Lanka. Bloomington: Indiana University Press.

**Zakaria, Fareed (1997):**
The Rise of Illiberal Democracies. Foreign Affairs, 76(6), 22-43.

**Zartman, William I. (1985):**
Ripe for Resolution: Conflict and Intervention in Africa. New York: Oxford University Press.

**Zartman, William I. (1995):**
Dynamics and Constraints in Negotiations in Internal Conflicts, in:

**Zartman, William (Ed.):**
Elusive Peace: Negotiating an End to Civil Wars. Washington D.C.:
Brookings Institution Press.

**Zirakzadeh, Ernesto Cyrus (2006):**
Social Movements in Politics: A Comparative Study. New York:
Longman.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இணைப்பு 1: வரலாற்று அட்டவணை

மோதுகை வளங்கள் (2008), பிபிசி (2008) என்பனவற்றால் பிரசுரிக்கப்பட்ட காலநிரையிலிருந்து தொகுக்கப்பட்டது. மேலும், போஸ் (1994),வின்சிலோ மற்றும் வுஸ் (2004), குட்கான்ட் - கிலிம் (2005) ஆகியோரின் தொகுப்புக்களிலிருந்து ஆதாரங்கள்

**1802**:இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திற்குட்பட்டது.

**1833**:பிரித்தானிய முழுத் தீவினையும் முதல்தடவையாக ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தது.

**1915**: இலங்கையின் முதலாவது இனத்துவக்கலகம். சிங்களவர்கள் முஸ்லீம்களுடன் கண்டியில் கலகத்தில் ஈடுபட்டனர்.

1948: இலங்கை பெப்.4ல் முழுச்சுதந்திரம் பெற்றது. புதிய அரசமைப்பு காலனித்துவத்தின் கீழ் வகுக்கப்பட்ட ஒற்றையாட்சியினை பாதுகாத்தது. ஒரு மில்லியன் மலையகத்தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

**1949**:தமிழரசுக்கட்சி எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்டது.

**1956**: சிறீலங்கா சுதந்திரக்கட்சியினால் சிங்களம் மட்டும்சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழர்களின் எதிர்ப்பு வடக்கில் இராணுவ அமுல்படுத்தலைக் கொண்டுவந்தது. 100 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

**1958** : பண்டாரநாயக்க - செல்வநாயகம் அதிகாரப்பகிர்வு உடன்பாடு எழுதப்பட்டது. பின்னர் சிங்கள தே-சியவாத எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. தமிழர் எதிர்ப்புக்கலகமானது 12000 மக்களை இடம் பெயரவைத்ததுடன், சிலநூறு மக்கள் கொல்லப்பட்டனர்.

**1962:** சிங்களவர்களை மட்டும் இராணுவத்திற்குள் சேர்த்தல் கொள்கை அமுல்படுத்தப்பட்டது.

**1965**: டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் உடன்பாடு எட்டப்பட்டுப் பின்னர் சிங்கள தேசியவாத எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

**1970:** தரப்படுத்தல் (தமிழர்கள் உயர்கல்விக்கூடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பினை கட்டுப்படுத்தும்) கொண்டுவரப்பட்டது.

**1971:** சிங்கள தேசியவாத தீவிர இடதுசாரிக் அமைப்பான ஜேவிபி யினது கிளர்ச்சி நசுக்கப்பட்டது.

**1972:** பெரும் தேர்தல் வெற்றியைப் பெற்ற சுதந்திரக்கட்சி சிங்களவர்களுக்கான சலுகைகளை வழங்கும் புதிய குடியரசு அரசியல் அமைப்பினைக் கொண்டுவந்தது. பௌத்தத்திற்கு முதன்மை மதம் எனும் தகைமை வழங்கப்பட்டு, நாட்டின் பெயர் சிறீலங்கா என்று மாற்றப்பட்டது. தமிழர் ஐக்கிய முன்னணி தமிழர் கட்சிகள் ஒன்றுசேர்ந்து உருவாகியது. புதிய தமிழ் புலிகள் உருவாகியது.

**1976** : தமிழர் ஐக்கிய முன்னணி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக உருவாகியது. சுதந்திர தமிழீழத்திற்கான வட்டுக்கோட்டை தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய தமிழ் புலிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர்சூட்டப்பட்டது.

**1977:** தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திர தமிழீழ அரசுக்கான ஆணையைகேட்டு தமிழர் பகுதி தேர்தல்களில் பெருவெற்றி பெற்றது. 1000 மேற்பட்ட மக்கள் தமிழர் எதிர்ப்பு கலவரத்தினால் கொல்லப்பட்டனர்.

**1978:** இரண்டாவது குடியரசு அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. அது அதிகாரமிக்க சனாதிபதி முறையை கொண்டுவந்து பாரளுமன்றத்தினை பலவீனப்படுத்தியது.

**1981:** போராளிகளின் நடவடிக்கை வளர்ச்சிகண்டது. வடக்கில் இராணுவ ஒடுக்குமுறையும் கூடியது. தமிழர் எதிர்ப்புக் கலவரம். முக்கிய அமைச்சர் தலைமையிலான குழு யாழ்?. முக்கிய ஆவணக்களஞ்சியமான நூலகத்தினை எரியூட்டினார்கள்.

**1983:** புலிகளின் முதல் குறிப்பிடத்தக்க தாக்குதல். 13 படையினர் கொல்லப்பட்டனர். அந்த படையினரின் இறுதிக்கிரியைகளின் பிற்பாடு பெரும் கலவரம் வெடித்தது. 3000 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.150000 வடக்குக்கிற்கு தப்பியோடினார்கள். அரசமைப்புக்கு 6வது சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டு சுதந்திரம் கேட்பது குற்றமாக்கப்பட்டது. பல்லாயிரக்கணகான தீவிரவாதம் ஊட்டப்பட்ட இளைஞர்கள் புலிகள் மற்றும் இயக்கங்களில் இணைந்தனர்.

**1983-1985:** வடக்குக்கிழக்கில் மோதுகை முழுப் போரா வெடித்தது.

1985: இந்தியா பூட்டானின் தலைநகரான திம்புவில் பேச்சுகளுக்கு மத்தியத்துவம் வகித்தது. புலிகள் உட்பட அனைத்துக் குழுக்களும் ஒன்றுபட்டு திம்புப்பிரகடனத்தினை முன்வைத்தனர். அரசு நிராகரித்தது. பேச்சுக்கள் முறிந்தது.

**1987:** இந்தோ - லங்கா உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. இந்திய அமைதிப்படை உடன்படிக்கையை அமுல்படுத்தவும், ஆயுதக் களைவுக்குமான இலங்கை வந்தது. வடக்குக்கிழக்கில் அடுத்த 3 வருடங்கள் தீவிரயுத்தம் இடம்பெற்றது. ஜேவிபி இரண்டாவது ஆயுதப் போரினை நடத்தியது. அரசு கடும் கலக ஒடுக்கலை

www.tamilarangam.net

மேற்கொண்டது. 60000 சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.
**1988:** அரசு புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தது.
1990: ஜேவிபி முறியடித்த அரசு இந்தியப்படைகளை வெளியேறுமாறு பணித்தது. அமைதி முயற்சிகள் முறிவடைந்தது. புலிகள் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உருவாக்கினார்கள்.
**1991:** இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தற்கொடைத்தாக்குதலால் கொல்லப்பட்டார். இந்தியா புலிகள் மீது குற்றஞ்சாட்டியது.
1993: சனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டார். புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இராணுவ அசைவற்ற நிலை தோன்றியது.
**1994:**புலிகள் புதிய சிங்கள அரசுடன் பேச்சுக்களை ஆரம்பித்தனர்.
**1995:**பேச்சுக்கள் முறிந்து போர் மிகுந்த தீவிரத்துடன் ஆரம்பமாகியது.
**1996 :** அரசு படைகள் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றியது. புலிகள் சிவில் நிர்வாகத்தினை வன்னிக்கு நகர்த்தினார்கள். புலிகள் மத்தியவங்கியை குண்டுவைத்துத்தகர்த்தது 150 கொல்லப்பட்டனர். முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்டது.
**1997:** அமெரிக்கா புலிகளைத் தடைசெய்தது. வன்னியைக் கைப்பற்ற அரசாங்கம் பெரும் படையெடுப்பினை மேற்கொண்டது. 18 மாதங்களின் பின்னர் இது கைவிடப்பட்டது.
**1998:** கண்டி புனிததந்த பௌத்தமதத்தலம் மீதான தாக்குதலின் பின்னர் அரசாங்கம் புலிகளை தடைசெய்தது.
**1999:** நோர்வே இணக்க முயற்சிகள் மறைமுகமாக ஆரம்பமாகின. புலிகள் பல வலிந்து தாக்குதல்களை நடாத்தி வன்னியின் பெரும்பகுதியினைக் கைப்பற்றினார்கள்.
**2000:** புலிகள் ஆனையிறவு இராணுவத்தளத்தினைக் கைப்பற்றினார்கள். சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முறையாக நோர்வே சமாதான இணக்கமுயற்சிகளைக் கோரினார். அரசாங்கம் புலிகளின் போர்நிறுத்தல் அறிவிப்பினை நிராகரித்தது.
**2001:** பிரித்தானியா புலிகளை தடைசெய்தது. யாழ். குடா நோக்கிய பெரும் இராணுவ வலிந்து தாக்குதல் தோல்வியடைந்தது. புலிகள் சிறீலங்கா சர்வதேச விமானநிலையத்தினை தாக்கிச் சேதப்படுத்தினார்கள். புலிகள் ஐதேக பேச்சுக்களை ஆரம்பித்தனர். புலிகளுடனான பேச்சுக்கள் என்ற பிரகடனத்துடன் தேர்தலில் பங்கேற்ற ஐதேக தலைமையிலான கூட்டணி சிறிய பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. நான்கு தமிழ் கட்சிகள் தமிழ்தேசியக் கூட்டமைப்பினை தோறறுவித்து, புலிகளை தமிழ்பிரதிகள் என முன்னிறுத்தித் தேர்தலில் பெருவெற்றி பெற்றனர்.
புலிகள் போர்நிறுத்தலை வழங்கினார்கள். அரசு ஒப்புக்கொண்டது. நோர்வே பேச்சுக்கள் ஆரம்பமாகின.

# நோர்வே பேச்சுக்கள் 2002-2005

**2002 :** புலிகளும் அரசாங்கமும் 22 பெப்.2002ல் போர்நிறுத்தல் உடன்பாட்டில் கைச்சாத்திட்டது. வன்னி மீதான பொருளாதாரத்தடை நீக்கப்பட்டு,யாழ்ப்பாணத்திற்கான ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டது. புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு நோர்வே அனுசரணையுடனான பேச்சுக்கள் ஆரம்பமாகின. அரசு இடைக்கால நிர்வாக யோசனைகளை நிராகரித்தது. மேலும், சர்வதேச மீள்கட்டுமான உதவிகளை இணைந்து பயன்படுத்த உடன்பட்டது. நவம்பரில் மூன்றில் முதலாவதான கொடையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். டிசம்பரில் புலிகளும், அரசாங்கமும் கூட்டாட்சி முறையினை முயற்சித்துப் பார்க்க உடன்பட்டனர் - ஒஸ்லோ பிரகடனம்.

**2003:** பேச்சுவார்த்தைகளின் முரண்பாடுகள் அதிகரித்தன. மனிதாபிமான சிக்கல்கள் அரசினால் புறக்கணிக்கப்படுவதாகவும், இராணுவம் போர்நிறுத்தல் உடன்பாட்டின் இயல்புபடுத்தல் விடயங்களை அமுல்படுத்த மறுப்பதாகவும், இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறுவது தடுக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியது.
கடற்படை புலிகளின் கப்பலை ஆயுதம் கடத்துவதாகக் கூறித் தாக்கி மூழ்கடித்தனர். புலிகளுக்கும், இராணுவத்துணைக்குழுக்களுக்குமிடையே தாழ்வான மோதல் சுழற்சிகள் ஆரம்பமாகின. புலிகள் வாசிங்டன் கூட்டத்திற்குப் புறக்கணிக்கப்பட்டமை மற்றும் மனிதாபிமானச் சிக்கல்களைக் காரணம் காட்டி பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக வெளியேறினார்கள். புலிகள் 3வது டோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற மறுத்தனர். கொடையாளர்கள் 4.5பில்லியன் டொலர்கள் வாக்குறுதிகளுடனான டோக்கியோ பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர். வடக்குக்கிழக்கிற்கான உதவி (15சதவீதம்) கூட்டாட்சியுடனான நிபந்தனை முன்னெடுப்புடன் வழங்கப்பட்டது.
புலிகள் இடைக்கால நிர்வாகத்திற்கான புதிய பேச்சுக்களைக் கோரியதுடன் தமது இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை யோசனைகளை முன்வைத்தனர். சனாஜூதிபதி சந்திரிகா 3 அமைச்சுக்களை தெளிவின்மை என்கின்ற காரணத்தினைக் காட்டி வசப்படுத்தியது. நோர்வே தற்காலிகமாக வெளியேறியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**2004:** சனாதிபதி சந்திரிகா பாரளுமன்றத்தினை கலைத்துத் தேர்தல்களை நடாத்தினார். அவரது சுதந்திரக்-கட்சிக் கூட்டணி ஐதேக தோற்கடித்தது. தமிழ்தேசியக் கூட்டமைப்பு இடைக்கால தன்னாட்சிசபை யோசனைகளை முன்வைத்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றது. புலிகளின் கிழக்குத்தளபதி தலைமைக்கு எதிராகக் கலகம் செய்தார். இந்தக் கலகம் 6 வாரங்களில் அடக்கப்பட்டது. கருணா இராணுவத்துடன் இணைந்து கொண்டான். புலிகளுக்கும், இராணுவத்துணைக்குழுக்களுக்குமிடையே நிழல்போர் ஆரம்பமாகியது.
நோர்வே பேச்சுக்களின் அனுசரணை முயற்சிகளை ஆரம்பித்தது. நிகழ்ச்சித்திட்டம் பற்றிய குழப்பத்தால் அது இடையில் தங்கிநின்றது. சுனாமி வடக்குக்கிழக்கு தெற்குக் கரையோரங்களைத் தாக்கியது. 30000 மக்கள், தலா 10000 தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் என்ற அடிப்படையில் கொல்லப்பட்டனர்.
**2005:** சர்வதேச சமூகம் சுனாமிக்கு பெருமளவு உதவிகளுக்கு உடன்பட்டது. கொடையாளிகள் இருதரப்பினையும் பொதுஉடன்பாட்டிற்குள் வரும்படி கேட்டனர். 6மாதப் பேச்சுக்களின் பின்னர் சுனாமிக்குப் பிற்பட்ட நடவடிக்கைகளுக்கான கட்டமைப்பு (பீடொம்ஸ்) கைச்சாத்திடப்பட்டது. ஆனால் சட்டபூர்வத்தன்மை உச்சநீதிமன்றத்தில் சிங்கள தேசியவாதிகளின் வெற்றிகரமான வழக்கினால் தீர்மானிக்கப்பட்டது. நிழல்போர் தொடர்ந்தது. வெளிவிவகார அமைச்சர் கொல்லப்பட்டார். பாரளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் கொல்லப்பட்டார். சிங்கள தேசியவாத பிரகடனத்தின் கீழ் மகிந்த ராஜபக்ச சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார.

## மீண்ட மோதுகை 2006-2008

**2006 :** நோர்வே ஜெனீவா பேச்சுக்களை ஏற்பாடு செய்தது. இருதரப்பும் போர்நிறுத்தல் உடன்பாட்டிற்கு உறுதி தெரிவித்த போதும் வன்முறை பெருகியது. ஏப்பிரலில் தற்கொடை குண்டுதாரி சிறீலங்கா இராணுவத் தளபதியினை குறிவைத்தார். சிறீலங்கா சம்பூர்மீதான குண்டுவீச்சுக்கள் மூலம் பதிலளித்தது. 43000 மக்கள் வெளியேறினார்கள். கனடாவும், ஐரோப்பிய ஒன்றியமும் புலிகளுக்குத் தடை விதித்தது. பெரும்மோதல் யூலைக் கடைசியில் கிழக்கில் தொடங்கி வடக்கிற்கும் பரவியது. இருதரப்பும் வெற்றியற்ற வலிந்து தாக்குதல்களைச் செய்தனர். ஏ-9 பாதை மூடப்பட்டது. யாழ். தனிமைப்படுத்தப்பட்டது. ஜெனீவாவில் இடம்பெற்ற 2வது சுற்றுப்பேச்சுக்கள் தோல்வியுற்றன. அரசாங்கம் வடக்குக்கிழக்கினைப் பிரித்தது. 1987 இந்திய-லங்கா உடன்பாட்டிற்கு அமைய இவை இணைக்கப்பட்டிருந்தன.

**2007:** அரசாங்கம் படையெடுப்பினை மும்முரப்படுத்தியது. யூலையில் கிழக்கினை விடுவித்ததாக அறிவித்தது. புலிகள் விமானப்படையினை அறிமுகப்படுத்தினார்கள். 3 தாக்குதல்கள் கொழும்புமீது நடத்தப்பட்டது. ஒக்டோபரில் அனுராதபுர இராணுவத்தளம் புலிகளின் விமானப்படையால் தாக்கப்பட்டது. புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளரும், அரசியல்துறைப் பொறுப்பாளருமான சுப.தமிழ்செல்வன் சிறீலங்கா விமானப்படைத்தாக்குதலால் கொல்லப்பட்டார்.

**2008:** அரசாங்கம் 2002 போர்நிறுத்தல் உடன்பாட்டினை முறித்தது. முழு அளவிலான யுத்தம் ஆரம்பமாகியது.

www.tamilarangam.net

# எழுதுபவர்கள் பற்றிய குறிப்பு

**சுதாகரன் நடராஜா** லண்டன் பல்கலைக்கழகத்தின் தூரகிழக்கு மற்றும் ஆபிரிக்க கற்கைக்கான கல்லூரியின் சர்வதேச கற்கைக்கும் அரசியலுக்குமான பீடத்தில் கலாநிதி பட்டப்படிப்பினை மேற்கொள்ளுபவர். அவர் சிறீலங்கா மோதுகையும் - அண்மைய சமாதான முயற்சிகளைகளும் கற்கைக்கான விடயமாக தேர்வுசெய்து, எவ்வாறு சர்வதேச சமூகம் சர்வதேச ஒழுங்குகிற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை உலகளாவிய பாதுகாப்பு, அபிவிருத்தி, தாராளவாத ஆட்சிமுறை என்பன கொண்ட வடிவில் கையாள்கின்றது என்பதைப் பரிசோதிக்கின்றது. சிறீலங்காவினையும், புலிகளையும் பத்துவருடங்களுக்கு மேலாக கற்று வருவதுடன் தனது கலாநிதிப் படிப்பிற்கான ஆய்வின் பகுதியாக பலவற்றைப் பிரசுரித்துமுள்ளார். இவர் சர்வதேச கற்கை மற்றும் இராஜதந்திரத்தில் முதுகலை பட்டதாரியாவார்.

**லக்சி விமலராஜா** அமைதிக்கு ஆதரவுதரும் பேர்கோவ் பவுண்டேசனினால் முன்னெடுக்கப்படும் சிறீலங்காவின் மோதுகை மாற்றுநிலைப்படுத்தல் திட்டத்தின் மூத்த நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராவார். 2003 முதல் கொழும்பில் தங்கியிருந்து, கடந்த ஐந்து வருடங்களாக மோதுகை கற்கை மற்றும் மாற்றுநிலைப்படுத்தலின் வளவலையமைவில் (சுஊேளுவு) பணியாற்றுகின்றார். இது தடம் 1.5 -2 எனப்படும் மாற்றுநிலைப்படுத்தல் திட்டமாகும். இவர் இத்திட்டத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் மதிப்பிடல் பொறுப்பாளராகவும் உள்ளார். மேலும், சிறீலங்கா மற்றும் புலத்துத் தமிழ் பங்குதாரர்களிற்கு பணித்திட்டங்களை முன்னெடுப்பவராகவுள்ளார். லக்சி நேபாலிலும் பணியாற்றியுள்ளார். மேலும், பெண்கள் மற்றும் அமைதியை கட்டியெழுப்பலுடன் தொடர்புபட்ட திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளார். இவரது கற்கைசார் ஆர்வமானது முறைமைவகை கோட்பாடு - நடைமுறை மற்றும் ஆழவேரூன்றிய இனத்துவ அரசியல் மற்றும் சமச்சீரற்ற மோதுகைகளினை மாற்றீடு செய்வதற்கான முறைகளில் உள்ளது. இவர் பேர்லின் பீரி பல்கலைக்கழகத்தின் அரசியல்விஞ்ஞான முதுகலைப் பட்டதாரியாவார்.

***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்